# வெற்றிக்கு வலிகள் தேவை

வள்ளியம்மை சுப்பிரமணியம்

தேசிய கலை இலக்கியப் பேரவை

**வெற்றிக்கு வலிகள் தேவை** (கவிதைகளும் கதைகளும்)
**வள்ளியம்மை சுப்பிரமணியம்**

முதற்பதிப்பு : நவம்பர் 2019
தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் 30வது ஆண்டு நினைவாக
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
முகவரி : சத்தியமனை, சுழிபுரம்
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை
இல: 62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில்
நூல் வடிவமைப்பு : சிவ பரதன்
அச்சாக்கம் : ஜே.எஸ். பிறின்ரேஸ், சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு
**விலை : ரூ 200/=**

Vettikku valikal thevai (Poems and stories)
Valliammai Subramaniam

First Published : November 2019
Comrade K. A. Subramaniam's 30th memorial
Copy Right : Author
Address : Sathia Manai, Chulipuram
E.mail/face book : valli1938@gmail.com
Website : sathiamanai.blogspot.com
Whatsapp : +94750555333
T.P : +94750555333
By Desiya Kalai Ilakkiya Peravai
NO: 62, Kokkuvil Junction, K.K.S Road, Kokkuvil
Layout : Siva Parathan
Printed by : J. S. Printers, Sillalai Road, Pandetherppu
**Price : Rs 200/=**
**ISPN NO:**

# என்னுரை

பாடசாலைக் காலங்களின் விழாக்களுக்காக கதைகள் கட்டுரைகள், சிறு கதைகள் என எழுதியவை படலை வளவுடன் நின்றுவிட்டது. பின் என் பண்டிதருக்கான கல்வியைத் தொடர்ந்த காலத்தில் சில கதைகள், கவிதைகள் எழுதினேன்.

வீரகேசரியிலும் கலைமதியிலும், கலைச்செல்வி, ஜனசக்தியிலும் வந்தது. திருமணத்தின் பின் மனைவியாய், தாயாய் அத்துடன் என் ஆசிரிய வேலை என நேரம் என்னை நிரப்பியது. என் தோழர் விடைபெற்ற பின்னர் இளைய மகனுடன் சிங்கப்பூர் சென்றேன். கணவரதும், மூத்த மகனதும் இழப்பு என்னை நொருக்கிப் போட்டது. அந்த நேரத்தில் அங்கே வசித்த சந்திரா என்ற மகளைப் போன்றவர் தந்த ஊக்கமும், என் மகனின் ஒத்துழைப்பும் மீண்டும் எழுதவும், இயங்கவும் வைத்தது. கவிமாலை'க் குடும்பம் என்னைத் தாயாகச் சுவீகரித்தது.

எழுதினேன், பேசினேன், வாதாடினேன், பாடினேன்… மறக்க முடியாத நாட்கள். அங்கு கிடைத்த விருதுகளுக்கும், பாராட்டுக் களுக்கும் நன்றிகள் பல.

வசந்தம் சஞ்சிகை வந்த காலத்திலிருந்து கட்சியுடனான இலக்கியப் பணிகளில் தோழருக்கு உதவியாக இருந்திருக்கிறேன். பின் ,'தாயகம்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கங்களை அவர் எழுதித் தர அதைப் பிரதி பண்ணிக் கொடுத்துதவியிருக்கிறேன். இருந்தும் முழுமையாக செயற்பட காலம் இடம் தரவில்லை. இதில் உள்ளவை பெரும்பாலும் நிஜத்துடன் கலந்தவையே! என்னளவில் வலி தரும் உணர்வு தான் இலக்கியமானது.

தேசிய கலை இலக்கியப் பேரவை அநேக முற்போக்குச் சிந்தையை வளர்க்கும் நூல்களை வெளியீடு செய்துள்ளது. ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து வெளியீடு செய்வதன் மூலம் அந்த நூல்கள் மக்களைச் சென்றடையும் இலகு தமிழில் அமை யவும் ஆவன செய்துள்ளது. வளர்ந்து வரும் புதிய சந்ததியை ஊக்குவிப்பதில் அக்கறை செலுத்தும் அதே நேரத்தில்... முதுமை அடைந்து வரும் புதுமை விரும்பிகளையும் கைவிடாது, அவர்களது ஒரு சில படைப்புக்களையும் சீரிய முறையில் வடிவமைத்து வெளியீடு செய்வதில் அக்கறை செலுத்துகிறது.

இப்படியான நற்செயல்களை செய்யும் போது, ஒரு சிலரின் கடும் விமர்சனத்திற்கும் ஆளாக வேண்டிய நிர்பந்தங்களையும் எதிர் நோக்குகின்றது. "காய்த்த மரம் கல்லெறி படுவது" போன்ற நிகழ்வுகள் நடைபெற்றால் தானே... செயற்படுவது தடையின்றி நடக்கும். மென்மேலும் முன்நோக்கி வழி நடக்க உந்து சக்தி பிறக்கும்.

எனது இந்த நூலில் உள்ள கருத்துப்பிழை, எழுத்துப் பிழைகளை ஊடுருவிப் பார்த்து... சகல கைங்கரியங்களையும் அக்கறையுடன் நிறைவேற்றி வைத்தமைக்கு அருமை மகன் பகீரதனுக்கு மிக்க நன்றி. மற்றும் உருவாக்கிய அச்சகத்தினருக்கும், எங்கள் தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்கும் எங்கள் 'சத்தியமனை'க்கும் நன்றி' என்ற மூன்று எழுத்துக்களில் அடக்கி விட முடியாது. இருந்தும் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் முப்பதாவது நினைவுநாளில் இதனை வெளியிடுவதில் காட்டிய சிரத்தைக்கு நன்றிகள்.

உங்களுள் ஒருவராக...

**வள்ளியம்மை சுப்பிரமணியம்.**
'சத்தியமனை'
சுழிபுரம்
இலங்கை

# இந்நூல் தந்த வள்ளியம்மை

**எ**ங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய வள்ளியம்மை சுப்பிரமணியம் 81வது வயதில் முதுமையடைந்து உடல் தளர்ந்த நிலையில் இருந்து வருகிறார். இருப்பினும் அவர் மன உறுதி யோடும் மகிழ்வோடும் நினைவாற்றல் மங்காதும் இருந்து வருவது மகிழ்ச்சி தருவதாகும். அவர், எமது கட்சியின் வழிகாட்டியாகவும் தலைமைத் தோழராகவும் பொதுவுடமைக் கொள்கையின் நிலைப் பாட்டில் உழைக்கும மக்களோடும் ஒடுக்கப்படுவோரோடும் வாழ்ந்து செயலாற்றி மறைந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் வாழ்க் கைத் துணைவியாவார். தனது வாழ்க்கைத் துணைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொதுவுடைமைக் கருத்துக்களாலும் சமூக அக்கறையாலும் நடைமுறை வாழ்வனுபவத்தாலும் தனது எழுத் தாற்றலை விரிவுபடுத்திக்கொண்டவர். அவ்வப்போது எழுதிவந் தவற்றிலிருந்து சிலவற்றைத் தொகுத்து ‘வெற்றிக்கு வலிகள் தேவை’ என்னும் இந்நூல் வெளியிடப்படுகிறது. இங்கே தரப்பட்டுள்ள கவிதைகள், சம்பவக் கதைகள் ஒவ்வொன்றும் அவரது வாழ்க்கை அனுபவங்களில் இருந்து பிறந்தவையாகும்.

வள்ளியம்மை சுப்பிரமணியம் தம்பதிகள் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள். இறுதிவரை இணைபிரியாது குடும்ப வாழ்வை முன்னெடுப்போம் என்னும் திடசங்கற்பத்துடன் அரிவாள் சம்மட்டியைத் தாலியாகக் கொண்டு குடும்ப வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தவர்கள். பழைமைவாதத் தமிழ்ச்சூழல் விதித்த படிநிலைகளைத் தாண்டி அகமணச் சூழலைப் புறம்தள்ளி பொதுவுடைமை இலட்சியத்தின் அடிப்படையிலான குடும்ப வாழ்வை நிலைப்படுத்தி முன்னெடுத்தவர்கள். அதனால் ஏற்பட்ட தடைகள், நெருக்கடிகள், துன்பதுயரங்கள், வசையாடல்கள் யாவற்றையும் தாண்டி மக்களையும் தோழர்களையும் உறவாகக் கொண்டு குடும்பப் பயணத்தை மேற்கொண்டவர்கள். மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்து இலட்சிய வாழ்வுக்கு முன்னு தாரணமாக வாழ்ந்து காட்டியவர்கள்.

நமது சமூகக் கட்டமைப்பில் சிந்தனை செயல் யாவுமே பழைமைவாதம் தழுவியவையாகும். அவற்றில் பெண்கள் பற்றிய சிந்தனையும் நடைமுறைகளும் அவர்களை இரண்டாம் தரநிலை வைத்தே நோக்கப்படுகிறது. அதிலும் உழைக்கும் பெண்கள் மேற்கூறியவற்றுடன் மேலும் பலசுமைகளைச் சுமந்து செல்பவர் களாகவே இருந்து வருகிறார்கள். வெளியே உழைப்புச் சுமை,

உள்ளே வீட்டுச்சுமை. குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் சுமை என நீண்டு செல்வதைக் காணலாம். வள்ளியம்மை பெற்றோருக்கு மகளாக, கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக, மூன்று பிள்ளைகளுக்குத் தாயாக, மாணவர்களுக்கு ஆசிரியையாக, பொதுவாழ்வில் ஈடுபட்டோருக்கு சகோதரியாக, நீண்ட வாழ்பனு பவங்களைக் கொண்டவர்.

அவர் உழைக்கும் பெண்களில் ஒருவராக இருந்து அரச நெசவு ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அவரது மாத வருமானத் திலேயே அவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. தோழர் மணியம் காதலிப்பதற்கும் கல்யாணம் செய்வதற்கும் முன்பிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர அரசியல் ஊழியராகப் பணியாற்றி வந்தவர். அதனை நன்கறிந்தே வள்ளியம்மை காதலித்தார். கரம் பிடித்தார். கட்சி வழங்கிய சிறு தொகைக் கொடுப்பனவு குடும்ப வாழ்வுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே வள்ளியம் மையின் மட்டுமட்டான மாதச் சம்பளமே குடும்பத்திற்கான அடி ஆதாரமாய் இருந்தது. அதனால் வீட்டில் இல்லாமை, போதாமை, கடன் மாறுதல் என்பன நாளாந்த வாழ்வில் இடம்பெற்று வந்தன. இதையெல்லாம் தாங்கிக்கொள்ளும் தாயாகவே வள்ளியம்மை வாழ்ந்துவந்தார்.

சராசரி உழைக்கும் பெண்கள் எத்தனை சுமைகள், சோதனைகள், வேதனைகளைச் சந்தித்துவரும் இன்றைய சமூக அமைப்புச் சூழலில் ஒரு நேர்மையான கம்யூனிஸ்டாகவும் கட்சியின் முழுநேர அரசியல் ஊழியராகவும் செயற்பட்டு வந்த வரின் மனைவி எவ்வாறான சுமைகளைத் தாங்கி வந்தார் என்பதை சொற்களில் எடுத்துக் கூறுவது கடினமாகும். பிற்காலத்தில் பிள்ளை களாலும் பேரப்பிள்ளைகளாலும் ஆறுதலும் அரவணைப்பும் பெற்றிருப்பினும் அவரது அர்ப்பணிப்பு மிக்க குடும்ப வாழ்வுக்கும் தியாகத்திற்கும் அவை ஈடாகாது.

எனது கம்யூனிஸ்ட் கட்சித் தொடர்பும் பிரவேசமும் 1963–64 காலகட்டத்தில் ஆரம்பித்தது. அந்தக் காலத்தில் தோழர் மணியம் பழைய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து வந்து தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் செயற்பட ஆரம்பித்த புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத் தோழர்களில் ஒருவராகவும் வாலிபர் இயக்கத்தின் வடபிராந்தியச் செயலாளராகவும் செயற் பட்டுவந்தார். அதனால் அவருடனான தொடர்பும் தோழமை உறவும் குடும்ப உறவாகவும் மாறிக்கொண்டது. அன்றிலிருந்து கட்சிப்பணி பொதுவாழ்வு குடும்ப உறவு என்பவற்றுக்கிடையிலான

சமநிலைப் போக்கு நிலவிவந்ததைத் தோழர் மணியத்தின் குடும்பத்தில் காண முடிந்தது. வள்ளியம்மை அவர்கள் தோழர் மணியத்தோடு இணைந்து முன்னெடுத்துவந்த வாழ்வு முறை ஒரு முன்னுதாரணம் கொண்டதாகவே அமைந்திருந்தது.

அவர் பன்முக நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர் கொண்ட போதும் பொறுமையாகவும் நிதானமாகவும் யாவற்றையும் தாங்குபவராகவும் இருந்து வந்தார். துயரங்கள், சுமைகள் மத்தியிலும் அவரிடமிருந்து கடும் சொற்கள் வந்ததையோ, ஏன் இத்தகைய குடும்ப வாழ்வுக்குள் வந்தேன் என்னும் கழிவிரக்க வார்த்தைகள் கூறப்பட்டதையோ நான் கேட்டதுமில்லை, அறிந்த துமில்லை. அவர் கணவனோடும் பிள்ளைகளோடும் சீறிச்சினந்து கோபப்பட்டுக் கொண்ட சந்தர்ப்பங்களைக் கண்டதில்லை. அவர் களது வீட்டிற்குச் செல்லும் தோழர்களையும் நண்பர்களையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அனுப்பும் பண்பினை வள்ளியம்மை கொண்டிருந்தார். அவரது பிள்ளைகளையும் அவ்வாறே பழக்கப்படுத்தி வந்தார்.

அவர் கட்சியின் நெருக்கமான தோழர்களின் குடும்பங்க ளோடு பழகியும் அவர்களது சுகநலன்களை விசாரித்தறிவதிலும் அக்கறை காட்டி வந்ததிலும் அவரது பரந்த உள்ளத்தைக் காணமுடியும். இன்று முதுமையடைந்து உடல் தளர்ந்த நிலையிலும் அவரது இன்முகமும் அன்பான வரவேற்பும் மறதியற்ற பழைய நினைவுகள் கொண்டவராக இருந்து வருகின்றமை ஒரு உறுதிமிக்க கொம்யூனிஸ்ட் தோழரின் வாழ்க்கைத் துணைவிக்குரிய தகுதியையும் பெருமையையும் வள்ளியம்மை தாங்கி நிற்கிறார். அவரது வாழ்வும் செயலும் முன்னுதாரணம் கொண்டவையாகும்.

வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் வாழ்வனுபவங்கள் சிலவற்றையே இந்நூலின் கவிதைகளும் கதைகளும் வெளிப் படுத்துகின்றன. தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 30வது நினைவுநாளில் இதனை வெளியிடுவதற்கு முன்நின்ற அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் நன்றிக்குரியவர்கள். சகோதரி வள்ளியம்மை சுப்பிரமணியம் உடல்நலத்துடன் வாழ வாழ்த்துக்கள்.

நன்றி

**சி. கா. செந்திவேல்**

**பொதுச் செயலாளர்**

**புதிய ஜனநாயக மாக்சிய லெனினிசக் கட்சி**

24.11.2019

# பதிப்பும் பகிர்வும்

**தே**சிய கலை இலக்கியப் பேரவை கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், சிறுவர் பாடல் எனப் பல்வேறுபட்ட நூல்களை இதுவரை வெளியிட்டு வந்துள்ளது. "வெற்றிக்கு வலிகள் தேவை" என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் ஒரு போராளியுடன் இல்வாழ்வில் இணைந்து பயணித்த துணைவியார் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் அனுபவ உணர்வுகளின் வெளிப்பாடாக கவிதை, சிறுகதை வடிவங்கள் கலந்த நூலுருவாக வெளிவருகிறது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கத்திலும் அதன் இலக்கியச் சஞ்சிகையான "தாயகம்" இலக்கிய இதழின் வருகையிலும் சிறப்பான பங்களிப்பை ஆற்றியதுடன் 'தாயகம்' ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்து, அதன் சார்பில் தூரநோக்கும், தெளிவும் நிறைந்த ஆசிரியர் தலையங்கங்களை எழுதியவருமான தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் துணைவியார் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் படைப்பாக இந்நூல் வெளிவருவது சிறப்பானதாகும்.

பொதுவுடமை அமைப்பை தோற்றுவிக்கும் அரசியலை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டதுடன் அதற்காக முழுநேர ஊழியராக பல்வேறு நெருக்கடிகளையும் ஏற்றுப் பயணித்தவர் அவர். வடபகுதியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டத்தை முன்னின்று நடத்துவதில் பெரும்பங்கை வகித்திருந்தார். இதனால் அவர் எதிர்கொண்ட பல்வேறு எதிர்ப்புக்கள், நெருக்கடிகள் யாவற்றிலும் மனம் தளராத இல்லத் தலைவியாக, துணைவியாக இருந்து மக்கள் விடுதலைக்கு தனது பங்களிப்பை நல்கிய திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் இந்நூல் இத்தகைய போராட்டங்களில் பெண்களின் உறுதியான வகிபாகத்தை

வெளிப்படுத்தி நிற்கிறது. இன்றும் மக்கள் விடுதலைக்கான அரசியலில் பங்கேற்கும் இன்றைய தலைமுறையினருக்கு பயனுள்ள நூலாக இது அமைகிறது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக இந்நூலை வெளியிட முன்வந்த திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இந்நூலை வெளியிடுவதில் தேசிய கலை இலக்கியப் பேரவை மனநிறைவு கொள்கிறது.

**தேசிய கலை இலக்கியப் பேரவை**

**இல: 62, கே.கே.எஸ் வீதி,**
**கொக்குவில் சந்தி,**
**கொக்குவில்**

# உள்ளடக்கம்

**கவிதைகள்**

நான் 01
அரிவாள் சம்மட்டி 02
இயங்க வைக்க இனிய பூட்டக் குழந்தை 03
நிலை 04
மேதினம் 05
மலையகம் 06
கார்த்திகையின் கைவிரிப்பு 07
பாரதி 08
தாய்க்குலத்தை ஊக்குவிக்கும் பூமி 09
வரலாறு படைத்தவரே! 10
மெய்கண்டான் மகா வித்தியாலயம் 11
இன்னும் கொஞ்சம் 12
கவிமாலைக்குடும்பச் சுற்றுலாவின் போது 13
நிழல் தேடும் சூரியன் 14
சிங்கையில் தீபாவளி 15
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு 16
தொட்டில் 17
செம்மொழியாம் தமிழ் மொழி 18
அதுமட்டும் வேண்டாம் 19
மகிழ்வாரே 20
வன்முறை அற்ற இலங்கைத் தாய் 21
அமைதிப் பாட்டு 23
திசையறியும் பறவைகள் 24
பெண்ணின் பெருமை 25
சிங்கையில் சித்திரையின் பூக்களும் பழங்களும் 26
கடலில் சிந்திய எண்ணெய்... 27
அன்னையர் தினத்திலே... 28

நோன்புப் பெருநாள் வாழ்த்து 29
நான் பிறந்த நாடு 31
மானிடத்தின் மகிழ்வில் உணர்வு கொள்வாய்! 32
இடம்விட்டு இடம்... 33
குப்பைத் தொட்டி 34
பெருவிரைவு ரயில்களில் பயணம் 35
என் மகனை நினைவு கூர்ந்து 36
ஏணியும் தோணியும் 37
யாருக்கு விருது? 38
மேதினமே... 39
நகைச்சுவை 40
நாளைய நகரம் 41
நிழல்தேடும் மரமாக நிலவுரிமைப் பிறப்புக்கள்! 43
என்னருகே நீ இருந்தால்... 44
முள்மகுடம் 45
மணல் வீடு 46
பகலில் தோன்றும் நிலவு 47
கற்றுத் தரும் காடு 48
ரணங்கள் ஆறவில்லை 49
இற்றைவரை சத்தியமனை தாஜ்மஹால் தானெமக்கு! 50
மணியம் என்றால் மனிதம் 51
மணியம் ஒரு மானிட அரும்பூ 52
கார்த்திகை விளக்கீடு ஒரு நினைவு 54
பெரியாரின் வாழ்வில்... 55
விடைபெறும் நேரத்தில் 57
மூத்த கவிஞன் முருகையன் 58
காஞ்சித் தலைவன் 59
கவிமாலை புனலிலே நன்னீர் 60
டிசம்பர் பூ 61
மாணவனாய்... ஆசிரியராய்.. 62
சுதந்திரத்திற்காய்... 63
புதிய வீட்டிற்கு வாழ்த்து 65
சமூக சேவகி 66

பேறுபெற்ற ஆசிரியை 67
மெல்பேர்ன் மணியின்– கவிதைப்பூங்கா 68
மெல்பேர்ன் மணியின் சந்தக் கவிதைகட்குச் சிந்தையால் வாழ்த்துக்கள் 69
கவிதையில் சிங்கப்பூர் 71
நாலின மக்கள் கூடி வாழ 72
இராம. வயிரவன்– கவிதைக் குழந்தைகள் 73

**உரைநடையில்**

அரிவாளும் சம்மட்டியும் தாலி 74
ஜனாதிபதிக்கு சிங்களத்தில் கடிதம் 76

**பிள்ளைகள் வடித்தவை**

சிறையிலிருந்து என்மகன் எழுதிய திருமண வாழ்த்து 77
அம்மா 78

**தாய்+தாய் சிறுகதைகள்**

பிரசவித்தாய் 82
செத்துப்பிழைத்தாய் 86
ஊகித்து உணர்ந்தாய் 89
வளர்த்தெடுத்தாய் 92
என் தொழிலைக் காத்து உன் தொழிலை இழந்தாய் 95
அன்புடன் உணவளித்தாய் 98
வீரமாய் எழுந்தாய் 101
பாதை திறக்க வழிவகுத்தாய் 105
உயிரைக் காத்தாய் 109
உயிர் காக்கத் துணிந்தாய் 112
பராமரித்தாய் 115



# நான்

**எ**ன்னை ஒரேவரியில் எளிதாகச் சொல்லிவிட
அன்னை தெரசா அம்மையார் போல்
நான் நோயில் உழன்ற நொடித்தவரைக் காத்தேனா?
பாயில் விழுந்தோரைப் பராமரித்துப் பார்த்தேனா?

அன்புடன் தாய்மொழியும் அயராத கைவினையும்
என் இனிய மாணவிகள் காலில் நிற்பதற்குத்
தாய்போல் இருந்தவரின் தரத்தை உயர்த்திவிட்ட
காய்தல் உவத்தலில்லாக் கடமையுணர்வு உள்ளவள் நான்.

அம்மம்மா தன்னுடைய அகவை எழுபதிலும் தம்மால்
முடிந்தவரை தம் கேட்க வருவதைப் பார்
என்றே இளைஞர்கள் எழுச்சியுடன் ஓடிவர
அவர்கட்கும் நயமான கவிதை வரும்.

அமிழ்தெனக் காதினிலே அருவியாய்ப்
பொழிவதனால் தமிழ்க் கவிதை கேட்கையிலே
தலைவலியும் தெரிவதில்லை.

தமிழ்முரசு, சிங்கப்பூர், 04.08.2008

# அரிவாள் சம்மட்டி

**வி**வசாயி விளைவித்த கதிரறுக்க
அவசியமாய் விளங்குவது கூர் அரிவாள்

தொழிலாளி கையிலே தாங்குகிற
அழகான சம்மட்டி அவசியமே.

விவசாயி உணவை உற்பத்தி செய்தான்
தொழிலாளி ஆயுதங்களை ஆக்கித் தந்தான்.

நிலத்தை உழுகின்ற கலப்பை என்றால்
பலத்தைக் காட்டுவது சம்மட்டி வலிமை.

விவசாயி வாழ்வது தொழிலாளி துணையால்
தொழிலாளி வாழ்வது விவசாயி உணவால்

சாதம் இன்றேல் சாந்தம் ஏது?
சாதனம் இன்றேல் தொழிற்துறை ஏது?

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
வண்டி செய்தவர் வாழ்வை வழங்கினார்.

தொழிலாளி படைத்த்து ஆயுதம் என்றால்
விவசாயி தருவது அரும்பெரும் உணவே!

உலகம் வளர உழவும் தொழிலும்
கலகம் பிறக்க கைத்தொழிற் புரட்சி.

சாந்தி, சமாதானம் சமதர்ம வாழ்வு
மாந்தர்கள் மகிழ உழவும் தொழிலும்

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம் . (பாரதி)



# இயங்கவைத்த இனிய பூட்டக் குழந்தை

**சி**ன்னஞ் சிறு கண்மலர், செம்பவள வாய்மலர்
சிந்திடும் மலரே ஆராரோ.....
வண்ணத் தமிழ்ச் சோலையே மாணிக்க. மாலையே ஆரிரோ
ஆராரோ..... ஆரிரோ.... ஆராரோ...

என்னை உன்னிடம் இழுத்த வல்லமையே...
உன்னை என்மடியில் இருத்திய உறவுருவே....
அந்த நெருக்கத்தை என்னவென்று சொல்ல?
இந்த வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்?

அயலூரில் நான் இருந்த வேளையிலே...
அமிழ்தான செய்தி ஒன்று பறந்து வந்தது
ஆடி ஒன்றில் நீ உதித்தாய் என்று..
ஆடினேன் பாடினேன் கரைய அழுதேன்...

பூட்டி ஆனேன்... நான் பூட்டி ஆனேன்
என்னவர் மீண்டும் எனைத் தேடி வந்தாரோ
இந்தச் செல்வத்தை கட்டித் தழுவும் வாய்ப்பு
எந்தனுக்குக் கிடைக்குமா' என்றொரு ஏக்கம்..!

பாலகன் ஏசு பிறந்த அன்றே உனக்கு அரை வயசு
உன் பரிசம் உணர்ந்தேன் உன் பாதம் ஒற்றினேன்
உன் கைகள் குழைத்து என் கன்னம் தடவினேன்
போதுமையா... இப்பேரின்பம் போதுமையா!



# நிலை

முதுமை வந்து முதுகு கூன் ஆகிறது
மூத்தோர் மறைவு வெற்றிடம் ஆகிறது

வறுமை வந்தால் கௌரவம் வெறுமை ஆகிறது
பொறுமை இழந்தால் பூமியில் யுத்தம் வருகிறது.

பொறுப்பு அதிகரிக்க மனப்பாரம் பெருகிறது
வெறுப்பு வந்துவிட்டால் வேதனை வளர்கிறது.

குற்றம் காண முயன்றால் சுற்றம் அழிகிறது.
பற்றுப் பாசம் எல்லாம் பஞ்சாய்ப் பறக்கிறது

மன்னிக்கும் சுபாவம் வந்தால் மனம் லேசாகிறது
வன்செயல் அதிகரித்தால் உயிரழிவு மலிகிறது.



# மேதினம்

**வி**வசாயி தொழிலாளி வியர்வை சிந்தி
பயிரையும் தொழிலையும் பரவச் செய்தார்
தவறாத கடமையில் தம்மை உருக்கித்
தரணியைச் செழிக்கத் தக்கதாக்கி
கவிஞரும் புலவரும் செய்யவொண்ணா
காரியம் பற்பல ஆக்கி வைத்து
புவிவாழ சாதனைப் புதுமை செய்தார்
பூமியில் மேதினம் அவரால் வாழ்க!

# மலையகம்

பச்சைப் பசேல்' என்று கண்ணுக்கு குளிர்ச்சியும்
மெச்சும் தேயிலைச் செடிகளின் வளர்ச்சியும்
இச்சைப்படி பாடிப் பறக்கும் குருவிகளும்
தைத்து விரித்த கம்பளக் கவர்ச்சியும்
வைத்தகண் வாங்காது ரசிக்கும் முகங்களும்
கையளவு மலர்ந்த சூரிய காந்திகளும்
தையல்கள் தோழில் தேயிலைக் கூடையும்
மெய்யான காட்சிகள் மலையக மண்ணிலே....!

தேயிலைக் கொழுந்துகளை பதனிடும் ஆலைகள்
வாயிருந்தும் அடங்கி சேவையாற்றும் தொழிலாளர்
காயவைக்கும் யந்திரத்தின் 'கட கட' ஓசைகளும்
சாயப் பட்டறைபோல் பற்பல நிறத்தில்
சேலை உடுத்திய தாய்க்குல முன்தாணையில்
காலை உதைத்த படி கண்உறங்கும் சிசுவும்
சாலை ஓரத்திலே வளர்ந்திருக்கும் புற்களும்
மாலைப் பொழுதில் மயக்கும் வான்வெளியும்....!

படிக்கும் குழந்தைகட்கு பள்ளிகள் ஆங்காங்கே
துடிப்பான இளைஞரகள் துள்ளுகிற மைதானம்
எடுப்பாக மிளிரும் உயர்மட்ட அதிகாரிகளின்
படிஏறிப் போகின்ற பலமாடி வீடுகளும்
குடிசையும் அல்லாத குடியிருப்பு ' லயன்' இல்லங்கள்
வடிகால் வழியே ஓடிவருகின்ற நன்நீரும்
அடிப்பதற்கு உதவுமென கங்காணி கைத்தடியும்
விடிவை நோக்கும் விழிமூடா கண்களும்.....!

மலையகம் இல்லையென்றால் மனதாலே உயர்ந்த
விலைபோகா நெஞ்சு கொண்ட விழுமிய தொழிலாள
தலைவர்கள், தோழர்கள், ஊழியர்கள் தொழிற் சங்கம்
கலைநிகழ்வுகள் மத்தியில் கல்வியின் செழிப்பும்
அலைபோல திரண்டு ஆர்ப்பரிக்கும் 'மே தின' ஊர்வலங்கள்
குலை தள்ளி நிற்கும் வாழைத்தோட்ட பசுமையும்
பல பல இயற்கை வனப்புகள் நிறைந்த லங்காவின்
சில வற்றை இங்கு சீர் தூக்கி பார்த்தோமே....

# கார்த்திகையின் கைவிரிப்பு

**கா**ர்த்திகையின் கைவிரிப்பு- காலனையும்
கட்டி அனணத்துக் கொண்டதா?
மானுட நேசத்தின் பசுந்தளிரை
பாதியில் பிரிந்து- கால் நூற்றாண்டு ஓடினவோ?
மணியம் என்றால் மனிதம் என்றும் ;
மடமை கொண்டோர்- கண்டஞ்சும்
மாவீரன் என்றும்
மார்தட்டி கொண்டோமே!
ஆதிக்க வெறியின் கயமையை- எதிர்த்து
அஞ்சாமையின் அர்த்தம் சொன்னவன்- நீ !
ஒடுக்குமுறையை துவம்சம் செய்தது- வரலாறே!
இரத்தம் தோய்ந்த வெண்கொடிக்கு- தான்தெரியும்
வெற்றிக்கு வலிகள் தேவை என்று!
உழைப்பாளியே தேசத்தின் உந்து சக்தி
பாட்டாளியே பார் ஆளவேண்டுமென
பால்ய வயதின்- பார்வையை
தேடிப் படித்த நூல்களும் தூண்ட
பொதுவுடமைக்குள் ஐக்கியமானாய்!
இரும்புக்கரம் கொண்டு
துப்பாக்கிகள்- கொடும் கொலை புரிய
நிதர்சனத்தின் நிஜம் புரியாது
மந்தையாக்கப்பட்ட மனித கூட்டத்தில்
மௌனம் காப்பரண் ஆகியது!
வரலாறுகள் திரிக்கப்பட்டாலும்
உன் வாழ்வின் நேர்மை
என்றோ வரலாறாகும்!
மானிட வாழ்வியலின் உன்னதத்திற்கான
உன் போராட்டத்தில்
நானும் எறும்பென இறும்பூதுகின்றேன்
நீளும் நினைவுகளும்
நீடிக்கும் கண்ணீருமாய் காலம் ஓட
மரணத்தின் எல்லைகளில்
வாழும் எனக்கு- உன் வாழ்வு ஓர்
உந்துசக்தியே!

# பாரதி

அந்நாளில் எம் ஈழத்தவர்கள் பலர் இலக்கியங்களை அவ்வப்போது வழங்கி இலக்கியத்தை மெருகூட்டியிருக்கிறார்கள்.
சின்னத்தம்பி புலவர், கனகசபைப்புலவர், சேனாதிராய முதலியார், மயில்வாகனப்புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், ஆறுமுகநாவலர் என இவர்கள் அனைவரும் செய்யுளாலான இலக்கியதைவழங்கி வலுவூட்டி இருக்கின்றார்கள். இருந்தும் , செய்யுளினால் ஆன கவிதை மரபை- எங்கள் பாரதி.... பாமரனும் புரியும் வண்ணமாய்ப் பலதைத் தந்துசென்றார்.
பாரதியார் பாடல்கள்.... வாழ்க்கையை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும் வழமையான ஆவல் தான். ஏனெனில், அவர் மானிடத்தை நேசித்த மகாகவியல்லவா?
“காணி நிலம், அதில் ஒரு மாளிகை கட்டித் தர வேண்டும்,
பத்துப் பன்னிரண்டு தென்னை மரம் பக்கத்திலே வேண்டும் ,
தென்னங் கீற்றினூடே நிலவொளி வரவேண்டும்,... பாட்டிசைக்க
பக்கத்திலே ஒரு பத்தினிப் பெண் வேண்டும். “....
அப்பாடி..... பா.....ரதியே......நீ ஒரு பா....மன் மதன் தானா? கவியே.....
தெளிவு என்று ஓர் பாரதியின் ஆழம்.

**எ**ல்லா மாகிக் கலந்து நிறைந்தபின்
ஏழைமை யுண்டோடா?-மனமே!
பொல்லாப் புழுவினிக் கொல்ல நினைத்தபின்
புத்தி மயக்க முண்டோ?
உள்ள தெலாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ?-மனமே!
வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா?
சித்தி னியல்பு மதன்பெருஞ் சக்தியின்
செய்கையுந் தேர்ந்துவிட்டால்,-மனமே!
எத்தனை கோடி இடர்வந்து சூழினும்
எண்ணஞ் சிறிது முண்டோ?
செய்க செயல்கள் சிவத்திடை நின்றெனத்
தேவ னுரைத் தனனே- மனமே!
பொய்கரு தாம லதன்வழி நிற்பவர்
பூதல மஞ்சுவரோ?
ஆன்ம வொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்
கச்ச முண்டோடா– மனமே?
தேன்மடை யிங்கு திறந்தது கண்டு
தேக்கித் திரிவமடா!

## தாய்க்குலத்தை ஊக்குவித்த பூமி.

ஐம்பது வயதிலே அரச சேவையிலே ஓய்வுபெற்ற பின்னர்
சிங்கப்பூரில் வசிக்கின்ற வாய்ப்பொன்று தொண்ணூறில்
எந்தனுக்குக் கிடைத்ததால் அந்தமண்ணில் வாழுகின்ற பேறாகச்
சொந்தமான நிரந்தரவாசத் தகுதியையும் பெற்றேனே!

பூர்வீக மக்களை மதிக்க தேசியகீதம் மலாய்மொழியில்...
ஆர்வமாக நான்கு இனமக்களும் அருகருகே வாழுகிறார்
ஆபத்து வேளையிலே ஓடிவந்து உதவுகின்ற அன்னாரின்
சேவைஉணர்வையும் பேறாகப் பெற்று மகிழ்ந்தேனே!

ஆங்கிலம் முதன்மையாக அவரவர் தாய்மொழிக்கு சமனான
தீங்கில்லா முன்னுரிமை நடைமுறையில் இருப்பதனால்...
மொழிச்சண்டை , ஏற்றத்தாழ்வு, இழிச்செயல்கள் கிடையாது
பழிபாவம் இல்லாது உழைக்கும் மக்களையும் பார்த்தேனே!

பேருந்து நிலையத்திலும், வைத்திய சாலையிலும் மக்களெலாம்
நேர்வரிசை பிடித்து நிற்கும் வழக்கத்தைத் கைக்கொண்டு ....
சட்டத்தை மதிக்கின்ற சன்மார்க்க நெறியில் வாழ்வதற்கு..
திட்டங்கள் வகுத்தோரின் தீர்க்கதரிசனம் வியந்தேனே!

வீடின்றித் தெருவோரம் தூங்குவாரில்லை பசியென்று யாசித்துப்
பாடுவாரில்லை உழைத்து உண்ணும் உறுதிபூண்ட மாந்தர்வாழும்
கண்ணியத்தைப் பார்த்த பின்னும் வாளாவிருக்க முடியவில்லை....
எண்ணியது எண்ணியாங் கெய்தலாம் சிங்கைமண்ணில்!

கவிஞர்களை வரவேற்கும் கவிமாலை, கவிச்சோலை....
புவியிலுள்ள இலக்கியங்கள் அறிவதற்கு இலக்கிய வட்டம் ...
நவில்கின்ற அறிவுபூர்வ கருத்துப் பட்டிமன்ற மேடைகள்.....
முகிழ்த்து விட்ட கருவூலங்களுள் என்னையும் இணைத்தேனே!

80 வயதினையுடைய கொழும்பு வள்ளியம்மை சுப்பிரமணியம் கவிதைகள்(மூத்தோரை முன்வைப்போம்)

ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தனது தொழிலையும் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொண்ட இவர், நீண்ட காலமாக சிங்கப்பூர் தேசத்திலும் வசித்திருக்கின்றார். தற்போது கொழும்பில் வசிக்கின்றார். கவிதை, சிறுகதை, கட்டுரை வரைதல் என பன்முக ஆளுமை கொண்டவர். தேசத்தின் பல்வேறு கலை சார்ந்த பணிகளோடு இணைந்து செயலாற்றும் இவர் சமூகம் சார்ந்த பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் வரைவு: யோ.புரட்சி



# வரலாறு படைத்தவரே!

**தூ**சுகூடத் துடைக்காமல் போகாது" என்ற
மாசில்லாத் தத்துவத்தை மாசேதுங் சொன்னாரே…
பாசிபோலப் படர்ந்து பிடித்த பழமைவாதத்தை
பேசிப்பேசி மனித நேயத்தைச் சிதைப்பவர்க்கு,,,
நேசிக்கும் பக்குவத்தை நித்தியத் தன்வாழ்வில்,,,
ஊசிமுனையில் நின்று உறுதியுடன் எவ்வுயிரும்
நாசப்படாமல் தோழமை அரவணைப்பில்…
நாமெல்லாம் இம்மண்ணில் வாழப்பிறந்தோம்" என்றார்.

வாழ்ந்தது பாதிக்காலம் வழங்கியது அறிவுரைகள்…
வீழ்ச்சி வந்துற்றபோதும் வீறுகொண்டு எழுந்து நின்று
ஆட்சியின் குறை நிறையைப் பேசியும் எழுதியும்…
மீட்சியொன்று வேண்டும் மனித குலத்திற்கென…
காட்சியாகத் தன்னில்லறத்தில் வறுமை வருத்தினாலும்…
கருத்துக்கள் சிதையாது கண்ணியத்துடன் வாழ்ந்து…
பாட்டாளி மக்களே பாராள வேண்டுமென்ற….
பாரபட்சமற்ற பக்குவத்தை உரைத்து நின்றார்.

இல்லறம் கூடத்தன் இலட்சியத்தைத் தடுக்காத
நல்லறமாக அமைய வேண்டுமெனத் தன்பாதம்
கல்லுமுள்ளுப் பாதைகளில் காலிடற வந்தாலும்…
தடைக்கற்கள் யாவும் படிக்கற்கள் என்றுணர்ந்து…
வல்லமைத் தோழர்களை வளர்த்தெடுக்க அவருள்ளே…
மெல்ல மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்தார்.
எல்லையற்ற பொதுவுடமை தத்துவத்தின் எடுத்துக்காட்டாய்….
வழுவாது வாழ்ந்து வரலாறு படைத்தவரே!



# மெய்கண்டான் மகா வித்தியாலயம்

**சொ**ல்விற்பன வும்அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அருளச் செய்த தாயே...!
வல்லமையுடன் தன்னம்பிக்கை வளர ஊக்கமும்
தொல்லைகளை வென்றிடும் திறனையும் தந்து
அல்லல் வந்துற்ற போதும் அயராது நிமிரென்று....
அல்லும் பகலும் அனவரதமும் பக்கத் துணைபோல...
வெல்லும் வழிவகைகள் வீரமுடன் அருளிய...'நீ
வெல்' என்ற நம்பிக்கையை விதைத்த தாயே....

பள்ளிக்கூட வாழ்க்கை திரும்ப வராதென்று...
அள்ளி அள்ளி அறிவை ஊட்டிய தாயே....
துள்ளி விளையாடவும், தூங்காது கற்கவும்
எள்ளளவு நேரமும் ஊக்கமாய் படிக்க வைத்த
வள்ளல் போல் வாழ்ந்த ஆசிரிய பெருந் தகைகள்...
"தள்ளிவிட்டு தரணியில் நீ... தலை நிமிர வேண்டும்" என்று
உள்ளத் தூய்மையுடன் ஊக்குவித்த ஆசான்களை...
கள்ளமற்ற கருணை உள்ளங்களை வளர்த்த தாயே....!

அயற்கிராமங்கள், ஆவலுடன் குழந்தைகள், வளர்ந்தவர்கள்
முயற்சித்து உன்னைச் சரண் அடைய முன்மாதிரியாய்...
தயக்கமின்றி அணைத்தாய், தாங்கி வழி வகுத்தாய்
பயனுள்ள பாடங்களை போதிக்கும் தகுதி பெற்றாய்
பகுத்தறிவும் பட்டறிவும் பாங்குடனே புகட்டி வைத்தாய்...
தொகுத்து... சமுகத்தில் சுடரொளி காட்ட வைத்தாய்
மிகைப்படுத்தி சொல்ல வில்லை... உண்மை இதுவென்ற
தகைமைக் குரியவளே... மெய்கண்டான் தமிழ்த் தாயே...!

2019



# இன்னும் கொஞ்சம்...

**பி**ஞ்சுக் கால்கள் இரண்டு என்னருகில் வந்துநின்று
"பெஞ்சின்" மேலே ஏறித்துள்ளிக் குதிக்கிறது.
அஞ்சியபடி என்கைகளைப் பிடிக்க
அஞ்சுவருடம் முந்தி அயல்நாடு போன பேரன்...
கொஞ்சி விளையாடிக் கும்மாளம் போட்ட என் பேரா!
வஞ்சித்த கால நினைவு - எனதிதயம் அழுத்த
கனத்த கண்ணீர் வழிந்து கன்னம் நனைக்க
தனித்திருந்த என்னருகில் - துள்ளலும், கெஞ்சலுமாய்
பனி துடைத்த ரோசா ஒன்று - தன்
பிஞ்சு மென்விரலால் எனைப் பரிகசிக்க...
என்னை மறந்தேன் - என்னருமைக் குழந்தாய்!
இன்னும் கொஞ்சம் என்னுடனே இருப்பாயா?

# கவிமாலைக் குடும்பச் சுற்றுலாவின்போது...

**எ**ல்லோரும் சேரவேண்டும்—சிங்கையில்
நல்லோர்கள் இணைய வேண்டும்
கவிமாலைக் குடும்பங்கள் நாம்– இங்கே
கவிபாடி மகிழவேண்டும்,
–எல்லோரும்

பிச்சினிக் காடார் பெருமை வேண்டும்—முன்னோடியை
மெச்சினாம் நினைக்க வேண்டும்
ஆசியான் கவி ஆசி வேண்டும்—அவரது
தேன்கவியில் திழைக்க வேண்டும்.
–எல்லோரும்

புதுமைத் தேனீ ஊக்கம் வேண்டும்—நமக்கு
கவிதை நதி ஊற்றும் வேண்டும்
சத்தியத்தின் உறுதி வேண்டும்— அதை
நித்தம்நாம் காக்க வேண்டும்.
–எல்லோரும்


இயலாமை என்றொரு சொல்—நம்மிடையே
சுயமாக மறைந்து போச்சுதே...
முயலாமை என்றொரு சொல்– நமக்குள்
முயற்சிகளாய் மாறி விட்டதே.
–எல்லோரும்

தமிழ்காக்க உழைக்க வேண்டும்—கவிதையின்
புகழ்எங்கும் மணக்க வேண்டும்
புதுமையான கருத்தும் வேண்டும்—நமக்குள்
கவிதைப் புனல் பெருக்கும் வேண்டும்
–எல்லோரும்

சொல்லோட்டம் சுவைக்க வேண்டும்—நமக்குள்
நல்லோட்டம் நயக்க வேண்டும்
தள்ளாமை வந்த போதும்—தமிழ்
வெள்ளாமை பெருக வேண்டும்
–எல்லோரும்

கவளமாக உண்ணும் உணவே—நமக்குப்
பவளப் பாறைச் சொந்தங்களாம்
தவளுகின்ற குழந்தைகளும்—இங்கே
பழகுகின்ற பாக்கியமே
–எல்லோரும்

05.07.2009



# நிழல் தேடும் சூரியன்

**வி**டிபொழுதின் காலைக் கதிர் விரும்பிடும் உதயபானு
கொடிதான உச்சி வெய்யில் உமிழுகையில் நெருப்பு ஞாயிறு

சாயங்காலம் வயல்வெளியில் வேலை செய்யக் களைப்புத்தரா
நேயமான நியாயமான அந்திப்பொழுது ஆதவனாய்

மேலைக் கடலுள் மறையும்போது சோலையில் பறவையினம்
ஆலையில் மனிதர்களும் வேலைமுடிந்த மகிழ்ச்சியில்...
நேரத்துக்கு நேரம் மனித மனம் மாறும்போது
தூரப்பயணம்... நிழல்தேடும் சூரியனாய் மாறாமல்...
நாளைக்கும் கடமையாற்ற நம்பிக்கை ஒளி கொடுக்க
வேளைக்குக் களையாறி விடியலுக்கு வந்துவிடு...



# சிங்கையில் திபாவளி

**எ**ங்கும் ஒளி உமிழும் எல்லோருக்கும் குதூகலமாம்
தங்கும் ஆனந்தம் தனிச் சுவையாய்
பொங்கும் புத்துணர்வு பூரிக்கும்
கங்குல் விடியுமுன் நீராடிப் புத்தாடை அணிந்தபின்
இங்குதான் சொர்க்கமே இறங்கி வந்ததென்று
சிங்கமும் மீன்வடிவும் சேர்ந்த இலச்சினைபோல்
சிங்கையில் தீபாவளித் தினம்.

ஆரணங்கு சிங்கையின் அங்கமாம் தீபாவளி
ஆடல்பாடல் ஒலி, ஒளி அமர்க்களமாய்
பூரணம் சூழ்ந்த புனித நாளில் பழையன கழிதலும்
புதியன யாவும் புகுந்து நிறைந்திடும்
தோரணம் ரூபத் திரைச் சீலை ரூபத் தோதான பட்டாசு
தோழமை உணர்வுடனே உபசார விருந்தோம்பல்
காரணம் ஏதெனில் ஒரேமக்கள் ஒரேநாடு
காண்கின்ற தீபாவளித் தினம்.

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

**வ**டக்கே இயங்கியது சீமெந்துத் தொழிற்சாலை...
தெற்கே மிளிர்ந்தது கண்ணாடித் தொழிற்சாலை...
கிழக்கே இருந்தது காகிதத் தொழிற்சாலை...
மேற்கே விளங்கியது புடவைத் தொழிற்சாலை..

கௌரவமாக நான்கு மதங்களின் குருமார்கள்
பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் சகலரும்
ஐக்கியமாகக் கொடுத்து வாங்கி உண்டு உடுத்தி வாழ்ந்த
அப்பாவிப் பொது மக்களைப் பிரித்தது... யாதெனில்,,,

மூன்று இனங்களும் ஒருவர்க்கு ஒருவர்
சான்று பகரும் சகோதர உணர்வுடன்,,,
வேண்டுமென்று ஒருநாளும் வினை செய்தறியார்
ஆண்டபரம்பரை தான் அவர்களைப் பிரித்தது.

மூவினமக்களும் வடக்கிலும் தெற்கிலும்
பூவும் மணமும் போலவே வாழ்ந்த காலத்தில்
தாவிடும் தலைமைப் பதவியின் ஆவலில்
தூவினர் வகுப்பு வாதத் துர்மார்க்கச் சொற்களை..

பூலோக கற்பக தருவாகிய பனைமரம்
ஆகாயம் நோக்கி நெடிதாய் வளர்ந்து
தானாக நிலத்தடியின் நீரினை உறிஞ்சி
வானோக்கும் உயர்ந்த பயன் தருகின்றதே! அப்படியே...

வடபகுதி விவசாயி வயலுக்கு நீர்ப்பாய்ச்ச
விடாமுயற்சி கொண்டு மேகம் பார்த்த பூமியை
உடலுழைப்பு வியர்வை நீர், கிணற்று நீர் கலந்து
கடுமுழைப்பொன்றினால் பசுமையாய் ஆக்கினான்!

இயற்கை வளங்கள் ஏராளம் நிறைந்திருக்கும்
இலங்கை நாட்டின் சிறப்பினைச் சொல்லிமுடியாது
இயற்கைக் கடற்கரை, ஆறுகள், மலைகள்
இரசித்துச் சுவைக்கும் தேயிலை, கோப்பி, பழவகையும்

இனிதாக உபசரிக்கும் விருந்தினர் விடுதிகளும்
இயல்பாகச் சிரித்தமுக விமானத்துறை ஊழியரும்
அயல்நாடுகள் விரும்பும் புராதன ஆலயங்கள்
அத்தனை சிறப்பும் இலங்கைக்குத் தனிப்பெருமை!



# தொட்டில்

**ஆ**யிரத்துத் தொள்ளாயிரத்தறுபதாம் ஆண்டுகளில்
தாய்தந்தை மக்களெனப் பலகை வீடொன்றில்
சிங்கப்பூர்க் கிராமக் குடும்பமது வாழ்ந்ததுவோ
அங்கத்தவர் நிறைந்த அன்பான இல்லறத்தில்
வேல்சாமி தெய்வானை பெற்றெடுத்த அறுவருமே
நூல்போல் மெலிவான ஆண்மூன்று பெண்மூன்று
மாமரக் கிளைதனில் கட்டி வைத்த தொட்டிலிலே
ஆரவமர இருந்த படி வளர்ந்து வந்தார்.

ஒய்யார் முதுகுப் பக்கம் உதைப்பதற்குக் காற்சட்டம்
கைப்பிடியாய் வளைந்த சட்டம் உட்காரப் பலகையென
சிற்றுளியால் செதுக்கிய சீராட்டும் பொன் மொழியும்
பற்றுடனே பாதுகாக்கும் பாங்கான தொட்டிலது.

இரண்டாயிரம் ஆண்டளவில் எழுபது வயதுவர
கண்பார்வையும் சற்றுக் குறைவது போல்தோன்ற
அடுக்கு மாடிவீடுகளில் மக்களுடன் வாழ்ந்திருந்த
மிடுக்கான தந்தையவர் இயற்கை எய்துமுன்னே
சாகுந்தருணம் சின்னமகள் சிந்துவிடம் சொன்னார்
“பாவிக்காத தொட்டிலை வீட்டினுள் முடக்காதே
பாசமுள்ள நண்பன் பரிசாகத் தந்த பொருள்
நேசமுள்ள மனிதருக்குத் திருப்தியுடன் கொடுத்துவிடு”



# செம்மொழியாம் தமிழ்மொழி

**பா**டுவோமே கூடி ஆடுவோமே
பக்குவமாய் நாமெல்லோரும்
தமிழ்த்தாயின் வாழ்த்ததனைப் பாடுவோமே!
ஊரும் உறவும் பலவாயினும் ஒன்றாய்– ஓர்
தாயின் மக்களென ஓதுவோம் நன்றாய்– சிங்கையின்
பேருக்குப் பெருமை சேரக் கூடி நடப்போம்—இன்று
யாருக்கும் உரிமையுண்டு தமிழை வாழ்த்தவே
-பாடுவோமே

நாட்டிலே வாழ்ந்த நல்லறிஞர்களும்
நாடுவிட்டு நாடுவந்த பேரறிஞர்களும்
தேடித் தேடி உன்னைத் தாலாட்டவே
பாடிப்பட்டா உன்னைச் சீராட்டவே.
-பாடுவோமே



# அதுமட்டும் வேண்டாம்!

பங்கமில்லாது பாடுபட்டு உழைத்த பணத்தையும்
தங்கமான உடம்பையும் தொலைத்துச் சிதைக்க
மங்கலான செவ்விளக்கு மரணப் பகுதியா...?
அங்குசென்று கெட்டழிய... அதுமட்டும் வேண்டாம்!

கட்டுப்பாடாகக் காத்திடும் ஆட்சியில்
திட்டம் இட்டுப் பலதிருட்டு வழிகளிலே...
காவல்துறையின் கைகளிலே சிக்கிவதைபட
போதைப்பொருளா...? அது மட்டும் வேண்டாம்!

இனபேத மதபேத மொழிபேதம் இல்லாத
சனங்களின் மனதிலே சாக்கடை அழுக்காய்...
பையவே உள்நுழையும் பயங்கர வாதமா...?
ஐயகோ! மக்களுக்கு அதுமட்டும் வேண்டாம்!



# மகிழ்வாரே!

**வீ**ட்டுக்குள்ளே முடங்கி விரக்தி மனதுடனே
பாட்டெழுதும் பக்குவமும் பதுங்கி மறைந்ததாலே
நாட்டுக்கும் பயனின்றி நானேன் இவ்வுலகில்..
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதென..
பூட்டிய வாசல் திறந்து பூவாங்கப் போனபோது
வாட்டிடும் துயரம் போக்கும் வனிதாமணி ஒருவரி
தீட்டிய வார்த்தை கேட்டுத்திடமொன்று மனதுள்வர
ஊட்டிய தெம்பினாலே உள்ளூரச் சிந்தித்தேனே!

ஆசிரியப் பணியினூடே அயராமல் சமூகப்பணி
ஆங்கிலம், தமிழ், மலாய் அனைத்திலும் தேர்ந்த மங்கை
ஊசி முனைத்தராசு போல நீதி நிறை நங்கை
"பேசுகின்ற வார்த்தையிலே பெருகும் தமிழ்ப்பங்கை
பாசமுடன் எழுதுங்கை பயனின் தாள்களிவை"
வீசிடும் தென்றலாக விளம்பினார் என்முன்னாலே
நேசமுடன் அவர்துணையால் நிரூபணம் கிட்டியது
கூசிநின்ற நாட்கள் குறைந்து மறைந்தனவே!

வேண்டுவோர் உதவிகளை விரைந்து நல்கும் நாவரசி
பூண்டுமகிழ்வீ ரெனப் புத்தாடை தந்தபூவரசி
ஆண்டகை சிவராமகிருஸ்ணன் அகத்தின் மாதரசி
காண்பவர் போற்றுகின்ற அர்விந்தின் தாயரசி
நீண்டநாள் நீர்வாழ்ந்து சேவையிலே சீரரசி..
வேண்டுகிறேன் தாயொருவர் உனக்கு அன்பரசி
தூண்டுகோல் போலிருந்து திரி ஒளிரச் செய்தராசி
மாண்புறும் மனத்தாலே மகிழ்வாரே சந்திரா. சி.



# வன்முறை அற்ற இலங்கைத் தாய்

**ம**க்களின் ஐக்கியம் ஒன்றே நாட்டின் பலமாக
மதபேத இனபேத பிரதேச பேதமிலா
மக்கள் மனதில் வன்முறை விதைக்காத
தக்கநீர் வளமதைத் தரமாக உயர்த்திட
விக்கினம் இல்லாத விவசாயம் மாற்றிட
அறிஞர் பலரின் ஆலோசனை பெற்றால்
அனைத்து மாகாணங்களும் செழிப்புடன் வளருமே!

எண்ணிக்கையில் குறைவான இனத்திலே உதித்துக்
கண்ணியமாகக் கடமைகள் ஆற்றிய நாதன்..
நண்ணியே அவரை நாட்டின் தலைவனாய்ப்
பண்ணிய சிங்கையைப் பார்த்தே மகிழ்வாய்
மண்ணின் அளவில் சிறிதாக இருந்தாலும்
திண்ணமான சாதனைத் திறமைகள் மிளிரும்
விண்ணுலகம் என்பது மானிடர் வாழ்கின்ற
மண்ணில் தானன்றோ மலர்ந்து சிரிக்குது!

'தம்மபதம்' கூறுகிற புத்தரின் தத்துவச்
செம்மை நெறியினைச் சிரமேற் கொண்டு
வன்முறை ஒழித்து வரண்ட நிலங்களை
நன்செய் நிலமாக்க இதயச் சுத்தியுடன்
நம்மை நன்னெறியில் செம்மையாய்ப் பயிற்றிட
உண்மை நேர்மை உழைப்பு மேலோங்க
இன்பமான இலங்கைத் தாய் தியற்கை வனப்பால்
அன்பில் உயர்ந்து அழகாய்த் திகழ்வாள்!
போட்டி பொறாமை மன உழைச்சல் இல்லாத
வாட்டிவதைக்கும் வன்முறை அற்ற
ஆட்டிப்படைக்கும் அகந்தை ஒழிய ஆன்றோர்

காட்டிய வழியில் கருணை நெறியில்
ஈட்டிய செல்வங்கள் ஊறுபடாமல் புதுமை
காட்டிய வழியில் கருணை நெறியில்
ஈட்டிய செல்வங்கள் ஊறுபடாமல் புதுமை
காட்டிடும் கட்டொழுங்கு நல்லாட்சி நிலைக்க
தீட்டிடும் புத்தியைத் திடமான வெற்றிக்கு
ஊட்டுவோம் பலத்தைப் புதிய சந்ததிக்கே!

ஆசியவட்டார நாடுகளில் தங்கி
பேசிடும் இனமத நல்லிணக்க மகிமையை
ஊசிமுனையில் உள் நுழைந்து வேரோடி
ஊடறுக்கும் பூசல்களை முளையிலே கிள்ளி
பேசிடும் ஒற்றுமை, சமாதானம் காத்து
பொறுப்புடன் நாட்டை நிர்வகிப்பதிலே
மாசில்லாத் திறனாளரை வருக' வென வரவேற்று
மாட்சிமையாய் ஆட்சியை மனதாரப் போற்றுவோம்!

ஆதியில் நாட்டில் இருந்தது போலவே
சாதிசமயப் பூசல்கள் இல்லாச் சகோதர
நீதிவழுவா நெறிமுறை பூண்ட புதுமை யொன்று
மேதினியில் மீண்டும் வரவேண்டும் கட்டாயம்
மானிடத்தைப் பேணுகிற மனித விழுமியங்கள்
கானகத்தில் காய்ந்த நிலவாகப் போகாமல்
தானெடுத்துச்செல்லத் தராதரம் பெற்ற
நானிலமாம் இலங்கைக்கு இணையான நாடு முண்டோ?

முதலில் முட்கம்பி வேலிக்குள் முடங்கிய மக்களின்
கதவைத் திறந்து தொழில்நுட்பம் பலவளர
நிதமும் நெடுஞ்சாலைப் போக்கு வரத்துக்களும்
மிதமாக வடிவமைத்தால் மெச்சிடும் உலகமெலாம்
குதமாகப் பயிர் வளரும் குடிநீரும் கிடைத்துவிடும்
உதவாது என்று கைவிட்ட ஓரங்குலப்
பதமான நிலமும் பயன்பாட்டைக் காட்டுகையில்
இதமான இலக்கைக்கு இணையாக நாடுமுண்டோ?



**மக்கள் கவிஞர்**

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவுநாள்...**

# அமைதிப் பாட்டு


**சி**ங்கப்பூர்ச் சிக்கனத்தில் வாழ்க்கையை ஓட்டு
மங்காத ஐக்கியத்தைப் பழக்கத்தில் காட்டு
அயலவனை நேசிக்கக் கரத்தினை நீட்டு
சுயமாக உழைத்து மகுடத்தைச் சூட்டு

சமூக முன்னேற்ற நெறிகளைத் தீட்டு
தமிழின் பெருமையைத் தரணியில் நாட்டு
அறவழி தன்னில் பொருளினை ஈட்டு
குறைகள் சொல்வோர் வாய்தனைப் பூட்டு

இல்லாள் வருந்தாமல் ஒத்துழைத்து வீட்டு –
அல்லல் களைய நம்பிக்கை ஊட்டு
குழந்தையின் சிரிப்பில் தலைதனை ஆட்டு
புழக்கத்தில் புரளுதாம் கள்ள நோட்டு

வேண்டாத விரயங்கள் துருப்புச் சீட்டு
பூண்ட நன்நெறிகளை அறிஞரிடம் கேட்டு –
வாரத்தில் ஒருநாள் குடலினை வாட்டு
நேரமே கிடையாது என்பது சாட்டு.

அருவருக்கும் செயலுக்கு வைப்பாய் வேட்டு
திருக்குறள் எழுதிச் சுவரிலே மாட்டு
விரும்பும் சமாதான வீணையை மீட்டு
திரும்புமே உலகில் அமைதிப் பாட்டு



# திசையறியும் பறவைகள்...

பிறந்து வளர்ந்த பாசத்தைப் பிரிந்து
பறந்துவந்தது ஆகாய வழியில்...
கல்வி, மேம்பாடு, கருத்தில் உழைப்பு..
சொல்லிமுடியாத சோகங்கள், பிரிவுகள்...
எண்ண அலைகள் ஊர்க்கரை தொட்டுக்
கண்ணை நனைக்கும் கண்ணீரில் மூழ்கி..
பூண்ட உறவுகள், மனையாள், மக்கள்
மீண்டும் அவர்களை வளமாய் வைத்திட.

சிக்கன வாழ்வில் மிச்சப்படுத்தி...
தக்க எதிர்காலம் கண்ணில் தெரிவதால்
நாளைக்குக் காலையில் எழுந்து வேலைக்கு
வேளைக்கு அவ்விடம் சேர்ந்திட வேண்டுமே!
எஞ்சிய உணவினைச் சொண்டினில் கௌவிய
குஞ்சுகள் நினைவினில் கூட்டினை எண்ணிய
பறக்கமுன்னர் இருந்த திசையை
மறக்க முடியாத பறவைகள் இவர்கள்!




# பெண்ணின் பெருமை

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
திட்டமிட்டுக் குடும்ப நிர்வாகம் நடாத்துவதும்
கட்டுப்பாடாய் இல்லறத்தை கவனமாக உயர்த்துவதும்
எட்டுத்திசை எங்கணுமே பெண்ணின் பெருமையதே!

கருவை உருவாக்கக் காத்திருந்தாள் பத்துமாதம்
அவருவருப்புக் கொள்ளாது அனைத்துப் பணிவிடையும்
விருப்பத்துடன் நிறைவேற்றி விளக்கொளியாய் வலம்வரும்
அருமைப் பெண்மையின் பெருமையைப் போற்றுவோம்!

விண்ணிலே ஒளிவிடும் நிலவினைப் போலவே
கண்ணவன் கணவனின் காரியம் யாவிலும்
பண்ணிலே இசையின் பரிமாணம் ஒலிப்பதுபோல்
வண்ணமாய்க் கலந்திடும் பெண்மையைப் போற்றுவோம்!

சொல்லும் மியன்மாரில் 'சூகி' அம்மையாரும்
வல்லசிறீலங்காவில் வனிதை 'ஜின்சில'வும்
பெண்கள் விடுதலைக்குப் பெருமைக் குரல் கொடுக்கும்
கண்களாய் பெண்களின் பெருமைக் கூறுவோம்!



## சிங்கையில் சித்திரையின் பூக்களும் பழங்களும்

**த**மிழ்மணக்கச் சிங்கையிலே நான்காண்டு முன்னர்
அமிழ்தான சித்திரைத் தமிழ்விழா தொடங்கி...
அறிஞர்கள் பங்கெடுத்து வழிநடத்தும் செய்கையால்...
குறிப்பாக மணக்கிறது பூக்களும், பழங்களும்.

பாலர்பள்ளி ஆடல்பாடல் விநோத உடை மல்லிகை
உயர்நிலைப் பள்ளி சொல்களமோ இதழ் விரித்த தாமரை
திருக்குறள் விழாவிலே திகழ்ந்தவைகள் ரோசாமலர்,
மாதவி இலக்கிய மன்றத்தில் மணத்தது சாமந்திப்பூ!

முப்பது ஆண்டுக்குப் பின்னர் தேக்காவிற்கு
மதியுரை அமைச்சர் வருகை புரிந்ததும்...
திறந்த வெளியரங்கில் வணக்கம் முழக்கம்
சிறந்த பலசொற் பொழிவு பலாப்பழத்தின் சுவைதானே!

நாளிதழின் செய்தியேடு நாவற்பழச் சுவையாம்
ஒரி 96.8 ஓங்குதமிழ் வாழைப்பழ இனிமை
வசந்தத்தின் ஒளிபரப்பு மாதுளம்பழம்போல
கவிமாலை நிகழ்ச்சிகளோ மாம்பழத்தின் ருசியினிலே!

“அடுத்தவருடமும் சித்திரைக்குச் சிங்கைக்கு
விடுப்புஎடுத்து வரவேண்டும் விமானத்தில்...”
ஆசிய வட்டார அயலிலுள்ள நாட்டவரின்
தேசியக் குரலாக ஒலிக்கிறது எம்காதில்.



# கடலில் சிந்திய எண்ணெய்...

**எ**ண்ணெய்யே...!
ஐம்பூதங்களுடன் ஐக்கியம் ஆனவன் நீ...
செம்மையாக நிலத்திலே ஓடுகின்ற வாகனங்கள்
நம்பிக்கையாய்க் கடல் தனிலே பயணிக்கும் கப்பல்கள்
கும்மிருட்டில் பறக்கின்ற அண்டவெளி ஊர்திகட்கும்...
ஆக்கமான உந்துசக்தி... ஆதார சுருதி நீ தானே!
ஊக்கமும் ஒத்துழைப்பும் ஒருங்கே கொடுத்துதவி...
நோக்கமேதுமில்லாது நொடிப்பொழுதில் கடல்நீர்மேல்...
தேக்கமாக அழித்துக் குவித்தாயே உயிரினத்தை!
நீயோ...
அடிநிலத்துக் கிணற்றுக்குள் அசுத்தமாய்ப் பிறந்தவுன்னை
துடிப்பான மனித சக்தி துரிதமாகச் செயற்பட்டு...
வடிகட்டித் தரம்பிரித்து வாகனத்துத் தகுதிப்படி...
கொடிகட்டிப் பறக்குமாறு கலசத்துள் அனுப்பினரே!
மானிடனே...
நடமாடும் மனிதர்களை நாசமாக்கி அழிப்பதற்கு...
உடம்பிலே குண்டுகட்டி உருக்குலைந்து சிதறுதற்கு...
இடங்கொடுக்க எண்ணாதே நோக்கத்தை மாற்றிவிடு
கடலிற் சிந்திய எண்ணெய்க் கதைகேட்ட பின்னாலே!

# அன்னையர் தினத்திலே...

**ம**க்களே தாய் பற்றி எழுதுவது வழக்கமாம்... அந்த
அக்கறையில் அன்னையே எழுதி அனுப்புகிறாள்.

பிள்ளைகள் உணர்வினைப் பெற்றவள் சொல்வதே
கொள்ளை இன்பமாம் அன்னையர் நாளிலே..
உண்ண உணவளித்து உறங்க இடமளித்து
வண்ணத்தில் உடைகள் பலவாங்கித் தருமொருவர்!

'கணனி'க்குமேலே 'கமரா'வும் பொருத்தி
கைத்தொலைபேசியும் கருணையுடன் தருமொருவர்!
அம்மாவின் வயதுக்கு இதுவொன்றும் வேண்டாமென்றால்
'சும்மாஇருங்கள், சுழலும் உலகில் உழைக்கும் தாயாக...
இவ்வளவு காலமும் இரவுபகல் பாராமல்
எம்மோடு நீங்கபட்ட இன்னல்கள் போதாதோ?
நான்தரும் பால்பழங்கள் நன்றாக நீயருந்தி
கூன்விழாத முதுகுடன் குதூகலிக்கவேணு' மென்றார்.

நன்றாகத் தமிழ்த்தாயின் உறவிலே பெற்ற மக்கள்...
அன்னையர் தினத்திலே பொன்னாடை போர்த்தி
சின்னமேசை விளக்கும் சிறப்பாக எனக்களித்துடன்
'என்வீட்டுக்கு வந்து உன்தமிழால் உரையாடு...
உன்னுடைய ஊக்கம் இளைஞர்க்கு வழிகாட்டும்'

இத்தனைநாள் இல்லாத கருஞ்சிவப்புக் கரைவைத்த
அத்தனை மதிப்பான சேலைதந்தார் மகளொருவர்!
'அம்மா பசிகிடந்து 'அல்சர்' வந்ததென்று
தம்மால் முடிந்தவரை தகுமுணவு தருமொருவர்!

செல்லும்திசை யெல்லாம் திருப்தியாய்ச் செய்திகளை
சொல்லும் புகைப்படமும் அனுப்பிடுவார் இன்னொருவர்
அம்மாவின் பொறுமையும் அசையாத நம்பிக்கையும்
நம்முடைய வாழ்வுதனில் நடைமுறைக்கு ஏற்கு'மென்பார்!



## நோன்புப் பெருநாள் வாழ்த்து

**சி**ங்கையில் வாழுகின்ற சீருறுநான்கினமும்
தங்களின் ஒற்றுமையைத் தாங்களே வெளிப்படுத்த
பண்டிகைக் காலங்களில் பண்பாடு, கலாசாரம்
கொண்டாடக் குதூகல விருந்தோம்பல் செய்கின்றார்.

அருகருகே வாழ்கின்ற அயலவரை நேசித்து
ஒருவருக்கொருவர் உண்டி, உடை வழங்கித்
தருகின்ற தருமச் செயல் நோன்புப் பெருநாளில்
வருகின்ற புண்ணியமே வாழ்வின் பெருநிதியாகும்.

ஏழையின் பசியினைச் செல்வந்தனும் உணரவே
வாழையடி வாழையாகக் கடைப்பிடித்தொழுகும்
காலையில் தொடங்கி அந்திசாயும் வரைக்கும்
வேலையில் இருப்பாரன்றி, உமிழ்நீரும் உண்ணமாட்டார்.

வருடத்தில் எல்லா நாளும் வயிறார உண்பதால்– சக்தி
தருகின்ற உள்ளுறுப்பு ஓய்வெடுக்க– சுத்தமாக்கத்
தேவையற்ற கழிவுகள் தேகத்தை விட்டகல
பாவச்செயல் புரியாப் பக்குவமும் வந்துவிடும்.
அன்பைப் பொழிந்து அருமையாய்ப் பெற்றவரை
துன்பம் களைந்து தூய வழிகாட்டினாரை
மாசகல ஆழ்ந்த மனத்தொழுகை செய்தவரை
ஆசானைக் குருகுலத்தை அடிபணிந்து போற்றிடுவர்.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு.. என்ற தேர்வில்
புசிக்காமல், பகைக்காமல், உறங்காமல் பதவிபெற்றார்
வானத்தில் இருந்து குதிக்கவில்லை பூவுலகில்...
மானிடத்தின் விழுமியமே அம்மனிதன் தானென்போம்.
புவிவாழ்ப் புனிதமாய் நோன்பைக் கடைப்பிடிக்கும்
மகிமையான மக்களுக்குச் சிங்கைத் தாய்சார்பாக...
கவியால் கூறுகின்ற கருப்பொருள் எதுவென்றால்
நபிகள் நாயகத்தின் நல்லுரையே அதுவென்போம்!

ஈகைத்திருநாளின் சிறப்பு இன்றுவரை வாழுதென்றால்
வாகைகூடிய வள்ளல்கள் வாரிவழங்கும் கொடையன்றோ?
'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பது வரலாறு...
சக்தியிழந்தகை கூட வழங்கியது பழக்கத்தாலே...

வருந்தி உழைத்த செல்வத்தைத் தந்தேவை போக...
வறுமையில் உழல்வோர்க்கும் வாழ்வில்லா அபலைகட்கும்
தருகின்ற வள்ளல்களைப் பார்த்திருந்த வானகமும்
பொழிகின்ற மழைநீரால் பூமித்தாய் செழிக்கின்றாள்.

முல்லைக்குத் தேரீந்த பாரிமன்னன் வரலாறும்..
கர்ணன் என்ற கொடைவள்ளல் காப்பியத்தில் இருப்பதுபோல்
சிங்கைத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் சீதக்காதியர்கள்
எங்களுக்காய்க் கட்டிவைத்தார் உமறுப் புலவர் தமிழ்ப்பள்ளி.

நம்கண்முன்னே நடமாடும் வள்ளல் பெருந்தகைகள்
வாழுமிந்த நாட்டினிலே நாமும் வாழ்ந்தோமென்றால்...
ஆறுதல் வார்த்தையல்ல; உறுதியான உண்மையிது!
கூறுகிறேன் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள்!

# நான் பிறந்த நாடு

**நா**ன் பிறந்த நாடு என்று நானிங்கு எழுதுவது...
நான் பிறந்து வளர்ந்த மாகாணத் தொகுதியைத்தான்...
ஊர்பற்றி எழுதும்படி உரிமையுடன் கேட்டீர் செந்தில்
ஏர் உழுத பறாளாய் மண்ணின் எழில் மிகுந்த அழகுதன்னை...
பேர் பெற்ற ஆலயங்கள் பெருமையுறு வரலாறு...
யார் மறக்க முடியுமய்யா யாழ்ப்பாணச் சிறப்பதனை...?
மங்காத இராமாயண நாயகன் ஸ்ரீராமனின்
தங்கத் திருப்பாதம் பட்டதாம் திருவடிநிலையில்
சங்கமித்ரை பெயர் கொண்ட அசோகன் புத்திரியும்
சம்பில் துறை வந்திறங்கி சமயம் வளர்த்த கதை...
சின்னத் தம்பிப்புலவர் கூட சிந்துகவி பாடிவைத்த
எந்நாளும் அழியாத பறாளாய் விநாயகர் பள்ளு...
கூர்ம வடிவத்திலே கோவில் கொண்ட பொன்னாலையில்
தேர்த்திருவிழாவில் உறியடி உற்சவமும்...
தயிர்முட்டி சிதறித் தலைமேலே கொட்டியதும்...
பயிர் விளைந்த வயல்வெளியின் பசுமைக் காட்சிகளும்...
வானம்பார்த்த பூமியென்று பேரெடுத்து இருந்தாலும்...
கூன்விழுந்த பின்னாலும் உழைத்துண்ணும் உற்சாகம்...
வீட்டுக்கொரு கிணறு... வீதிதோறும் வேலி+ மதில்...
பாட்டாகத் திருவாசகம் மார்கழித் திருவெம்பாவில்...
மின்விசிறி தேவையில்லை வேப்பமரக் காற்றுவரும்.
பன்னாட்டு உணவு வேண்டாம் பனைமரமே பசி தீர்க்கும்.
யாழ்பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாண வரலாறு...
பாழ்போகா உணவுமுறை பனம்பழத்தில் கிடைக்கின்ற
ஒடியல்கூழ், பனங்கட்டி, ஒடித்துண்ணும் புழுக்கொடியல்,
மடித்தெடுத்துப் பேணி வைக்கும் பனாட்டுத் தட்டுகளும்
பதநீருள் பயறு போட்டுப் பக்குவமாய்க் காச்சுகின்ற
இதமான கருப்பங்கஞ்சி... இப்போதும் வாயினிக்கும்...
குலையாக வெட்டிக் கோவில் பந்தலிலே கட்டுகிற
விலைக்கும் கிடைக்காது விருப்பமான நுங்குகளாம்
இலுப்பைப் பூக்காயவைத்து அல்லிதட்டி வறுத்தபின்னே
அலுக்காது உரலிலிட்டு உலைகையால் இடித்தெடுத்து...
சூட்டோடு பரிமாறிப் பலரோடு உண்டகதை...
பாட்டாகச் சொன்னால் புரியாது புதியவர்க்கு...
பிறந்ததும் வளர்ந்ததும் அறநெறிகள் கற்றதும்..
துறந்தது பிறந்த மண்ணைத் துக்கமே மகிழ்ச்சியில்லை.



## மானிடத்தின் மகிழ்வில் உணர்வு கொள்வாய்!

**சொ**ந்தப் பலத்தைத் தொலைத்து நிற்கும் தோழனே...!
வந்தோம் பூமிக்கு... வாழ்ந்துதான் காட்டுவமே...!

முட்டையிடும் பருவத்தில் கூடுகட்டும் குருவி கண்டாய்!
இட்டமுடம் மாரிகாலம் இனத்தோடு வாழ்வதற்கு...
திட்டமுடன் புற்றெடுக்கும் கறையானைக் கவனித்தாய்!
உட்கருத்தை ஏற்றுநீ உற்சாக உணர்வு கொள்வாய்!

வட்டவட்டக் கண்கள் வைத்து வளர்பிறைக் காலத்திலே
எட்டாத உயரத்திலே தேனீக்கள் கூடு கண்டாய்...
அட்டதிக்கும் உன்மதிப்பை அன்பர்கள் மெச்சிடவே...
கட்டளையை நீ வகுத்துக் காலத்தால் உணர்வு கொள்வாய்!

ஊனமுற்றோர் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டி கண்டாய்
கானமிசைக்கும் கண்பார்வை அற்றோர் பாடல் கேட்டாய்
சோர்வகற்று! சுறுசுறுப்பை உன்னகத்தே கொண்டு வந்தால்..!
மார்பழகா!... மானிடத்தின் மகிழ்வில் உணர்வு கொள்வாய்!



# இடம்விட்டு இடம்...

**ந**டமாடிய யுத்தத்தால் நைந்து குலைந்தேனே
'படபடெ'ன்று விழுந்தவுடன் வெடித்தன குண்டுகள்
'சடசடென்'று சரிந்தன வசித்த வீடுவாசல்
'அடஇதென்ன கொடுமை'யென்று அழுகை ஒலியூடே...
திடத்துடனே கற்றகல்வித் தீர்மானம் புறப்படாய்....
உடலுடன் சேர்ந்திருந்த உயிரும் மிச்சமாய்...
வடம்பிடித்த தேரது இடம் விட்டு இடமாக..
தடம்பதித்த சுவடுகளில் தமிழைப் பதிந்தேனே!



# குப்பைத் தொட்டி

**எ**ன்னுடைய பதற்றத்தை யாரிடத்தில்
சொல்வேனோ?
எனக்கு உயிரிருந்தால் நானெடுத்து
வளர்ப்பேனே?
உயிருள்ள ஒரு சிசுவை என்னுள்ளே போட்டுவிட்டு
தன்
உயிரோடு மானத்தையும் காப்பாற்றப்
போனாளே!

ஐயோ! நான் என்ன செய்தேன்? ஆறாப் பசியோடு
அலையும் தெருநாய்கள் மோப்பம் பிடித்து
வந்தால்...!
அநாதையான இச்சிசுவைக் கடித்துக்
குதறுதற்கோ
ஐயோ! என்னிடத்தில் அடைக்கலமாய்
போட்டாளோ?

ஒரு குழந்தை
இல்லையென்று ஏங்கித் தவிப்போரே!
ஓடிவந்து காத்திடுவீர் உமக்குப்
புண்ணியந்தான்!

சிறுவாய் திறந்து அந்தச்சின்ன
உயிர் உம்மை
“அம்மா! அப்பா!” அழைக்கையிலே ஆனந்தம்
பெறுவீரே!

என்னுடைய பதற்றத்தை யாரிடத்தில்
சொல்வேனோ?
எனக்கு உயிரிருந்தால் நானெடுத்து
வளர்ப்பேனே!

– குப்பைத்தொட்டி



# பெருவிரைவு ரயில்களில் பயணம்

**வீ**ட்டு வேலைகள் முடித்து வீதியிலே நடந்து சோர்ந்து
வாட்டமாய் வந்து சேர்ந்தேன் பெருவிரைவு ரயில் நிலையம்.
பிரயாணச் சீட்டை அவசரமாய்க் காட்டிவிட்டு... கொஞ்சத்
தூரம்
பரபரக்கும் படிக்கட்டில் கால்வைத்து வெளியேற... மேடைக்கு
இசைவுடனே விரைவாக வந்ததுவே ரயில்வண்டி...
தசைப் பிடிப்புக் கால்வைத்து உட்புகுந்தால் உட்கார
இடமில்லை.
முடிநரைத்த தலை பார்த்த நிலவுமுகம் புன்னகைத்து...
கடிதென எழுந்து நின்று தன்னிருக்கையை எனக்களித்தாள்.
பளிங்குச் சிலையொன்று பள்ளிச் சீருடையுடனே...
தெளிந்த நீரோடைபோல் விளங்கும் கருணைமுகம்
தானிறங்கும் இடமது வந்தவுடன் கையசைத்தாள்...
நான்மறந்தேன் என்னை, எனக்குள் ஒரு சிலிர்ப்பு!
வயோதிபத் தாய் உட்கார இடங்கொடுத்த பண்பை எண்ணி...
இளவயதுச் சந்ததியை நினைந்து இறுமாப்புக் கொண்டேனே1
மற்றவர்க்கு உதவுவதால் தன்னில்தான் உயர்ந்து நிற்பர்
சொற்களிலே வடிக்க முடியாத செயலிதை எழுதுகின்றேன்



# என்மகனை நினைவு கூர்ந்து...

**த**ந்தைதாய் அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால்
முந்தித் தானெடுத்த முடிவினை நிறைவேற்ற
சுந்தரத்தின் வழிபார்த்து சந்ததியின் உபதேசத்தால்...
பந்தபாசங்களைத் துறந்து... பக்தியாய்த் தமிழின்மேலே...
சிந்தனை செயல்கள் யாவும் சிதறாமலே நடந்து...
நிந்தனை அனுபவித்து நேசித்த விடுதலையை...
அந்தகராய்ச் சிறைச்சாலை அரணான கோட்டைக்குள்ளே...
விந்தையாய் வருடங்கள் யுகங்களாய்க் கழிந்தனவாம்!
அந்திப்பொழுதினிலே அன்பான வீட்டைவிட்டு...
சந்திக்குப் போகாமல் சந்துபொந்து வழிபார்த்து...
புந்தியைக் கல்லாக்கிப் புறப்பட்டுப் போனவர்கள்...
சிந்தையில் விடுதலையை நேசித்த குற்றத்திற்காய்...
புந்தியைக் கல்லாக்கிப் புறப்பட்டுப் போனவர்கள்...
சிந்தையில் விடுதலையை நேசித்த குற்றத்திற்காய்...
வந்தனை செய்தார்கள் வாதாடினால் 'நாடு'என்று
மந்தமாய் மறுதலிப்பு மாற்றமாய் போனதாலே...
எந்தன் மகன் மாத்திரமா? எத்தனையோ ஆயிரம்பேர்...
சொந்த பந்தங்கள் துடிக்கச் சொர்க்கம் போனாரோ?

25.08.2011



# ஏணியும் தோணியும்

**ஏ**ணி உதவுகிறது மேலே போகக் கீழேவர...
தோணி செய்கிறது கரையேறக் கரையிறங்க...
ஆணிகள் ஓட்டைகள் அடிக்கடி சரிபார்த்துப்
பேணிப் பாதுகாத்து நிலமட்டம், நீர்ச்சுழற்சி,
காற்றழுத்தம்—கண்
காணிக்கவேண்டியது
மனிதனின் செயற்பாணி!




# யாருக்கு விருது?

**கா**லுடைந்துபோன பின்னும் சக்கர நாற்காலியில்
சாதிக்கவேண்டுமென
நாலு கி. மீ ஓட்டத்தில் முதலிடத்தில் வந்து களைத்தவர்க்கு-
நாலிரண்டு வருடங்கள் தோல்விமேல் தோல்விகண்டு
நம்பிக்கையில் காலூன்றி நின்ற தாய்க்கு
இரட்டைக் குழந்தைகள் கிடைக்க வைத்த மருத்துவருக்கு-
வாலறுந்த பட்டம் போல்
வாழ்வில் குறிக்கோளற்ற ஊதாரி இளைஞனுக்கு
மேலும்
மனிதனாக வாழலாமென்று வழிவகுத்த
மஞ்சள் நாடா குழுவினர்க்கு-
சின்னஞ்சிறு வயதில் சிந்திக்கும் திறனை வளர்த்த பெற்றோரின்
சொன்னசொற் தவறாது வளர்ந்து
தன் நாட்டிற்குப் பெருமை சேர்த்த மகளுக்கு-
விஞ்ஞான ஆராய்ச்சியினால்
விண்வெளியில் தடம்பதித்து
மீண்டு அஞ்ஞானம் அகல
அனைவர்க்கும் வழிகாட்டும் அணுவிஞ்ஞானிக்கு-
சும்மா கிடைத்தால் அதன் பெயர் விருது அல்ல:
அதைக் கருதி தம்மால் இயன்றவரை
அடுத்தடுத்து முயன்ற பின்னும் தோல்விவர
“அம்மா” எனப் பெருமூச்சில்
அவன் கண்ணால் மழை பொழியத்
துவளாமல் நம்மால் முடியுமென்ற
நம்பிக்கை நெருப்பாற்றில் எதிர் நீச்சல் போட்டவர்க்கே!



# மே தினமே...

**போ**ராடாமல் எதுவும் கிடைக்காது
போராடிப் பெற்றது ஒருநாளும் அழியாது!

பார்முழுதும் இன்றுமே தினவிடுமுறையாம்..
கூர்ந்து பார்ப்போமே எப்படிக் கிடைத்த தென்று...

ஏர்பிடித்து வயல் உழுது...
நீர்பாய்ச்சிப் பயிர் வளர்த்து...
கூர் அரிவாள் கைப்பிடித்து அறுவடை செய்துமே...
நேர்வழியே உழைத்த விவசாய மக்களுடன்

சம்மட்டி, கோடரி, மண்வெட்டி, சுத்தியலும்
தம்கையில் தூக்கிச் சகல தொழில்களையும்
நம்கடமை என்று உழைத்திட தொழிலாளர்
இம்மட்டுமல்ல; இரவுபகல் ஓய்வின்றி...

இருபத்து நான்குமணித்தியாலம் உழைத்தலுத்து...
ஒருமித்து எல்லோரும் ஒரே குரலில் தமது வேலை...
எட்டுமணித்தியாலம் உழைத்தாலே போதுமென்று
திட்டமுடன் வெள்ளைக் கொடியைத் தாங்கி,,,
ஊர்வலமாக முதலாளிச்சமூகம் முன்னே...
கோரிக்கை வைத்துக் கோஷத்தை எழுப்பியதால்...

தடியடியும் தாங்க வொண்ணாக் கசையடியும்..
விடிவுபிறக்கும் வரை வீரமுள்ள மக்களெலாம்..
வெள்ளமென அவருடம்பில் வடிந்த குருதியினால்...
வெள்ளைக் கொடியெல்லாம் சிவப்பு நிறமாச்சு...

முடிவிலொரு நல்ல தீர்ப்பு
வேலையும் எட்டுமணி... விடிவுபிறந்த தென
வீரமுள்ள உழைக்கும் வர்க்கம்
மேன்மையுடன் குரல் எழுப்பி தியாகம் வென்றதென்று...
மேதகுவிடுமுறை "மே"தினம் உலகமெங்கும்!



## நகைச்சுவை (புதுக்கவிதை)

**சி**ந்தனைச் செழுமையில் திளைத்து
நிந்தனைக் குகைக்குள் பதுங்காமல்
வந்தனை வார்த்தைகள் ஓடிவர
பந்தம் வளர்ப்போம் பண்பாக,

பகைமை வளர்க்காத சொல்லாடல்
பற்றோடு பழகும் உறவாடல்
முகைவிடும் நட்புமலர்போல
நகைச்சுவை வளர்க்கும் சந்திப்பு.

அறிவைப் பெருக்கிடும் பாசறை
அன்பைச் சுமந்திடும் கருவூலம்
செறிவான புரிந்துணர்வு பரிமாறும்
செல்லமான உரையாடல் நகைச்சுவை.

அடுத்தவன் மனதைப் பொசுக்காமல்
உடுக்கை இழந்தவன் கைபோல
இடுக்கண் களைவதாம் நட்பென்று
தொடுக்கும் வார்த்தை நகைச்சுவை.



# நாளைய நகரம்

பண்பாடு கலாசாரம் பேணிப்பாக்கும்
பகுத்தறிவும் விருந்தோம்பும் சிறப்பும் கொண்டு
கண்போலத்தான் வாழும் நாட்டில் அமைதி
காத்திடுதல் குடிமகனின் கடமைஎன்று
தண்ணீரால் அழுக்குகளைப் போக்குதல்போல்
தன்மனதில் மன்னிக்கும் தன்மைவைத்தால்,
மண்ணும்தான் உலகவரலாற்றில் உயர்
எண்ணுக்குள் இடம்பிடிக்கும் உண்மைஇது.

தெளிவான சிந்தையுடன் எதிர்காலத்தை
செழுமையான பாதையிலே கொண்டுசெல்ல
நழுவாத உரமுடைய இளைஞர்கூட்டம்
நல்வழிக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்
குழிதோண்டி மனிதகுல விழுமியத்தை
பழிக்கின்ற வீணர்கள் பறந்துஓட
பழிவாங்கும் கல்நெஞ்சரும் பணிந்துவந்து
அழியாத கால்தடங்கள் பதிக்கவேண்டும்.
அயல்நாடு செல்கின்ற அவசரம் ஒன்றால்;
அயல்வீட்டில் சொல்லிவிட நேரம்இல்லை

பயிராக நேசித்து வளர்த்த பூஞ்செடி
புயல்போன்ற பயணத்தால் மறந்துபோனது
தயவான நெஞ்சுடைய வள்ளலார்போல்
தானாகமுன் வந்து தண்ணீர்விட்ட
அயல்வீட்டு "சீனாண்டி"யை நன்றியுடன் பார்த்து
நயமாயென் நன்றிக் கண்நீராய் வழியுது

நம்பிக்கை, பாதுகாப்பு நன்றாய் இருக்க
நல்லெண்ண சிந்தனைகள் முன்னேசெல்ல
எம்முடைய நாட்டைப்போல் தங்கிப்போக
நம்முடைய நாடாக மனத்தால் ஒன்றி
நேசமுடனை, பாசமுடன் மறுமுறை பார்க்க
தம்முடைய பொன்னான நேரம்ஒதுக்கி
தாயாரைக் காணவந்த நாளைய நகரமே!
தமிழுக்கு முன்னெழுத்து என்றால் அகரம்
தாய்மைக்கு வெளிப்பாடு காட்டுமே உதிரம்
சிமிழுக்குள் அடைத்தாலும் வாசனைமதுரம்
சீராட்டும் அரவணைப்பு அன்பின்சிகரம்
உமிக்குள்ளே மறைந்திருக்கும் அரிசி ஆகாரம்
உள்ளன்பு சிந்துகிற கண்ணீர் ஆகாரம்
குமிழ்போன்ற பூகோளத்தின் தெற்கிலேமகரம்
குன்றாதே கவிமாலை நாளைய நகரம்!



## நிழல்தேடும் மரமாக நிலவுரிமைப் பிறப்புக்கள்!

**ம**னிதரும் விலங்கினமும் மாநிலத்துப் பறவைகளும்
புனிதமான நிழலால் புத்துணர்ச்சி பெற்றிடவே
அழியாக் கருணையுடன் ஆறுதல் அளித்தமரம்
நிழல்தேடும் மரமாக நிலைதடு மாறியதேன்?

இளமை உறுதியுடன் இமைப்பொழுதும் கலங்காமல்
களைப்பை உணரவில்லை கடுமையான வெய்யிலிலும்...
சுழற்காற்றுத் தாக்கிக் கிளைமுறிந்து.. முதிர்வயதில்..
நிழல்தேடும் மரமொன்று நிம்மதிக்கு யாசிக்குது.

கட்புலனும் கைகாலும் கறுத்துச்சிறுத்தாலும்
முட்கம்பி அடைப்புக்குள் முடங்கிக்கிடக்கும்..
வழிபிறக்கும் நம்பிக்கையில் வாசலை நோக்கியபடி
நிழல்தேடும் மரமாக நிலவுரிமைப் பிறப்புக்கள்!




# என்னருகே நீ இருந்தால்...!

**தா**ய்க்குப் பின்தாரமென்று சொல்லி வைத்தார்
தாய்போலத் துணையாளும் வாய்த்துவிட்டால்...!
வாய்ப்பாகும் இணையர்கள் வாழ்நாள்யாவும்
ஓய்வெடுக்கும் வயோதிபமும் வந்தபின்னர்
நோயுற்றுத் தெம்பிழந்து நொந்துபோனால்...!
சாய்ந்திருக்க உதவிசெய்தால் இளமைக்காலம்
தோய்ந்தகாதல் குன்றாமல் தொட்டுநிற்கும்
தேய்கின்ற எலும்புகளும் தெம்புபெறும்.

“காரியங்கள் யாவற்றையும் கண்மணி செய்வதால்
சூரியன்போல் உலகைச் சுற்றி வருகின்றேன்”- கவிப்
பேரரசின் கவிதையிது நினைத்துப் பார்த்தேன்...
நீர்வளமோ நிலவளமோ இல்லா நாட்டை...
பாருலகில் மூன்றாம் தரத்தை... முதல்தாரமாய்...
சீரான நிலைமைக்கு உயர்த்திக் காட்ட...
வேரற்ற பொருளாதார விளிம்பில் நின்றேன்
வேராக நீயிருந்து வீரம் தந்தாய்!

அந்நாளில் அன்பொழுகச் சட்டக் கல்லூரிதனில்
குன்றாத புரிந்துணர்வில் குதூகலமாய்க் கற்றோம்
என்னருகே நீயிருந்து ஏற்றங்கள் தந்ததற்கு...
என்னதவம் செய்தேனோ இங்கிதமாய்த் தலைநிமிர..?
உன்னருகே நானிருந்து உனக்குப் பிடித்தமான
பொன்மொழிகள், கவிதைகள், போற்றும் தியானங்கள்...
என்னால் இயன்றவரை வாசித்துக் காட்டுதற்கு...
என்னருகே நீ இருந்தால் என்நாளும் பொன்னாளே!

13.09.2010 திங்கட்கிழமை தமிழ்முரசுப் பத்திரிகையில் 2ம் பக்கத்தில் வெளியான செய்திதான் இக்கவிதை.
சிங்கப்பூரர் அனைவரினதும் மதிப்பிற்குரிய மதியுரை அமைச்சர் லீகுவான் இயூ குரலாக அது இருந்தது.



# முள்மகுடம்

**அ**ளவுக்கு மிஞ்சிய அதிகமான வருவாய்
பிளவான எண்ணத்தில் பிற்காலச் சந்ததிக்கு
களவாக வெளிநாட்டு வங்கிக் கணக்கினிலே
உளவறியா வண்ணம் பணத்தைப் போட்டுவைத்தார்.

நாட்டை முன்னேற்ற நலிந்தோர்க்குக் கைகொடுக்க
வாட்டுகின்ற கொடூர வறுமையை ஒழித்துவிட
ஆட்டிப்படைக்கின்ற அசையாத அப்பணத்தை
மீட்டெடுத்துத் தாய்நாட்டை மேல்நிலைக்கு உயர்த்திவிட...

செத்தொழிந்து போனபின்னும் சேமிப்பு பிள்ளைகட்கு
மொத்தமாகப் பெருகுமென்ற மோசமான கற்பனைகள்...
அத்தனையும் தவிடுபொடி அரசாங்கப் புலனாய்வு...
மொத்தமாகச் செயற்பட முழுப்பணமும் தாய்நாட்டில்!

வெளிநாட்டு வங்கியிலே வீணாகும் பணமதனை
வெளிக்கொணர்ந்து தாய்மண்ணின் மேம்பாடு
செழிக்குமென்றால்...
ஒளிவழியில் பார்க்குமவர் ஒளியிழந்த பொம்மையானார்
பழிப்பான முள்மகுடம் இதுவென்று உணருவரோ?



# மணல்வீடு

**சீ**மான்கள் வாழ்வைச் சிந்தையிலே நிறுத்தி
தாமுமவர் போலத் தகுதியெனக் காட்ட..

கடன்பற்று அட்டை கை கொடுக்கும் என்று
உடன்செலவு, உதவாத ஊதாரித் தனத்தால்...

அத்திவாரம் பலமான ஆணித்தரக் கட்டிடத்தை
மொத்தமாகச் சுனாமி,
சூறாவளி தாக்குமெனில்,

உழைப்பற்ற பொருளாதார ஊசலாடும் மனிதனுக்கு
மழைநீர் பொழிந்த பின் மணல் வீடு நிலைதான்!



# பகலில் தோன்றும் நிலவு

**அ**திகாலை வேளையிலே அழகாய்க் கண்விழித்த பின்னே
குதிக்காலில் நின்றுகொண்டு "தூக்கு" என்று கையசைப்பாய்!

உன்னைத் தொடும்போது உள்ளம் குளிர்கிறது
மென்மைப் பரிசத்தால் மேனியெலாம் சிலிர்க்கிறது
கவிபாடும் புலவர்கட்கு கற்பனையை வளர்க்கின்றாய்...
கைகளான
கருமேகம் மறைத்தபின்பு கண்ணாமூஞ்சி காட்டுகின்றாய்!
புலர்கின்ற விடிபொழுதின் புதுமையான வெண்ணிலவே!
மலர்ந்தும் மலராத பாதி மலராகக் கண்திறந்தாய்!

அகலாது இருக்கின்ற அருமையான பேரக்குஞ்சே!...
என்னைத்தொடும்
பகலில் தோன்றும் நிலவு பாருலகில் வேறு ஏது?

07.10.2010 அன்று எனக்கு 72 வயது



# கற்றுத் தரும் காடு

**உ**ரமின்றி நீரின்றி ஊன்றுகோல் தழுவாமல்
வரமாக மனிதருக்கு வளத்தை வழங்குவதால்
வற்றாத ஈகைக்குணம் வானுயர்ந்த மரங்கள்...
கற்றுத்தரும் காடு காட்டுதே தன்செயலால்.

நிலத்தடித் தண்ணீரை வேர்களால் உறிஞ்சி...
பலமாகத் திடமாகப் பசுமையாய் உயர்ந்து...
மழைநீரைப் பூமிக்கு வருவிக்கும் தொழிலால்...
பிழையின்றிச் செய்கின்ற பேருதவி ஒன்றினால்...

நப்பாசை சிறிதுமின்றி நலங்கருதாப் பெற்றோர்
பிற்காலத்துத் தங்களது எதிர்பார்ப்பு இன்றி...
தப்பாது கடமைகளை தாமதியாது செய்கின்றார்
எப்போதும் கற்றுத்தரும் காடு அறிவுரைகள்!



## ரணங்கள் ஆறவில்லை

"**நா**ட்டுக்கு உழைத்து நிற்கும் நல்ல தமிழ்த்தாய்க்குலமே
வீட்டுக்கு ஒருமகனை வீரமுடன் தாராயோ" என
உன்கை யெழுத்தில் சந்திதோறும் சுவரொட்டிகள்,
உன்பிரச்சாரத்தால் உதித்தபல ஆயிரம்ம் போராளிகள்
என்மூத்த குழந்தை உன்னை விடுதலைக்காய் கொடுத்தேன்.

ஏற்றத்தாழ்வு இல்லாத எழுச்சியுறு அரசமைக்க...
ஆற்றல்மிக்க தோழர்கள் அயராது பாடுபட...
போற்றும் இளமைப் பொன்வசந்தம் சிறைக்குள்ளே...
மாற்றுச்சமுதாய அமைப்புக்காய் வெந்தோர் பலர்!

நீயும் விதிவிலக்கல்ல; மூன்றுமுழு ஆண்டுகள் சிறைக்குள்ளே...
சாயாத மனவுறுதி... சஞ்சலத்தைப் போக்கிவிட,,,,
பாயும் பாச அலை பெற்றார், சகோதரம்மேல்,,,
காய்தல் உவத்தலின்றி கடமையுணர்வுள்ளவன்நீ!

தேசம் நேசித்த உன்தந்தை இழந்தேன்
தமிழ்நேசித்த உன்னையும் இழந்தேன்
விடுதலை நேசித்த சந்ததி இழந்தோம்,
ரணங்கள் ஆறவில்லை, ஆறுதலும் கிட்டவில்லை
இராசான்,,, இராசா... ராசான்ராசா...
வாழ்ந்த ஆண்டோ முப்பத்தெட்டு... வாயடைத்தோம்.. ராசனே,,,!
ஆழ்ந்த துயரத்தில் அழுகின்றோம் ஆறுதில்லை... மனம்.
தாழ்ந்துபோகவிடாமல்... தாயுடன், தங்கை, தம்பியும்,, என்றும்
வீழ்ந்துவிடாமல் வேரெனவே நீயிருந்தாய்!– அம்மா

# இற்றைவரை சத்தியமனை தாஜ்மஹால் தானெமக்கு!

**க**ணவனால் மனைவியின் நினைவுக்குக் கட்டிவைத்த
காலத்தால் அழியாத காதல் சின்னம் தாஜ்மஹால்!

துணைவனை மனைவியவள் தூண்போலவே தாங்கி
பணிவாகக் குறிப்பறிந்து பொதுச் சேவைக்கனுமதித்தாள்

சாதிமதம் பேசுகின்ற உயர்சாதிக் குடிப்பிறந்து...
பேதங்கள் பார்க்காது பெருமகனார் வாழ்ந்தாரே!

ஒடுக்கப்பட்ட மக்களை ஒருமித்த தோழரென்று...
மதித்து வரவேற்று மரியாதை செலுத்தியதால்...

கூடாத சாதியென்று குறிப்பிட்ட ஒரு சிலரை...
வாடகை வீட்டினிலே உரிமைக்காரன் விடமாட்டான்.

சொந்தமாக வீடுகட்டச் சிந்தித்தாள் அம்மணியாள்
சொந்த பந்தங்களிடம் மண்டியிட மனமில்லை!

மாற்றுச் செயலாக வங்கியிலே கடனெடுத்து...
நாற்பது+ இருபத்தைந்து = ஆயிரம் சதுரடி...

வேற்று நாட்டு ஓடுகள் விலையதிகம் என்பதால்...
மேற்கூரைகூட 'அஸ்பெஸ்டாஸ்' தகடுகளாம்.

பார்ப்பதற்கு வீடாகப் பார்வையிலே தெரிந்தாலும்...
இற்றைவரை சத்தியமனை தாஜ்மஹால் தானெமக்கு!

மிடுக்காகக் கணவனின் மீண்டுவரா நிகழ்ச்சிக்கு
அடுக்கடுக்காய் அவர் தோழர் அலுவல்கள் நடத்தியதால்...
இற்றைவரை சத்தியமனை தாஜ்மஹால் தானெமக்கு!

# மணியம் என்றால் மனிதம்

**கா**னுயர்ந்த மரங்களினால் மழைநீர் பொழிவதுபோல்
வானுயர்ந்த கோபுரங்கள் வனப்புடனே மிளிர்வதுபோல்
நாணுயர்ந்த அம்புகள் போல் நாட்டிலுள்ள தோழமையால்
தானுணர்ந்த சேவையதால் தரணியிலே வாழுகிறீர்...

கார்த்திகையின் கைவிரிப்பு– காலனையும்
கட்டி அணைத்துக் கொண்டதா?
மானுட நேசத்தின் பசுந்தளிரைப்
பாதியில்பிரிந்து– கால்நூற்றாண்டு ஓடினவோ?
மணியம் என்றால் மனிதம் என்றும்
மடமை கொண்டோர்– கண்டஞ்சும்
மாவீரன் என்றும்
மார் தட்டிக் கொண்டோமே!
ஆதிக்க வெறியின் கயமையை– எதிர்த்து
அஞ்சாமையின் அர்த்தம் சொன்னவன்—நீ
ஒடுக்குமுறையைத் துவம்சம் செய்தது– வரலாறே!
இரத்தம் தோய்ந்த வெண்கொடிக்கு—தான்தெரியும்
வெற்றிக்கு வலிகள் தேவைஎன்று!
உழைப்பாளியே தேசத்தின் உந்துசக்தி
பாட்டாளியே பார் ஆளவேண்டுமென
பால்யவயதின்—பார்வையை
தேடிப்படித்த நூல்களும் தூண்ட
பொதுவுடமைக்குள் ஐக்கியமானாய்!
இரும்புக்கரம்கொண்டு
துப்பாக்கிகள்—கொடும்கொலைபுரிய
நிதர்சனத்தின் நிஜம்புரியாது
மந்தையாக்கப்பட்ட மனிதக்கூட்டத்தில்
மௌனம் காப்பரண் ஆகியது!
வரலாறுகள் திரிக்கப்பட்டாலும்
உன்வாழ்வின் நேர்மை
என்றோ வரலாறாகும்!
மானிட வாழ்வியலின் உன்னதற்கான
உன்போராட்டத்தில்
நானும் எறும்பென இறும்பூதுகின்றேன்
நீளும் நினைவுகளும்
நீடிக்கும் கண்ணீருமாய் காலம் ஓட
மரணத்தின் எல்லைகளில்
வாழும்எனக்கு– உன்வாழ்வுஓர்
உந்து சக்தியே!



# மணியம் ஒரு மானிட அரும்பூ

**த**ஞ்சை இளவரசியின் குதிரைமுகம்
மாறிய மாவிட்டபுரத்தில் பிறப்பூ
பிஞ்சுவயதில் தமக்கையார் குடும்பத்துக்
கொழும்பில் வளர்ப்பூ
சென்- ஹென்றீஸ் கல்லூரியின்
மாணவனாக ஆங்கிலப்படிப்பூ
தன்னுடன் படிக்கும் நண்பன்
கோவிலுக்குள் வரத் தயங்கிடத் தவிப்பூ

காங்கேயன்– சீமெந்து ஆலையில்
பொறியியல் பயிலுநராய் நியமிப்பூ
அங்குள்ள உணவகத்தில் குறிப்பிட்ட
சாதியினரைத் தள்ளியதால் பதைப்பூ
மேட்டுக் குடிமக்களுக்கு மாத்திரமே
கதவுகள் திறப்பதால் பக்தியில் வெறுப்பூ
ஆட்டிப்படைக்கும் மத சம்பிரதாயம்
மனிதனுக்கு அவசியமில்லையெனத் துறப்பூ,

இடதுசாரிக் கொள்கைகளில் சமத்துவம்
கண்டு ஈடுபட விருப்பூ
நடக்கும் பாதையை வழிமறிக்கும்
நில ஆதிக்க நீசர்களில் கடுப்பூ
ஊர்வலம், போராட்டம் நடக்கையில்
ஊக்கமான துடிப்பூ
ஊர்வாய் அடங்கி ஒடுங்கி
கூனிக்குறுகுவோர்க்கு மறுப்பூ

ஆட்சியினர் எலும்புகளை அடித்து
நொருக்கினாலும் முகத்திலே ஒருசிரிப்பூ
வீழ்ச்சி ஒருபோதும் மானிடத்தை
ஒடுக்காதென்பதில் தொடர்ந்த—உழைப்பூ
மாற்றியக்கத் தோழர்களும் நாட்டு
நலன்கொண்டால் கைகோர்த்த முனைப்பூ
நாற்றிசையும் ஐக்கியத்தை வலுப்படுத்த
நாவசைக்கும் மனிதப் பண்பூ

மணவாழ்வில் மறுக்காது தன்னுடன்
வழிநடப்பாள் என்ற அன்பூ
இணக்கமான இருதயம் இருப்பது
கண்டு உறுதியான மணமுடிப்பூ
கற்கைநெறி மானிடவிழுமியத்தை
நேசிக்கத் தொடர்வகுப்பூ
முற்போக்குச் சக்திகளுடன் சகலரையும்
இணைப்பதில் ஒத்துழைப்பூ

“தாயகம்” இலக்கிய இதழை ஆரம்பித்து
ஆயுள்பரியந்தம் தலையங்க வடிப்பூ
தகாதசெயல் கண்டுவிட்டால்
தட்டிக்கேட்டு விசாரிக்கும் கண்டிப்பூ
கருத்தரங்கம், நூல்வெளியீடு, பத்திரிகை
வளர்ச்சி கண்டு பூரிப்பூ
விரும்பாத வீணர்போல் சோறுண்டு
மரணிக்க விரும்பாத அரும்பூ




# கார்த்திகை விளக்கீடு ஒரு நினைவு

இந்தியா தமிழ்நாடு பண்ருட்டி நகரினிலே
சந்தித்த வாகன விபத்து தண்ணீர் லாறிஒன்று
சிந்தித்திராத திடீர்ச் செயலால் பிரயாணக் காருடன்
பந்தபாசம் துறந்து ஒருநொடியில் பறந்துவிட்டாய்!

கார்த்திகை விளக்கீடு வந்தால் உன்னைநினைக்க
நேர்த்தியாய் கொழுக்கட்டை இரண்டாகப் பிரித்து
தங்கைக்கு ஒருவாய், தம்பிக்கு ஒருவாய் என்று
உன்கையால் ஊட்டியதை மறக்காத தாய்உள்ளம்!

கண்ணெதிரே கருணையுள்ள உனதுசெயல் நினைவினிலே..
'கண்டரக்' கோட்டை பாலமருகில் உனது நினைவிடம்
கட்டிடமாய் இருக்குதென்று கண்டவர் கூறுகையில்...
மட்டில்லாத மனிதநேயம் மண்ணில் நிலைத்திடுமாம்...

22.11.2018 விளக்கீடு



## பெரியாரின் வாழ்வில்...

பழமையில் ஊறிப்போய் பக்குவப் படாமனத்து
இளைஞர்கள் மன எண்ணப் போக்கினை மாற்றிவைத்து
களைப்படைந்த வயதினிலும் வாலிபன்போல் நடந்து
தளர்ச்சியைக் காட்டாது தைரியமாய் வாழ்ந்தவரே!

முற்போக்கு சக்திகளை மும்முரமாய்ச் செயற்படுத்தி
பிற்போக்கு சக்திகளின் பிதற்றல்களைப் பொய்யாக்கி
செம்மையாய்ச் செய்துகாட்டும் செயலில் இறங்கியதால்
உம்மைமற வாதநல்ல உள்ளங்களில் வாழுகிறீர்!

சமுதாயச் சீரழிவில் மனிதவினம் நசுங்குவதைச்
சகித்துப் பொறுத்துக் காலத்தைக் கடத்தாமல்
கண்ணாலே கண்டவுடன் களைந்தெறிய வேண்டுமென்று
எண்ணத்தைச் செயலாற்றி இறுதிவெற்றி கண்டவரே!

போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார்
தூற்றட்டும் என்றகொள்கைப் பிடிப்புடனே திடமாக
ஆற்றல்பல படைத்தவரே தமிழகம் மட்டுமல்ல;
ஏற்றம்பெறத் தமிழர்களின் கண்களைத் திறந்தவரே!

***மணியம்மையின் பங்கு...***

பணிவிடைகள் யாவற்றையும் பயபக்தியுடன் செய்து
துணிவாக முடிவெடுத்துத் தொண்டாற்ற வந்தவரே
மணியம்மை பெயர்கொண்ட மாதரசி பெரியாருக்கு
தனியாளாய்ச் சேவைசெய்து தன்னைநிலை நாட்டினாரே!

உணவுகள், உடைகள், உறங்குமிடம் ஓய்வுகொள்ள
சுணக்கம் எதுவுமின்றிச் சுறுசுறுப்பாய் செயலாற்றி
குணவதியாம் மணியம்மை தியாகமான உணர்வுடனே
அணங்கிவள் வந்தபின்னர் ஐயனும் உயிர்வாழ்ந்தார்!

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
நல்லாள் மணியம்மை குறிப்பறிந்து கைகொடுக்க
பொல்லாதோர் மனம்மாறி போற்றினர் அவர்திறனை
எல்லோரும் மதிக்கும்படி பெரியாரைப் பேணிக்காத்தார்!

# விடைபெறும் நேரத்தில்...

எனது வாழ்க்கைத் துணைவராக வாழ்ந்து, மக்களுக்காக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, தேனீர்க் கடைப் பிரவேசம், ஆலய பிரவேசம் ஆகிய செயல்களில் ஈடுபட்டு தடியடிகளை சந்தித்து உடல்நிலை பாதிக்கப்பட்ட மதிப்புக் குரிய கே.ஏ. சுப்பிரமணியம் அவர்கள்

1962ம் ஆண்டு ஜனவரி மாத 'தேசாபிமானி' என்ற பத்திரிகை H.M.B. மொகைதீன் அவர்களை ஆசிரியராகக் கொண்டது எமது திருமணப் புகைப்படத்தை பிரசுரித்து "புதுமைத் தம்பதிகள்" என்று அடையாளங் காட்டியது. அக்காலத்தில் கணனித் தொழில்நுட்பம் இல்லாததாலும், கைவசம் இருந்த பழைய புகைப்படங்கள் நாட்டுநிலையால்... இன்று கைவசம் இல்லாமல் போய்விட்டது.

**உ**ங்களால் உலகைப் பார்த்தேன்
உழைப்பாளர் வரலாறு கண்டேன்
மக்களுக்கா வாழ்ந்த மானிடரின்...
மகத்தான தியாகம் படித்தேன்.


நடை தளர்ந்தும் இறுதி மூச்சை
விடைபெறும் நேரத்தில் பிறந்த நாட்டில்...
கடைசி இரத்தம் பௌத்தனின் தானம்
தடையற்ற உணவு முஸ்லீம் சகோதரிதான்!

நண்பனாய், தோழனாய் நல்வழி காட்டும்
திண்மை, மனோதிடம், தீர்க்க தரிசனம்
உண்மையே வாழ்வதாக்கி உத்தமனாய் வறுமை
எண்ணத்தில் வராத ஏறுநடை போட்டவரே!

சகதோழர்களை மதித்து அவர்களது சேவையை
சுகபோகங்கள் உதறிய சுத்த வழிகாட்டிகள்
அகமும் புறமும் இதயசுத்தி ஒன்றினால்
நகமும் தசையும் போல தோழமையை இணைத்தவரே!

தமிழ்நாட்டின் "ஜனசக்தி" தொடக்கம்
"தாமரை" பத்திரிகை "சரஸ்வதி" சஞ்சிகையும்
பகுத்துண்டு வாழ்ந்த "நம்பூதிரிபாத்" கேரளாவை
ஜீவானந்தம், ஜெயகாந்தன் உங்களால் அறிந்தேன்!

தோழமையை நினைவு கூர்ந்து வருடாந்த
நவெம்பர் இருபத்தேழில் நினைவுநாள்
வழமையாக நடாத்து கின்ற கட்டமைப்பு
யாழ்ப்பாணம் கொக்குவில் நானும் பங்கெடுப்பேன்


கவிஞர் இ.முருகையன்

# மூத்த கவிஞன் முருகையன்

**மு**ருகையன் ஈழத்தின் முதன்மைக் கவிஞர்களுள்
அருமைச் சீராடல் அனைத்திற்கும் அமைந்தவரே!
பெருமைப் படுமளவு பாட்டாளி வர்க்கத்தின்
உரிமைக்காய்க் குரல் கொடுக்கும் தாயகத்தின் வாயிலாக
ஒருமைப்பட்ட இதயத்துடன் ஒத்துழைப்பும் வழங்கிச்
சரியான பார்வையுடன் சரித்திரக் கவிதைகள்...
வரிசையில் முற்போக்கு வதனத்தில் ஓரமைதி
பரிபாலன சேவையாம் பல்கலைக்கழகப் பதிவாளர்
தெரிவு செய்தமார்க்கமது முற்போக்குச் சிந்தனைகள்...
பெரியோன் இவரென்று எல்லோரும் போற்றுவரே!

அல்லும் பகலும் தேசிய கலை இலக்கியச்
சொல்லும் செயலும் சுடரான சிந்தனையும்
வல்லவராம் இருமொழியில் தாய்மொழிக்குத் தனியிடமாம்
எல்லையில்லாத கவிதைகள் ஆயிரமாம்
நல்ல கருத்துடன் நயம்பட வடித்த கவி
அத்தனையும் மானிடத்தின் அரிய விடியலுக்கு
சத்தமில்லா எதிர்கால விழிப்புணர்வுச் சூரியனாய்
திங்களென்ற குயிலும் திருமகளும் மங்காத்
தங்கமகன் கண்ணன் மாநிலத்தில் கண்மணிகள்...
முல்லைச் சிரிப்பும் முறவலித்த முகமுமாய்...
இல்லையே இவனென்று நினைக்க முடியவில்லை!

மானிடர் அழிவதுண்டு மானிடம் அழிவதில்லை
நானிலத்தே வாழுகையில் நலிந்தோர்க்குக் குரல்கொடுத்து
இறுதிமூச்சு இருக்கும் வரை என்னிதயக் கருத்துக்களை
அறுதியாக உரைப்பேனென அரும்பெரும் கவிதைகளில்
வடித்து வைத்துச் சென்றதெல்லாம் மக்களின்
துடிப்பை வெளிக்காட்டும் துல்லியப் பளிங்கு போல்
அடியொற்றி வாழ்வோரின் அடிமனதில் ஒளிவிடும்
விடிவெள்ளி ஆனவருள் முருகையன் முதற் கவிஞன்.



# காஞ்சித் தலைவன்

**அ**கரத்தை முதலெழுத்தாய்க் கொண்டிருந்த அண்ணல்இவர்
அயராது தமிழ்வளர்க்க அண்ணன்தம்பி உறவுபூண்டு
சிகரத்தில் தாய்மொழியை செம்மொழியாய் ஆக்குதற்கு
செழுமையான வழிவகைகள் சிறப்புறவே படைத்துச் சென்றார்.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்து
ஆதியில் இருந்து வந்த அடிமை குடிமைமுறை அகல
தீதில்லா மார்க்கத்தை தமிழ்மக்கள் உணரவேண்டி
'நாதி அற்றவனா திராவிடன்..?' என்று முழக்கமிட்டார்.

தமிழ் எங்கள் உயிரென்று தடம்பதித்து வாழ்ந்தஇவர்
உமிழ்கின்ற ஆங்கிலத்தின் உச்சரிப்பு உலகளாவ
அமிழ்தான தமிழ்ப்பேச்சின் அடுக்குமொழி வீச்சுகளும்
குமிழ்விளக்காய் ஒளிவீசுதே தமிழன் வாழும் நாடுகளில்.

உச்சாணிக் கம்பத்தில் உயரக்கொடி பறக்கும்
அச்சாணி போன்ற அறிவாலயம் செழிக்க
மெச்சிடும் விமானத்தளம் மேலான பல்கலைகழகம்
இச்செகத்தில் யாருக்கு இத்தகைய சிற்ப்புஉண்டு?

மண்ணுக்குப் பொருந்துகிற விவசாயப் பயன்பாட்டை
எண்ணமே செயலாக்கி ஏழைகளின் பசிபோக்கி– பயிர்
வண்ணம்போல் கடமைகண்ணியம் கட்டுப்பாடு
கண்ணாகக் காத்துவைத்த காஞ்சித்தலைவன் இவன்.

# கவிமாலை புனலிலே நன்னீர்

**சி**ங்கைக் கடற்கரைக்கவி மாலைப் பத்தாம் ஆண்டை
பொங்கும் பொறுப்புடன் புரவலர்கள் அயர்வு இன்றி.
தங்கநிகர் விழாவாக தேசியநூலகக் கீழ்த்தளத்தில் நடாத்த..
முந்தைய ஆசான் பிச்சினிக் காடார் வந்ததனால்...
சங்கொலிபோல் கரவொலியில் சட்ட அமைச்சரும் வருகைதந்தார்.
பங்கமிலாச் சினிமாத்துறை மறுமீட்சிச் சேரனுடன்..
வங்கக்கடல் பரந்து விரிந்து நிறைந்ததுபோல்
பங்களிக்கப் பார்வையாளர் பலதிசையால் வந்திருந்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்தை தரமான கானத்தில் கலையரசி பாட...
அமிழ்தாக "அதுமட்டும் வேண்டாம்" தலைப்பில் ஐவர் கவிசொல்ல..
சமூகமளித்த அத்தனை பேரும் மகிழ அமைச்சரின் கையினாலே..
கணையாழி விருதும் தங்கப் பதக்க விருதும் வழங்க..
கமழ்கின்ற நறுமணத்து "பொன்மாலைப் பூக்கள்" நூலை..
கவினுறு சேரன் தன்கரத்தினால் வெளியிட்டாரே! நூலைவாங்க..
புவியிலே மறுபிறப்பாய் பிறந்திட்ட இந்தத்தாயை..
"எங்களின் ஔவை இவர்" என்றாரே புதுமைத் தேனீ.
சிந்தனை கடந்த காலத்தைத் திரும்பிப்பார்க்க,,
வந்த இவ்வுரிமை.. அன்பு.. அரவணைப்பு.. பாசம்..
எந்தனுக்கு எப்போது இந்த இணைப்பு ஏற்பட்டதென்றால்..?
சொந்தக் கனவிலே நிகழ்ந்த கவிமாலைக்குள்ளே வந்த—அந்த
நனவுக்குப் பின்னால் தானே.. நானிதை உணர்ந்துகொண்டேன்.
கனவல்ல; யாவும் உண்மை கவிமாலை எந்தன் அன்னை
'இன்னும் கேட்கிற சத்தம்' சொன்ன புதுமைத்தேனீ தன்குரலில்
'இன்னும் பலசொந்தங்கள் மனிதருக்கு வேண்டும்' என்றார்.

மனதிலே பற்பல இழப்புகள்... மரணத்தாக்கம்.. வாட்ட
தினமும் ஏதாவதொரு திசையறியாத் திணறலுடன்– உலர்
வனத்திலே தனியாளாகத் தாகமிகுதியால் நாவரண்டு— கவிமாலை
புனலிலே நன்னீர் உண்டபுத்துணர்வாலே—தினைப்
புனத்திலே வள்ளியாக மறுபிறப்பெடுத்தேனென்று...
எனக்குள்ளே சொல்லிக் கொள்ள இக்கவி பிறக்குதையா!
கனதியான உறவுக்குள்ளே கால்பதித்த கர்வமொன்று
தனக்குள் தான் சொல்லுகிற தாயாக இருப்பதாலே!



# டிசம்பர் பூ

**சொ**ற்களில் வடித்தோ சொல்லியோ முடியாத
அற்புதச் செயலால் ஆசிரியை சுகந்தி
நற்பணி செய்து நானிலம் போற்ற
பெற்றதாய் போலவுன் பேருயிரை நீத்தாயே!

வேதாரணியம் கத்தரிப்புலம் காமாட்சிக் குளத்தில்
பூதாகாரமான உயிர்ப்பலிகள் நடக்க விடாமல்,
சாதாரணமாக உயிர்காக்கும் நீச்சலே தெரியாத...
ஆதாரமற்ற மாணவர்களை அக்கரை சேர்த்தாயே!

இருபத்தி ஒரு வயதில் இன்னுயிரைத் துச்சமென...
பருவ வயது பட்டக் கல்வி பெற்ற மங்கை...
அரிதாகப் பூத்திட்டாய் டிசம்பர்க் குளத்தினிலே
புரிந்துன் தியாகத்தால் டிசம்பர் பூ நீயே!

# மாணவனாய்... ஆசிரியராய்...

**வவு**னியாப் பூந்தோட்டக் கல்வியியற் கல்லூரியில்
பவுத்திரமான ஆசிரியப் பயிற்சி பெறுங் காலத்தில்
கீழ்ப்படிவும் நன்றியுடன் சேர்ந்த செயற்பாடும்..
சூழ்ந்திருந்த மாணவ மணிகளுள்ளே தலை சிறந்த
தாழ்ப்பாளில்லாத் திறந்த மனத்தன்னிரக்கம் கொண்டவராம்
காழ்ப்புணர்ச்சி இல்லாத கர்மவீரன் 'ரணேஸ்' என்போம்
ஊசிமுனைத் தராசுபோல உண்மைக்கு உருவளித்து
ஆசிரியப் பணிக்காக அல்லும் பகலுமுயன்று நின்றார்.

சாகும் வயதுமல்ல; சாக்காடு போகும் வயதுமல்ல;
வேகும் மனதுடன் உன்சக ஆசிரியர் மாணவர்கள்
தொழுதழுது புலம்புகிற துணையாளின் மதலைகளின்
அழுகையொலி கேட்கிறதே அன்பார்ந்த உறவுகளாம்
பெற்றவரும் பிறந்தவரும் உகுக்கின்றார் கண்ணீராய்...
'பிரிவென்ற' மரணமது பிரித்தோ 'ரணேஸ்' என்று...
நாளைக்குச்சுகப்பட்டு வீடு வரும் நம்பிக்கையில்...
ஏழைந்து வயதினிலே எல்லோரையும் கைவிட்டாய்!

உயரதிபர் பதவியது உன்னருகில் நெருங்கையிலே– மிக
உயரத்தில் சென்றுவிட்டாய் உறவுகளைவிட்டுவிட்டு
சமுதாய அக்கறையும் சமூகநலன் விழிப்புணர்வும்
அமுதான சேவைசெய்த ஆசிரிய மணியிவனே.. மக்கள்
கழகத்தின் உயர்வினிலே கண்ணியம் காத்து நின்றாய்..
உழவுக்கும் தொழிலுக்கும் உறுதுணைவழி சொன்னாய்
பழகுதற்கு இனியவனே நற்பண்பான இயல்பினனே..
அழுதாற்ற முடியாது ஆறாதெம் மனத்துயரம்!

நீ வாழ்ந்திருந்த காலத்தில் வாடாமலர்ப் புன்சிரிப்பும்
ஈகைநிகழ்வும் விருந்தோம்பும் பாங்குகள் நிறைந்த
வாகைமரநிழல் அணைகின்ற வாயில்லாச் சீவன்கட்கு..
நாகை ஒளிவிளக்காய் வழிகாட்டும் தீபமானாய்...!
சொற்பவயதுள்ளே நீ சுடரொளியாய் மிளிர்ந்ததனை
அற்புதம் என்போமோ ஆறாது எம்மனது...
ரணமாகி இதயமெலாம் நொந்து வலிக்குதய்யா!
'ரணேஸ்' என்ற ஈரநெஞ்சினை எண்ணுதய்யா!

# சுதந்திரத்திற்காய்...

'புதியபாதை' பத்திரிகை தானாக முளைக்கவில்லை
பதியம் வைத்து நீரூற்றிப் பாதுகாத்து வளர்த்தவர்
வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியினில்
சுட்டும் செழிப்பான சுழிபுரக் கிராமத்தில்...
சதாசிவம் ஆசிரியரின் சாந்தமான மகனாய்...
உதாரணம் காட்டும் முன்மாதிரி மாணவனாய்...
'விக்ரோரியா' கல்லூரிப் படிப்பின் பின்னர்
தக்கதான வழிசொன்ன சிவசண்முக மூர்த்தியிவன்

ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபத்து ஒன்பதிலே
ஆயிரக்கணக்கில் அரசாங்க ஊழியர்கள்
பாதிக்கப்பட்டார்கள் சிங்கள மொழியறிவு
சோத னையில் தேறினால்தான் வேலை நிரந்தரமென்று..
அரசாங்க கட்டளைக்குக் கட்டுப்பட்ட பலர்
அரசாங்கக் கடமையில் ஓய்வு பெற்ற டாக்டர்
திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த ஆசான்
திருவாளர் தம்பையா இல்லத்திலே நடாத்தும்
சிங்களமொழி வகுப்பில் நானும் போய்ச் சேர்ந்திட்டேன்
அங்குவந்த மாணவருள் சண்முகமும் தம்பியானார்.

சகலரையும் மதிக்கும் சந்ததியார் தன்னுடனே
குகபூசணி, பவானி, குருக்கள் பிறைசூடிக் குரு
அப்படிப் பலபேர் அவ்விடத்தில் படித்தார்கள்.
"அக்கா"வென அழைத்து எனக்குற்றதுணையானார்கள்.
"புத்தரின் போதனைகள் ஏற்கனவே திருக்குறளில்
பத்திரமாக இருப்பதைப் பயன்படுத்தி வாழுங்கள்"
என்றெமக்குக் குருவானவர் எடுத்தியம்பிக் கூறியவை
நிற்கிறதே மானிட நெஞ்சத்தில் பசுமையாக.

அந்தாண்டு 'மே'தின ஊர் வலத்தைத் தடைசெய்து
குண்டாந்தடி யடிகள் கோரமாகத் தாக்கியதால்
என்துணைவர் உட்பட எண்ணரிய தோழர்கள்

சாலையில் சேர்த்துப் பாதுகாப்புக் கொடுத்தனரே!
வேலையை வைத்தியர்கள் விசுவாசமாய்ச் செய்தார்கள்.
உறவுகளின் துணையற்று உருக்குலைந்த எந்தனுக்கு
மறவாத தோழர்கள் போல்என் வகுப்புச்சோதரரும்
தாமாக முன்வந்தென் மதலைகட்கு உதவினரே
ஆமாம்! சண்முகனின் அன்பினை என்னென்பேன்!

வருடங்கள் பத்துக் கழிந்து ஓடியபின்...
பெருமைபெறு 'சுந்தரம்' என்துணைவர் மணியத்தார்
மதிக்கின்ற பொதுவுடமைத் தத்துவத்தின் பூரணத்தால்
'புதியபாதை' பத்திரிகை– புத்தாக்கச் சிந்தனையில்
அடிமைப் பட்டதமிழ் மக்கள் விழிக்க வேண்டி
முடிவான உறுதியுடன் அச்சகத் தொடர்பு கொண்டார்.
சித்திரம் வரைவதிலே சிறந்த சுந்தரத்தார்
அத்தனை திறமைகளும் 'தாய்மாமன் இராச
இரத்தினத்தின் வாரிசு' என்றுமகிழ்ந்திட்டார்.
தன்னடக்கத் தலைவனாய் இருந்த தெல்லாம்
பறைசாற்ற விரும்பவில்லை விளம்பரமும் தேடவில்லை
குறைகூறல் விரும்பாது செயல்வீரனாய் வாழ்ந்திருந்தான்.

எண்பத்து ஈராமாண்டு ஜனவரி இரண்டாம்நாள்
'கண்மறைவாய் உன்கருத்தை வெல்ல முடியாதோர் சுட்டனராம்'
என்ற செய்தி வந்தபின்தான் அறிந்தோமே உன்திறமையெல்லாம்...
கன்றிழந்த பசுப்போலப் பசுந்தரம் அம்மா புலம்பியதும்
தோழொடிந்த தோழர்கள் அவசரத்தில் பழிவாங்கத் துடித்ததுவும்
வாலொடிந்த பல்லிக்கு மீண்டும் முளைப்பதுபோல்உன்
எண்ணத்தை நிறைவேற்ற மக்கள் யுத்தம் வேண்டி கழகத்தின்
பின்னாலே
வண்ணத்துப் பூச்சிகள் போல் வாலிபர்கள் பறந்ததுவும் கண்கூடு.
"சுந்தரமே! எங்கேநீ?... சுதந்திர உலகிற்குத்
தந்திரமாய் அனுப்பினரோ?... தாளமுடியுதில்லை
எந்திரம் போலநீ எத்தனை செயல்புரிந்தாய்
உன்தரத்தை அறியாதார் உலகில் இருந்தென்ன?
அந்தரத்தில் எம்மைநீ அநாதையாய் விட்டாயோ?
பசுந்தரம் பெற்றெடுத்த பாசமிகு புதல்வா!..."



# புதியவீட்டிற்கு வாழ்த்து

சிங்கைப்பூர்கவிமாலைக் கவிஞரும் கணக்காளருமாகிய நீதிப்பாண்டி அவர்களால் அமைக்கப்பட்ட புதிய இல்லத்தைப் பார்த்தவுடன் அம்மாவின் மனதில் ஏற்பட்ட உற்சாகத்தில் பிறந்த பாடலிது.

**ஆ**க்கமான அன்புவழி அரணாகிய வீடு
ஊக்கத்துடன் ஒத்துழைத்து உருவாக்கிய வீடு
தேக்கமான பாசத்திலே திழைத்திருக்கும் வீடு
நோக்கமெல்லாம் முன்னேற்ற நுணுக்கமான வீடு

பாண்டித்துரை சகோதரரின் பண்பான இல்லம்
காண்போரின் பார்வையிலே கணிசமான இல்லம்
தூண்களௌலாம் விருந்தினரை வரவேற்கும் இல்லம்
மாண்புடைய மேன்மையான மனிதர் வாழும் இல்லம்.

வேப்பமரம் சிதைந்தாலும் விநோதனான மனையாம்
கூப்பிட்டு விருந்தளிக்கும் குதூகல மனையாம்
சாப்பிட்டுப் போங்களென்று ஆதரிக்கும் மனையாம்
மாப்பிள்ளைக் கோலங்கள் மருவுகின்ற மனையாம்

ஆசிகளுடன் ... அம்மா...



# சமூக சேவகி

ஈழத்து மண்ணிலே பிறந்த இன மொன்று
வாழ்கின்ற வயதிலே வளமிழந்து இடம்பெயர்ந்து
சூழ்கின்ற துயரங்கள் சுழன்றடித்த போதினிலே– மனமும்
பாழ்பட்டுப் போகாமல் பக்குவப்படுத்தவேண்டி
ஆழ்ந்த சிந்தையுடன் அயராது பாடுபட்டு– தோல்வியில்
மூழ்கிப்போய் மூலையிலே முடங்கிக் கிடக்காமல்
வீழ்ச்சியில்லாவீறு கொண்ட வீரமான மாதரசி!
தாழ்வில்லை உன்பணிக்கு தரணியிலே முன்னுரிமை!

மங்கிய பொழுதொன்றில் இருபது ஆண்டுமுன்னே
பொங்கிவந்த கண்ணீரை வெறுங்கையால் துடைத்துவிட்டு
எங்குதான் போவதென்ற ஏங்கிய உள்ளத்தோடே
தங்களின் சொத்துக்களை வடக்கிலே விட்டுவிட்டு– அகதிக்கு
பங்களிக்கும் பாசப்பூமி புத்தளம் வந்தடைந்த
நங்கையர்கள் வாலிபர்கள் நலிந்த முதியோர்கட்கு...
"உங்களுக்கு நாமிருக்கோம்" என்றவொரு நம்பிக்கையை
அங்குவழங்கினார்கள் அன்பான மானிடர்கள்!

'ஜன்சிலமஜீத்' என்ற சமூகநலச் சேவகியே!
சனங்களின் புனர்வாழ்வைச் சரித்திர நிகழ்வாக்கி
மனம்மொழி மெய்யறிவு மாறாத தியாகச்சிந்தை..
இனங்களின் பாதுகாப்பை ஏற்றமாய் நடாத்துவதால்..
தன்நம்பிக்கை விடாமுயற்சி தளராத மனவுறுதி...
தன்னலம் சிறிதேனும் தலைகாட்ட முடியாத
பொன்மனச் செல்வியெனப் பொதுமக்கள் போற்றுவரே!
மென்மேலும் உனது சேவை மேதினியை உயர்த்தட்டும்!!




# பேறுபெற்ற ஆசிரியை

ஆசியாக் கண்டத்திலே பிறந்து ஆபிரிக்கக் கண்டத்திலே வாழ்ந்து ஐரோப்பியக் கண்டத்து நாடுகள் சிலவற்றிற்குச் சென்றுவந்து அமெரிக்கக் கண்டத்து கனடாநாட்டு 'மொன்றியல்' பகுதியில் வாழ்ந்துவரும் முன்னாள் கணித ஆசிரியை (யா/ விக்ரோறியா கல்லூரி, யா/இந்துக்கல்லூரி) ஆகிய பள்ளிகளில் கடமையாற்றிய திருமதி லட்சுமி சிவசுப்பிரமணியத்தின் பிறந்த நாளை முன்னிட்டு சிங்கப்பூரில் வாழும் அவரது தமக்கையார் எழுதிய வாழ்த்து:—

**ஆ**சைப்பிள்ளை செல்லமுத்தின் அன்பான சின்னமகள்
மாசிமாதப் பூரத்திலே மலர்மகளாய் வந்துதித்து
ஊசிமுனைத் தராசுபோல ஆசிரியப் பணிசெய்து—இன்று
ஆசீர்வாதம் வழங்குகிறாள் அன்னையாய்ப் பாட்டியாய்!
கல்வியிலே தான்பெற்ற கண்மணிகள் மூவரையும்
வல்லவராய் முன்னணியின் வரிசையிலே நிறுத்தியதாய்!
சொல்லரிய வாழ்க்கைச் சோதனையில் சித்திபெற்று
அல்லல்கள் பலகடந்த அருமையன்னை இவரென்போம்!
ஆற்றல்பல படைத்த அன்பான மருமகள்மார்
போற்றும் கல்விச்சிறப்பில் புதுமைகள் பெற்றவர்கள்– அரிய
ஊற்றுப் போல் வந்துதித்த உரிமையான பேரமக்கள்
வீற்றிருக்க 'அப்பம்மா' நீடூழி வாழியவே!




## மெல்பேர்ண் மணியின்– கவிதைப் பூங்கா

**க**ண்டேன் 'மெல்பேர்ண்மணி' கவிதைப் பூங்காவை
கொண்டேன் மனவுறுதி ஒரே மூச்சில் படிக்கவென...
உண்டேன் தமிழ்ப் பழப் பஞ்சாமிர்தக் கலவையதை
விண்டேன் விழுமியப் பொருளுணர்ந்து கொண்டேன்.

தெய்வவழி பாடுகள் தீம்பாலிற் சக்கரைபோல்...
உய்யும்வாழ்வுநெறி உயர்வுக்கு வழிகாட்டல்
எய்யும் அம்புகூட எதிரிக்கும் நோய் தீர்க்கும்
வையத்துள் செம்மை வழி வார்த்தைகளிற் தொக்கிநிற்கும்.

மண்வாசனை சொல்கிறது மனமகிழ்வைக்காட்டி...
எண்ணத்தில் சிலிர்ப்பு!... தெம்பினை ஊட்டி...
பள்ளத்தை நோக்கிய பாசவெள்ளம் கூட்டி...
அள்ளள்ளப் பெருக்கெடுக்கும் செந்தமிழ்ப் பாட்டி...(து)

தாயக நினைவுகளைத் தாங்கி நிற்கும் தாயே!
நீயகலாதே!... கவிச்சுரங்கம் பெற்றெடுத்த சேயே!
நாயகிமெல் பேர்ண்நகரினிலே பெண்ணின்
காயகற்றும் சதுரங்க சகலகலா வல்லிநீயே!



## மெல்பேர்ண் மணியின் சந்தக் கவிதைகட்குச் சிந்தையால் வாழ்த்துகள்

**மா**ண்போடு மாதர்களின் மனவழகைப் புரிந்துகொண்டு
ஆண்களும் உதவ வேண்டும் அரிவையர்கள் குடும்பத்தைத்
தூண்போலத் தாங்கித் தூக்கி நிறுத்துதற்கு
சாணேறமுழம் சறுக்கும் சச்சரவுச் சூழ்நிலையில்
பூணுகின்ற ஒழுக்க நெறி புனிதமான வில்லினிலே
நாணேற்றிக் கூரான நல்லம்பு தொடுத்துவிட்டுப்
பேணுகின்ற வரிசையிலே பெண்களுக்கே பங்கதிகம்
தோணிபோற் கரைசேர்க்கும் துணிவும் வரவேண்டும்!

மண்ணில் உழலுகிற மாதருக்கு வழிகாட்ட
திண்ணமான பற்பல திட்டங்கள் வகுக்க வேண்டும்
உண்மையே நிலைக்குமென்ற உறுதியும் அறுதியாக
வண்ணம்போல் இளஞ்ஞினாரின் வதனத்தை மலர்விக்கும்
பண்பாடு புகுத்தி நின்றார் பரந்த இவ்வுலகினிலே
கண்போன்ற கருத்துள்ள கவிதைகளைப் படைத்ததனால்
“மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருகப்பாயும்!”

மெல்பேர்ண் மணிக்கவிதை மேன்மையான கருவூலம்
சொல்வதில் நிதானம், சொற்சுவை, பொருட்சுவையும்
வல்லவர் தமக்குமல்ல; வரிவரியாய்ப் படிப்பவருக்கும்
வெல்லும்வகை, வாழ்க்கைநெறி, வேண்டாத இருளகற்றி
துல்லியமாய் காட்டுகின்ற தூயபளிங்கினைப் போல்...
தொல்லைப்படும் மனதில் துயரமே இல்லாத
வல்லமை நிறைந்த வைரமான நெறிகொண்ட
நல்லவற்றைக் கூறி நிற்கும் நற்சந்தக் கவிதையிது!

இன்னும் எழுதவேண்டும் ஈரமனம் தெரியவேண்டும்
நன்நெறிகள் காட்டும் நயவுரைகள் சொல்லவேண்டும்
தன்னாலியன்றன மட்டும் தரணிக்கு வழிகாட்டும்
அன்னமிட்ட கைகளுக்கு அம்பலவாணர்துணை
அகணிமுதல் பேராசான் தாசனையும் பெற்றெடுத்த
சொன்ன சொற்தவறாத சொற்கொடி நம்கவிதைமணி...
பண்பாடு காக்கப் பாரம்பரியம் பேணிப்பல
வெண்பாக்கள் யாத்து வெளியீடு கண்டாரிவர்
நல்லைநகர் தந்த நாவலனார் தொண்டினைப்போல்
சொல்லவல்ல அறிஞர்களின் சுவட்டினை ஒட்டியிவர்
எல்லையற்ற கவித்திறத்தால் எடுத்தியம்பும் உண்மைகள்
அல்லல்கள் யாவும் அகற்றிவிடும் பாங்கினாலே...
இல்லையிதற் கீடாக எந்தப் பெண்மணியும்
சொல்லிவைக்கவில்லையென்று சுடரொளியாத் தெரிகிறதே!
வல்லவராய் கவிதைகளை வடித்து அச்சேற்றி...
சல்லடைக் கண்கள் போல் சலித்தெடுத்த சந்தமிது!

சூழ்ந்துவரும் சுற்றாடல் சுத்தமாய் இருப்பதுபோல்
வாழ்க்கையில் செழுமையும் வற்றாத நிம்மதியும்
ஆழ்ந்து நோக்கிடில் அவரவர் இல்லறத்தில்
பாழ்போகாப் பயிரான பண்பாட்டு நெறிகளும்
தாழ்வில்லா உயர்வொன்றைத் தந்திடும் என்பதனால்
காழ்ப்புணர்ச்சி இல்லாத கருமமே கண்ணான
வாழ்வினில் சமுதாய முன்னேற்ற முயற்சிகளை
ஏழ்பிறப்பும் ஏற்கும் எதிர்கால வெளிச்சமிது!

தங்கத் தாத்தா நவாலியூர்ச் சோமசுந்தரனாரின்
மங்காத கவிதைகள் ஆடிப்பிறப்பு, ஆடுகதறியது...
எங்கள் பண்டிதமணி மட்டுவில் கணபதிப்பிள்ளை...
அங்கம் வகித்து அருந்தமிழை வளர்த்தோர் பலர்...
இளமுருகன், துரைசிங்கம், இராசையா, வேலனுடன் வேந்தனாரும்
களமிறங்கிக் கவிபடைத்த புதுவைக் கவிஞன் வரை... வாழ்வை
வளம்படுத்தும் தாய்க்குலத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை
உளம்திறந்து வாழ்த்துவமே சந்தக் கவி விதைத்தவரை!



# கவிதையில் சிங்கப்பூர்

**க**விதை என்ற மூன்றெழுத்துக்கள்
**கவி**யில் சிங்கை களித்துச் சிரிக்கிறாள்
**கதை**யாக உருமாறி கடமையில் மிளிர்கிறாள்
**விதை**யாகப் பற்பல பயிர்களை ஆக்கினாள்.

**கவி**

நாட்டிலே வாழ்ந்த நல்லறிவாளர்களும்—வெளி
நாட்டிலே இருந்து வந்த திறனாளரும்
சிங்கையின் வளர்ச்சியைச் செழித்திட வைக்கிறார்—இந்த
மங்கையின் மதிப்பை மகுடத்தில் ஏற்றினார்.

**கதை**

கதையெனச் சொல்கையில் கண்ணீரில் உதித்தவள்
அதை மறக்காதவர் ஆற்றல் படைத்தனர்
உலகமே வியந்து தலைதூக்கிப் பார்த்திட
தலைவர் விரித்தனர் பன்னாட்டுத் தொடர்புகள்

**விதை**

விதைத்த பயன்தரு விதைகளே பயிர்களாய்
புதையல் கிடைத்தது போலவே வளர்த்தனர்
நேர்மை, உண்மை, நிதானம், பலமென
சார்ந்தவர் நின்றே சிங்கையை உயர்த்தினர்

சிங்கப்பூர் தேசிய தினம், 09.08.2009



# நாலின மக்கள் கூடி வாழ

**சி**ங்கைத் திருவிளக்கே
மங்காப் பெருவிளக்கே
எங்கள் இதயத்தில் என்றும்
சுடர்விடும் ஆற்றல் மிகுந்த
அருமைத் திருநாட்டின்
போற்றும் தேசியநாள் இது.

நாற்பத்து மூன்றாவது
நந்நாளைக் கொண்டாடும்
காற்றில் மிதந்துவரும்
கானங்கள் சொல்வதால்
துரித வளர்ச்சி கண்டு
துல்லியமாய் விளங்குகின்ற
அரிய தேசிய நாள் இது.

ஒருநாட்டின் செல்வங்கள்
அந்நாட்டுக் குடிமக்கள்
உருவாய்க்காய் அயராது
உழைப்பவர் வீட்டிலே
திருமகள் வீற்றிருக்கும்
திவ்வியத்தைப் பார்த்த
பெருமிதத் தாயின்
தேசிய நாள் இது

நான்கு இனமக்கள்
நல்வழியில் வாழ்வதற்கு
பாங்கான இல்லங்கள்
பத்திரமாய்த்தான்... சிங்கப்பூர்

09.08.2008



## இராம.வயிரவன்– கவிதைக் குழந்தைகள்

**கா**லத்தின் கட்டாயம் கருத்தில் எழுந்ததனால்
ஞாலத்தின் பங்கும் நியாயமாய் உண்டென்று...
இராம. வயிரவனார் எழுதி வெளியிட்ட அந்த
காராம்பசுவான 'கவிதைக் குழந்தைகள்' கருவூலம்...!
கருவூலம்!!

குழந்தை முதல் பெரியோர் வரை
குளிர வைத்தார் வார்த்தைகளால்
மழலைக்கு மட்டுமல்ல; மானிட வர்க்கத்துக்கே...
பழமையிலும் புதுமை கண்டு...
புதுமையிலும் புகு திறத்தில்
அழகாக யாத்துத் தந்தார்...
கவிக்குழவி வயிரவனார்!

**வேறு**

முகத்திலொரு புன்சிரிப்பு அகத்திலொரு அமைதி
செயல் திறன்கள் செய்துவிட்டு சிறுவர்போல் வீற்றிருப்பார்
அத்தனையும் தன்னடக்கம், மொத்தத்தில் அன்னம்போல்
பாலுக்கும், நீருக்கும்... பகுத்துணரும் பாங்கினனாம்!



## அரிவாளும் சம்மட்டியும் தாலி

**தி**ருமணத்தை அவர் (கே-ஏ-சுப்பிரமணியம் அவர்கள்) எவ்வளவு புனிதமான நிகவாகவும், வரலாற்றுப் பெருமைமிக்க சம்பவமாகவும், சிக்கனத்துக்குள் கணக்கிட்டு.... உலகினை உருவாக்கும் சிற்பிகளின் இதயத்தை
ஈர்க்கவேண்டுமென்று கருத்தைக் கொண்டிருந்தாரென்பதை இன்று குறிப்பிடுகின்றேன்;-
இலங்கைவாழ்- அதிலும் யாழ்ப்பாணப் பெண்களின் திருமாங்கல்யம் பாரப்பரிய
முறைப்படிதான் செய்யப்படுகிறது. எனதுதாயாரிடமும், அவரது தாயாரிடமும் தொன்றுதொட்டுவந்த மாங்கல்யங்களே இருந்தன. "நமது விவாகத்திற்குத் தாலிகட்டுவதானால் நான் எனது
கட்சியின் சின்னமாகிய அரிவாள், சம்மட்டியைத்தான் செய்விப்பேன்" என்று அழுத்தம்திருத்தமாகக் கூறிவிட்டார். ஆரம்பத்தில் மறுப்புக் கூறினாலும் "உங்கள் கொள்கைக்கு நான் மதிப்பளிக்கிறேன். நீங்களும் எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று
கேட்டுக்கொண்டேன். திருமணத்தில் தாலியை திருமதி- புஸ்பலீலா முருகேசு அவர்களின் கையால்
வாங்கி என் கழுத்தில் பூட்டினார். அவர்யாழ்/ போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியவர்.
எமது திருமணப்பதிவுக்கும் திருமணத்துக்கும் நல்லூர்- தோழர்- இராசய்யா அண்ணர் தான் தனது
வாகனத்தையும், நேரத்தையும் தந்துதவினார். திருமணப்பதிவு நல்லூர்- இலட்சுமி அம்மையாரின் நெறியாள்கையில் நடைபெற்றது.
தாலி முத்திரைச்சந்தையடி தங்கச்சிற்பி திரு-நடராசா அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டது.*

இந்த இடத்தில் அந்தத்தங்கச் சிற்பியைப்பற்றிக் கூறியே ஆகவேண்டும்,. அவர் அதி அற்புதமான ஒருபடைப்பாளி.1 952ம் வருடம் பிரித்தானிய இளவரசி எலிசபெத் அம்மையார் இலங்கை வந்திருந்தார்.

அவருக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு பலவிற்பன்னர்கள் தங்கள் கைத்திறனை வெளிப்படுத்தி பல ஆக்கங்களை உருவாக்கினர். திரு. நடராசா அவர்கள் தங்கத்தால் ஒருகடிகாரத்தைச் செய்து வரவேற்புக் குழுவிடம் ஒப்படைத்தாராம். அம்மையார் அவர்கள் நாட்டிற்கு வந்திறங்கியவுடனே அவரது அன்புத் தந்தையார் காலமாகிய செய்தியும் வந்ததால் நாடு திரும்பிவிட்டாராம்.. தந்தையின் மறைவுக்குப் பின்னர் எலிசபெத் அம்மையார் மகாராணியாகி முடிசூடினாராம்.*

செய்யப்பட்ட தாலியுடன், எனக்குத் தெரியாமலே அரைத்தங்கத்தில் ஒரு மாற்றுமோதிரமும் செய்யப்பட்டது. அப்போது ஒருதங்கத்தின் விலை ரூபா 90/= மாத்திரம்தான். மோதிரத்தில் “ம“ என்ற தமிழ் எழுத்து இருந்தது. அக்கால நாகரீகம் ஆங்கில எழுத்தில்தான் மாற்றுமோதிரம்

செய்விப்பார்கள். அவர் 'மணியம்' நான் ' மணி' அதனால் நான் எந்த விளக்கத்தையும் கேட்கவில்லை. 'ம' வுக்கு விளக்கம் என்னவென்று கேட்டார். ' எங்களுடையபெயர்தான்” என்று சாதாரணமாகக் கூறிவிட்டேன். அவரின் விளக்கத்தை நீங்களும் செவிமடுங்கள்:

*ம* என்பது *மனிதன்*, அவன் பிறந்த *மண்*

அவனுள்ளத்தை ஏற்றுக்கொண்ட *மனம் * அவனைப் புரிந்து கொண்ட வாழ்வுதரும் *மணம்* அதனைத் தொடர்ந்துவரும் * மக்கள்* மக்கள் பலத்தால் வரும் *மகிழ்ச்சி* மண்ணிலே வாழ்ந்த காலத்தில் அவனது செயற்பாடுகள்.. .நடைமுறைகள்....

அடக்கு முறைக்கு குரல்கொடுக்கும் *மறுப்பு* அதனால் ஏற்படும் *மரணம்* கூட *ம* வில்தானே

ஆரம்பிக்கிறது.” என்று பெரியவிரிவுரையே ஆற்றிவிட்டார்.........

( தொடரும் )

கொண்டவாழ்வு இணையும் * மணம்*

# ஜனாதிபதிக்கு சிங்களத்தில் கடிதம்

கனம்,
பெருமதிப்புக்கு உரிய ஜனாதிபதி அவர்கட்கு,
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்
சிறீலங்கா
வணக்கம்! ஆயுபோவன்!!
இன்று 07.10.2009 எனக்கு 71 வயது

எமது இலங்கை நாட்டில் மூன்று இனங்களும் ஒற்றுமை உணர்வுடன் வாழவேண்டுமென்றும் அதற்குரிய ஆளுமையுடைய உங்கள் சுதந்திரக் கட்சிதான் ஆட்சிக்கு வரவேண்டுமெனவும் தன் உயிரைப் பணயம் வைத்து வாழ்வைச் சேவையாக நடாத்திய கே. ஏ. சுப்பிரமணியத்தின் (அமரர் 1989) மனைவியாகவும் என்மகன் (PLOTE மீரான்மாஸ்டர்) சத்தியராஜனை இழந்த தாயாகவும் இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

எந்த மக்களுக்காக என் கணவர் தன் வாழ்வை அர்ப்பணித்தாரோ எந்த மண்ணுக்காக என் மகன் போன்றோர் தம் வாலிப வசந்தத்தை அழித்தார்களோ அந்த மக்களும் அந்த மண்ணும் முட்கம்பி வேலிக்குள் முடங்கிய துர்ப்பாக்கியம் மாரிமழைக்கு முன்பாக முடிவுக்குவர அவரவர் சொந்த இடங்களுக்கு போகவேண்டும். அல்லது பாடசாலை கட்டடங்களில் மாரி அடைமழைக்கு முன்பாக வசிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒரு உண்மையான இலங்கை பிரசையாக உங்களிடம் உறுதியாகக் கூறுகின்றேன், இன்று மீதமாக உள்ள அனைவரும் அடக்கி ஒடுக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களே, அவர்களின் கதவைத் திறப்பதன் மூலம் நெடுஞ்சாலைகளும் குளங்களும் அமைக்கமுடியும். வரண்ட நிலங்களை நன்நெய் நிலமாக்க, இதயச்சுத்தியுடன் நன்னெறியில் மக்களை செம்மையாய்ப் பயிற்றிட, உண்மை நேர்மை உழைபு மேலோங்க இன்பமான இலங்கைத் தாய் இயற்கை வனப்பால் அன்பில் உயர்ந்து அழகாய்த் திகழ்வாள், அதற்கு உலக நாடுக் உதவ வேண்டுமென உறுதிபட சிங்கப்பூர் TV எதிரொலியில் மே 2009 இல் கூறினேன்.

இக்கடிதத்தை அவதானத்துடன் வாசித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.
தங்கள் உண்மையுள்ள
வள்ளியம்மை சுப்பிரமணியம்.

“சீலமும் காட்சியும் நிறைந்தவர், தருமத்தில் நிலைத்தவர்,
வாய்மைகளை உணர்ந்தவர், தன்கடமைகளைச் செய்பவர்,
இவர்களையே மக்கள் போற்றுவர்.” (தம்மபதம் 2017)



# சிறையிலிருந்து என்மகன் எழுதிய திருமணவாழ்த்து

பாட்டாளி பாராள வேண்டும் என்ற தந்தை—அவர்
பாதைதனைத் தொடர்ந்து செல்லும் அன்னை
அடக்குமுறைதனை உடைத்தெறிவோம் என்ற அண்ணன்
அநியாயம் கண்டுகுமுறும் தம்பி
அன்பிற்கோர் மாமா மாமி
ஆசைக்கோர் அங்கிள் அன்ரி
அறிவுசொல்லும் தோழர்
ஆதரிக்கும் சுற்றம் இவர்கட்கு
அருமை பெருமையாக பிறந்தாய்
கருணை இரக்கம் உந்தன் பழக்கம்
கலக்கம் தயக்கம் இல்லை அது உன் வழக்கம்
சமூக மாற்றம் வேண்டி நிற்கும் ஒருவன்
வாழ்வுதனில் உந்தன் துணைவன்
வாழ்க்கைதனில் அவன் பணி தொடர வேண்டும்
அவர்களுள் நாமறிந்த இருவர்
மார்க்ஸ்/ ஜென்னி (அப்பா/ அம்மா)
அவர்கள் போல் நீயும் வாழ்வில்
வெற்றி கொள்ள வாழ்த்துகிறேன்.

யாழ்ப்பாணம் இராணுவ கோட்டைச் சிறையில்
இருந்து சத்தியராஜன் 19.11.1986




# அம்மா

**நீ** நடந்த காலடித் தடங்களில்,
தேங்கிய வியர்வை உடன் சேர்ந்து
கண்ணீரும் சொல்லும்
உன் கடந்தகாலம்
வேலையால் வீடு திரும்பி
உடுத்திய புடவையை
கதவில் போட்டால்,
மறுநாள் வேலை செல்லும் வரை
கால்களில் சக்கரம்தான்.

பச்சை தென்னம் மட்டையை
இரவு தணித்த நெருப்பில் காயவைத்து
பால்கறந்து, வீடுபெருக்கி
எங்களைக் குளிக்க வார்த்து
சாப்பாடு தந்து அப்பாக்கு மருந்தும் தந்து
வீட்டுக்கு வரும் தோழர்களை வரவேற்று
இன்முகம் காட்டும் அம்மா.

அனேகமாக முருங்கைக் குழம்பும்
வாழைக்காய் பொரியலும்தான் சாப்பாடு
இரண்டுமே வீட்டில் இருக்கும்
கிணறு கலக்கி இறைத்து
சாம்பிராணி இடுவதில் இருந்து,
மாவு இடித்து இடியப்பம் அவித்து
ஓலை பின்னி வேலி அடைப்பதுவரை நீதானம்மா.
நீ தூங்க நாம் பார்த்ததில்லை.
பலகாலம் நீ படித்தவ என்பதே எமக்குத் தெரியவில்லை
எல்லாமே அப்பாதான் என்று உணரவைத்தாய்.
அப்பாவை போலீஸ் தேடிய காலங்களில்
பலபல வீடுகள் மாறினோம்
வாடகைவீடுக்கு நீபட்ட கஸ்டம் அன்று
எமக்கு உணரும் வயசில்லை
துரத்தும் போலீஸும் நகையாடும உறவுமாய்
நீவாழ்ந்த வாழ்வு, காதலின் வெற்றி!
எமது நாட்டின் இரண்டு பெரும் சகாப்தங்களின்
வாழ்வு நாயகி நீ.
கொள்கைக்கு மாறுபட்ட குழந்தையும்
கோபமுறும் கணவனும்,
பகல்பொழுதில் மார்க்சியம் பேசும் தோழர்கள்
இருட்டில் பிரிவினை கேட்கும் குழந்தைகள்
சமையலே உன்வாழ்வாகிப் போனது.
வறுமையின் உச்சத்திலும் நீ வாட
நாம் பார்த்ததில்லை.
மக்கள் கழக சுந்தரம், சந்ததியார் தன்னுடனே
சிங்கள மொழிவகுப்பில் சேர்ந்து படித்தாய்
பீட்டர் கெனமன், சண்முகதாசன் மாமா இலிருந்து
சிறிமாவோ பண்டாரநாயக்கா வரை பழகி இருந்தாய்
மக்களுக்காக அமரர் ராஜீவ் காந்தி இலிருந்து
மகிந்த ராசபட்ச வரை கடிதம் எழுதி இருந்தாய்
சாதி எதிர்ப்பு போராட்டத்தில் படுகாயம் பட்ட
அப்பாவை—மூன்று சிறு குழந்தைகளுடன்
குழந்தையாய் காப்பாற்றினாய்.
பின் மேதினம் ஒன்றின் (1969) பெரும்போராட்டத்தில்
சிதறிய அப்பாவின் அங்கங்களை ஒட்டவைத்தாய்.
அம்மா,
ஓய்வுபெறும் வயதில் சிறைச்சாலை தோறும் சென்று
அண்ணாவைப் பார்த்து வந்தாய்.
இடைமறிக்கும் போலிகள்,

உளவு சொல்லவா என்று கேலிபேசும் போது
அரசியல் தெரியாத அந்த கூட்டத்துக்கு
வரலாறு சொன்னது கேட்டு மலைத்து நின்றிருக்கிறேன்.
பிரிவினையை வெறுத்த அப்பா– இந்திய இராணுவம்
வெளிச்சத்திற்கு வந்த வேளை– இல்
கோபு மாமா உதவி கேட்டு வந்தார்
பத்திரிகை வெளி வரவும் உதவியதுடன்
குண்டுகளின் சிதறல்களின் நடுவே
உணவும் சமைத்து கொடுத்தாய், பயந்தோடவில்லை.
புன்சிரிப்பும் பொறுமையும் உன் ஆயுதங்கள்
உன் அளவுக்கு எனக்கு ஆளுமை இல்லை,
அறிவும் இல்லை ஆனால்
இன்றுவரை உனக்காக ஏதும் நான் செய்ததில்லை,
நேற்றுகூட உன் ஓய்வூதிய பணம் எனக்கு வந்தது
உனக்கான என் கண்ணீரைகூட– இதுவரை
நான் காட்டியதில்லை,
எழுபதுகள் கடந்தும் ஏற்றமாக இருக்கிறாய் அம்மா,
அன்பு அனைத்தையும் வென்றிடும் என்று சொல்லுவாய்,
முயற்சிக்கிறேன் முழுமையாய் வாழ,
உங்கள் வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமான
என் தம்பிக்கு நன்றிகள்.
இன்று அப்பாவும் அண்ணாவும் இல்லை– ஆனால்
மரணத்தின் பின்பும் அவர்களை வாழவைக்கிறீர்கள்
நிறைய வாசியுங்கள், எழுதுங்கள்,
உங்கள் வாழ்வின் வெற்றி சத்தியமனையின் வெற்றி!
நூறாண்டு வாழ வாழ்த்துகிறேன்

அன்பு மகள்—திருமதி, சத்தியமலர் இரவீந்திரன் 4.10.2010

# தாய்+தாய்

**தா**ய் என சொல் அன்னையைக் குறிக்க அழகுடன் அமையப்பெற்றிருக்கிறது. அதேசொல் ஒருவாக்கியம் முடிவடையும் போது செய்கின்ற வினையை எடுத்துக்காட்டி வினைமுற்றாகவும் மிளிர்கிறது. எழுவாய் என்ற இடத்தையும் பயனிலை என்ற இடத்தையும் பரிணமிக்க உதவுகிற இந்தத் 'தாய்' என்ற பதம், வேறு எந்த மொழியிலும் இடம்பெறாத– தமிழுக்கு உரிய– உயர்ந்த வரப்பிரசாதமாகும். தமிழ் மொழியின் தனிச்சிறப்பான இந்தச் சொல்லே இந்த ஆக்கத்தின் தலைப்பாகவும் அமைகிறது. அந்தத் தாய் தனது ஒவ்வொரு செயலினால்– அல்லது அசைவினால் வினைமுற்றாகவும் பூரணமாகிறாள். அதனால் தாய்.... தாய் ஆகிறாள்.

# பிரசவித்தாய்

**அ**து ஒரு வைத்தியசாலை. அங்கே பூமணி அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். அவளுடன் அவளது கணவனும் வந்திருக்கிறான். அரசினர் வைத்தியசால என்றால் நோயாளி மாத்திரமே தங்கியிருக்க முடியும். இது ஒரு தனியார் ஆஸ்பத்திரி. தலைப்பிரசவம் ஆதலினால் அவள் மிகவும் பயப்படுகிறாள் என்பதால் துணைவனும் உடனிருக்கிறான்.

டாக்டரின் பரிசோதனையின் பின் அவளுக்கு ஊசி மருந்து ஏற்றப் பட்டது. இயற்கையாகவே பிரசவத்தாய்க்கு உண்டாகும் ஒரு சில அறிகுறியான பிறப்புறுப்பிலிருந்து வெளியேறும் செங்கல் மங்கலான ஆரம்ப உதிரப்போக்கினைப் பார்த்த பின்பே அவசர அவசரமாக வைத்திய சாலைக்கு வந்தனர். பெரிய வசதியுள்ள தம்பதிகளல்ல; ஏழைக் குடும்பந்தான். ஒரு சுடுதண்ணீர்ப் போத்தல். ஒரு கைப்பிடி மங்கு, இரண்டு டம்ளர்கள். ஒரு துவாய். ஒரு போர்வை, ஒரு மாற்று உடை குழந்தைச் சட்டை, காலையில் பல் துலக்கி முகம் கழுவ பற்பசையுடன், பிரஷ், சவர்க்காரம் இவ்வளவும்தான். உணவு தேவையென்றால் வெளியாலை உள்ள கடையில் காசுக்கு வாங்கிக் கொள்ளலாம். காலை எட்டுமணிக்கே அவர்கள் அங்கே வந்துவிட்டனர். முதலாவது பரிசோதனையும், துப்பரவு செய்தல் என்ற அவசியக் கருமமும் தாதி யொருவரால் செய்யப்பட்டது. இப்போ பத்துமணி. டாக்டர் வந்தார். "இன்னும் குத்து ஏற்படவில்லை. அதற்குத்தான் ஊசி போட்டிருக்கு நீங்கள் ஏதாவது சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு அடுத்த அறைக்குப் போய் விட்டார். இரண்டு பக்கத்துப் பெற்றோரில்– ஒரு பக்கத்துப் பெற்றோர் மட்டுமே இவர்களுக்கு ஆதரவு. அவர்களும் ஏழைகள் தான். "தனியார்(பிறைவேட்) ஆஸ்பத்திரி என்றால் டிக்கெட் வெட்டி வீட்டிற்குப் போகும்போது காசு கட்டித்தானே போகவேண்டும். அதற்குப் பணம் வேண்டுமே! பெரியாஸ்பத்திரி என்றால் ஒரு காசும் கட்டத் தேவையில்லைத்தானே என்ற சின்னச்சின்ன முணுமுணுப்புத்தான். அவனுக்கு அவளில் கொள்ளைப் பிரியம்.. அவளைத் தனது

கண்காணிப்பின் கீழ் பிரசவப் பராமரிப்பை நடாத்த வேண்டுமென்ற ஒரு துடிப்பு– பாரிய தவிப்பு.

மத்தியானப் பசிக்காக– ஆஸ்பத்திரிக்கு வெளியே றோட்டின் மறுபுறத்தேயுள்ள உணவுக்கடையில் ஒரு சோற்றுப் பார்சல் வாங்கி இருவரும் உண்டார்கள். அந்தக் கடையிலே வாழைப்பழம், தோடம்பழம், ஆப்பிள் பழம் யாவும் இருந்தன. அவற்றை வாங்கிப் பணத்தை விரயம் பண்ணாமல் இருக்கவேண்டுமே என்று அவள் கண்டிப்பாக இருந்தாள். சாயந்தர தேனீர்கூட வாங்கிக் குடிக்கவில்லை. மாலையாகி விட்டது. அவளுக்கு அடிவயிற்றில் ஒரு அம்மிக்குழவியைக் குறுக்காக வைத்தது போன்ற ஒரு பாரமான அழுத்தல் வேதனை. அவர்களது அறையோடு இணைந்த கழிவறைக்குப் போய்த்திரும்பினாள். சிறுநீர்கூட வெளியேறாமல் ஒரு தடுப்புச்சுவர்போன்ற ஏதோ ஒரு தடங்கல். தாயாரும் பக்கத்தில் இல்லை. அவவும் வயோதிபத்தாய்தான். தங்களது காலத்தில் பிள்ளைப்பேறு என்ற பிரசவங்களை கிராமத்து மருத்துவச்சி என்ற மூதாட்டியின் அனுசரணையுடன் தனது தாய்வீட்டில் நிறைவுசெய்து பழக்கப்பட்டவர்கள். “உந்த ஆசுபத்திரி மருந்து மணம் எனக்குத் தலை சுத்தும்” என்று கூறி “பிள்ளை பிறந்த பின் வாறன்” என்று கூறிவிட்டா. பாவம், நோயாளியும். அத்துடன் உடல் பலமும் அற்றவர்தான்.

அன்றிரவு முழுவதும் அவள் படுக்கவும் முடியாமல்– நடக்கவும் முடியாமல் தவித்ததை அவன் பார்த்து– என்ன செய்வதென்று தெரியாமல் விழித்திருந்தான்.

விடியற்காலை நேரம் தாதி ஒருவர் தனது கடமையாற்றும் நேரத்திற்கு வந்து ஒவ்வொரு அறைக்குள்ளும் சென்று பார்வையிட்ட பின் இந்த அறைக்கும் வந்தார். “நேரம் நெருக்குது” என்று கூறி அவளைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று, ‘பிரசவ அறை’ என்று எழுதப்பட்டிருக்கும் அறைக்குள் அழைத்துச் சென்று கட்டிலில் படுக்க வைத்தான். கட்டிலில் படுக்க வைத்த பின்னரும் அவளுக்கு ஒரு ஊசி மருந்து ஏற்றப்பட்டது. அதனையொட்டி அடிவயிற்றில் தாங்கமுடியாத வலி ஒன்று சிறிது நேர இடைவெளிவிட்டு ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை அந்த வலி ஏற்பட்டு அவளைக் களைப்படைய வைத்தது. அவள் படுத்திருந்த அறையில் பச்சைநிற கேட்டின் துணி மறைப்பில் இன்னொரு கட்டிலும் அக்கட்டிலில் இன்னொரு பெண்மணியும் அவள் கண்ணில் பட்டது. அந்த மற்றப் பெண்மணி எந்தவித ஓசையும் எழுப்பாமல் மௌனமாகப் படுத்திருந்தாள். இவளுக்கோ...! வார்த்தைகளால் சொல்ல முடியாத அடிவயிற்று வேதனை. அறையில் கடமையில் ஈடுபட்டிருந்த தாதி ஓடிச்சென்று டாக்டரை அழைத்து வந்திருந்தாள்.

வந்தவர் டாக்டர் விஸ்வாசம். கேரளா நாட்டில் பிறந்து யாழ்ப்பாணம் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்ற வந்திருக்கிறார். முகத்தில் ஒரு தெய்வீக ஒளி. கருணை பொழியும் கண்கள். “அம்மா! ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நாங்கஎல்லாம் இருக்கிறோம். தைரியமாக இருங்க” என்று கூறியவுடன் கைகளுக்கு ரப்பர் அணிகளை அணிந்துகொண்டார். தானும் பச்சைநிற மேலங்கியை அணிந்து கொண்டார். அதற்கிடையில் தாதி சில, பல ஆயுத உபகரணங்களை கொதிநீரில் அவித்தெடுக்கிற ஓசை கேட்டது. பார்க்க முடியவில்லை. கண்கள் லேசாகத் தூக்கத்தை நோக்குவது போன்ற ஒரு மயக்கம்.

***

காலைப் பொழுதாகி விட்டது. முற்பகல் 10.00 மணி இருக்கும் போல. கால்களை அசைக்கமுடியவில்லை. மரக்கட்டைபோல விறைத்துக் கிடந்தன. பிறப்புறுப்பிலிருந்து ஈரக்கசிவு... தெரிகிறது. அவளுக்கு அறிவு வரத்தொடங்கிவிட்டது. தையல் போட ஆயத்தமாகிறார் டாக்டர். அப்போ குழந்தை பிறந்ததோ?... பிறக்கவில்லையோ? என்ற சந்தேகமும் பிறந்தால்... வெட்டி எடுத்திருப்பாரோ? அழுகுரலைக் காணவில்லையே என்ற கேள்விகளும் அவள் மனதில் எழாமல் இல்லை. வாயே திறக்க முடியாமல் அலகு முழுவதும் இறுகிப் போனது போன்ற ஒரு பூட்டு. இது என்ன விந்தை!

அந்தக் காலத்துத் தாய்மார் ஒரு மணித்தியால குத்து வேதனையுடன் பெற்றுவிட்ட சேதி கேட்ட அவளுக்கு பெரிய மலைப்பாகவும், வேதனையாகவும், அழுகையாகவும் இருந்தது. பிறப்புறுப்பின் இரு புறங்களுக்கும் ஊசி நைலான் நூல் போன்ற ஒரு சிறு கருவி கொண்டு தையல் போடப்படுகிறது. அது தாங்கமுடியாத வலியாக இருந்தது. ஐயோ! என் குழந்தை எங்கே? இவர்களை எப்படிக் கேட்பது? துணிந்து வாயைத் திறந்தாள். ஊசி கோர்க்கும் வலி தாங்கமுடியாதிருந்த போதிலும் ‘தான் பத்து மாதம் சுமந்த குழந்தையின் அழுகுரல் கேட்கவில்லையே’ என்ற தவிப்புத்தான் அவளுக்கு மேலோங்கி நின்றது. “டாக்டர், என்ரை குழந்தை எங்கே?” கேட்டுவிட்டாள். “கழுவிக் கொண்டிருக்கிறாங்க, அழுகுரல் உங்களுக்குக் கேட்குதா? அதுதான் உங்கள் பையன் குரல்” டாக்டர் புன்னகைத்துக்கொண்டே சில கேள்விகள் கேட்கிறார். அவளுக்குத் திடீரென காது கேட்குந் திறன் கெட்டுவிட்டதாக உணர்கிறாள்.

அந்த நேரம் துளிர் நிற பச்சைக் கம்பளியால் சுற்றப்பட்ட குழந்தையொன்றை அவளின் முகத்தருகே காட்டிவிட்டு, “பேபியை

முதலில் உங்கடை அறையிலுள்ள தொட்டிலில் வைக்கப் போகிறேன். 2 மணித்தியாலம் கழித்த பின்தான் உங்கள அறைக்கு அழைக்க வருவேன்" தாதி அவ்விடம் விட்டுப் போய்விட்டார். யாருடன் பேசுவது? ஒன்றுமே புரியவில்லை திரைச்சீலையின் மறுபுறத்து கட்டில் சும்மா கிடந்தது. அதிலிருந்த தாய் தன் அறைக்குப் போய்விட்டாரா? ஒன்றுமே தெரியவில்லை. கேள்வியை யாரிடம் கேட்பது? அவளுக்குரிய பதிலை யார் தருவார்? திரும்பவும் தூக்கம் கண்களை மறைக்கிறது. ஒரு குழந்தையின் குரல்... அழுகுரல்... அது என் குழந்தையின் குரலோ? குளிர்தாங்காமல் அழுகிறதோ? ஐப்பசி மாதக் குளிர்தானே. கம்பளிச் சட்டை போட்டார்களோ? தகப்பன் எடுத்துக் கொடுத்தாரோ?.. திரும்பவும் தூக்கம் கண்களை மூடுகிறது.

நண்பகலாகிவிட்டது. அவளை ஸ்ரெச்சரில் தள்ளிக் கொண்டு வந்து அறையிலுள்ள படுக்கைக்கு (2 தாதிமார்) மாற்றிவிட்டு, போர்வையால் போர்த்திவிட்டுப் போய்விட்டனர்.

அவர்கள் அகன்றதும் அவளின் நெற்றியில் முத்தமிட்ட கணவனின் கண்களில் கண்ணீர் வழிகிறது. "நான் அழவில்லை மணி, பயந்த சுபாவங் கொண்ட நீங்கள் இப்படி வெற்றித் தாயாக வந்ததால் வந்த ஆனந்தக் கண்ணீர்தான் இது. ராத்திரி உங்களை 'லேபர்றூமு'க்கு கொண்டுபோன நேரத்திலிருந்து நான் தனிய அனுபவித்த வேதனை+துடிப்பு சொல்லமுடியாது." அப்பொழுது அவள் உணர்ந்தாள். வைத்திய முன்னேற்றம் வேதனையைக் குறைத்துக் குழந்தையை எடுத்துவிட்டது. 12 மணித்தியாலங்களாக தன் கணவன் அனுபவித்த வேதனை. அவரே– தாய்... அதுதான் பிரசவித்**தாய்.**

❍

# செத்துப் பிழைத்தாய்

**அ**வன் பைசிக்கிளில் வந்துகொண்டிருந்தான். அவனது வீட்டிற்கு இரண்டு வீடுகள் எதிர்ப்புறத்திலிருந்து ஒரு நாய் அவனது காலைப் பதம் பார்த்து விட்டது. முன்பு ஒரு தடவை கடித்து – மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் ஒரு வாரமாக வைத்திருந்து வைத்தியம் செய் வித்து வீட்டிற்குக் கொண்டுவந்தார்கள். அவனுக்கு நீரிழிவு நோய் இருந்தது. தனக்கு நோய் இருக்கிறதென்றே மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டான். அதை, ஒரு அவமானமாகவே நினைத்தான். தான் ஒரு 'சுகதேகி' என்றும்– நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் 'வீரன்' என்றும் தனக்குள் தானே ஒரு கர்வம். யாராவது "ஏன்? நன்றாக மெலிந்து விட்டீர்கள்?" என்று கேட்டுவிட்டால் "அப்படி ஒன்றுமில்லை. நான் நன்றாகத்தானே இருக்கிறேன்" என்று சமாளித்து மழுப்பிவிடுவான்.

இவ்வளவுக்கும் 1966ம் ஆண்டு 21 ஒக்டோபர் புரட்சிகர எழுச்சி ஊர்வலமானது சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து புறப்பட்டது. இவனுடன் ஆயுட் கால தோழர்களான டாக்டர் சீனிவாசம், வீ. ஏ. கந்தசாமி மற்றும் டானியல், செந்திவேல், சூடாமணி போன்ற புரட்சிகரத் தோழர்களும் முன்னணியில் புறப்படத் தயாராக இருந்தனர். அவர்கள் எழுப்பிய கோசங்கள் பக்கத்தில் இருந்த காவல் நிலைய அதிகாரிகளின் காதில் நாராசமாக விழுந்தன.

"சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்", "இப்படை தோற்கில் எப்படை வெல்லும்" என்றும் "போலீஸ் படைக்கு அஞ்சமாட்டோம். அடித்தாலும் கெஞ்சமாட்டோம்" என்ற ஆவேச வார்த்தைகள் பாதுகாப்புப் படையின் பொறுமையை இழக்கச் செய்தது. "அடித்து நொருக்குவம் வாருங்க" என்று போலீஸ் உத்தியோகத்தர்கள் ஆவேசத்துடன் வெளியே வந்து ஊர்வலத்தினரை அடித்துக் கலைக்க முயன்றார்கள். போலீஸ் இலாகாவில் உயர் பதவிகளில் இருந்தவர்கள் வடமாகாணத்தில் உயர் வேளாள குடும்பத்தில் பிறந்தவர்கள். தெல்லிப் பழை, வசாவிளான், இணுவில், காங்கேசன்துறை, குரும்பசிட்டி, பலாலி ஆகிய ஊர்களில் பிறந்து – பாடசாலைகளில் விளையாட்டு வீரர்க

ளாகவும்— உடற்பயிற்சி தீரர்களாகவும் விளங்கியவர்கள்– தங்கள் வேளாள இனத்தைச் சேர்ந்த ஒருவன் இப்படியான “கம்யூனிஸ்ட் கட்சி யின் வாலிபர் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி ஊர்வலத்துக்குத் தலைமை தாங்குகிறானே” என்ற வெறுப்புணர்வு மேலிட அடித்துக் காயப் படுத்தியதுடன் அன்றிரவு சுன்னாகம் போலீஸ் நிலையத்திலேயே மணியத்தை மாத்திரம் அடைத்து வைத்து விட்டனர்.

அவரது உடன்பிறந்த தம்பி இலங்கைநாயகம் என்ற பெயரும் “செல்லக்குட்டி” என்ற உறவுப் பெயரும் கொண்டவன் யாழ் விவேகானந்தா அச்சகத்தில் வேலை செய்பவர். அவர் வேலை விட்டு மாலை வீடு திரும்பும் நேரம், வசாவிளானைச் சேர்ந்த ஒரு போலீஸ் அதிகாரி நிலைய வாசலில் காத்திருந்து “செல்லக்குட்டி இஞ்சை வாரும். உம்மடை அண்ணர் பொய்யாமொழியை ஊர்வலம் போகின மெண்டு தடுத்து நிறுத்தி அடித்து நொருக்கி– அடைச்சு வைச்சிருக்கினம். இதை வீட்டிலை போய்ச் சொல்லும். நாளைக்குத்தான் விடுவினம் எண்டு நினைக்கிறன்” என்று கூறினார். அதைக் கேட்டபின் செல்லக்குட்டிக்கு கொல்லங்காட்டுக்குப் போகமுடியவில்லை.

‘சின்னண்ணன் குடும்பம் காரைநகரில் இருக்கிறார்கள். இந்தச் செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இரவு முழுவதும் அண்ணை வீட்டிற்கு வரவில்லையென்று அண்ணி கவலைப்படுவாவே. குழந்தைகளும் மூன்றும் பாவம்! அவ தனிய வாடகை வீட்டில். வேறு யாரும் ஆள் உதவியும் கிடையாது’ என்று எண்ணி சுன்னாகத்திலிருந்து காரைநகர் மருதடி பிள்ளையாருக்கு அயலில் உள்ள அந்த வீட்டிற்கு வந்துசேர்ந்தார். சுன்னாகத்திலிருந்து ½ மணித்தியாலத்தில் தெல்லிப்பழைக்கும் போய்ச் சேர்ந்துவிடலாம். அவர் இரவு 9.30 க்கு காரைநகர் வந்து சேர்ந்தார். மழையும் தூறிக் கொண்டிருந்தது. பொன்னாலைப் பாலங்கள் 9 கடந்து வலந்தலைச் சந்திக்கு வரவே எதிர்க்காற்றில் சைக்கிள் உழக்குவது என்றால் அந்தச் சிரமத்தைச் சொல்ல முடியாது. வேலைமுடிந்து, பசிக்களையுடன் இவ்வளவு தூரம் வருவதென்றால் கூடப்பிறந்த இரத்தபாசமா? அல்லது அவரும் இன்னொரு இடதுசாரி இயக்கத்துடன் இணைந்திருந்த மனித நேயமா?

இதே தம்பிக்கு 2 வருடங்களுக்கு முன்னர் பொய்யாமொழி சார்ந்திருக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவரான டாக்டர் சு. வே. சீனிவாசகம் அவர்களை வயது மரியாதை இல்லாமல் அடித்து விட்டார் என்ற காரணத்திற்காக விவேகானந்த அச்சகத்திற்குச் சென்ற பொய்யாமொழி அவரை வெளியே அழைத்து புரட்டி புரட்டி அடித்திருந்தார்..

இலங்கைநாயகம் செய்தியைச் சொல்லிவிட்டுத் தனது வீட்டிற்குப்

போவதற்காகச் சென்றுவிட்டார். பாவம், களைத்து வந்தவருக்கு ஒரு தேனீர் கூடத் தயாரித்துக் கொடுக்கிற மனத் தைரியத்தில் அவள் இருக்கவில்லை. 4 வயது, 2 வயது, 6 மாதக் கைக்குழந்தைகளுடன் அவள் தட்டத் தனிய வாடகை வீட்டில் விடியும் வரை அழுது கொண்டே இருந்தாள்.

விடிந்துவிட்டது. மூத்த குழந்தை இராசனை பேபி வீட்டிற்கு அனுப்பினாள். பேபியும், தம்பி சுந்தரமும் சுட்ட தோசையும் தேத்தண் ணீரும் எடுத்துக்கொண்டு அவ்விடம் வந்துவிட்டார்கள். மத்தியானம் வரை ஒன்றுமே சமைக்கவில்லை. கணவன் வீட்டிற்கு வரும்வரை– மனம் அழுதுகொண்டேயிருக்கிறது. அவர்களது மகள் பபியோ– தனது தகப்பனின் நெஞ்சின்மேல் ஏறித்தான் படுத்து உறங்குவாள். 2 விரல்கள் சூப்பிக் கொண்டு உறங்குகிற அந்தக் குழந்தை அன்றிரவு முழுவதும் சிணுங்கிச் சிணுங்கிக் கொண்டும், முனகிக் கொண்டும் புரண்டு, புரண்டு உழன்றாள்

பகல் 1.00 மணிக்கு மணியம் தோழர் வீட்டிற்கு வந்தார். பேபியின் அம்மா தங்கரத்தினம் அவரது உடம்பிலுள்ள போலீஸ் (பற்றன்பொல்லு) தடியடிகளின் காயங்களைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதா. உடனே வீட்டிற்குப் போய் (அவர்கள் வீட்டில் செக்கு வைத்து– எள்ளில் இருந்து எண்ணெய் வடிக்கிற தொழில் நடாத்திவந்தவர்கள்) மஞ்சள் அரைத்து– நல்லெண்ணெய்க்குள் கரைத்து எலுமிச்சம் பாதியைத் தென்னம் ஈர்க்கில் குத்தி– கொதி எண்ணெய் தயாரித்து வந்து ஒத்தடம் கொடுத்தார்கள். நொச்சி, பாவட்டை,, இலுப்பை, முத்தாமணக்கு என்ற இலைகளைத் தேடி, தேடி சேகரித்துக் குழை– உருவிக் குளிக்க வார்க்க உதவினார்கள். தவிடு வறுத்து அடிபட்ட கொழுக்கட்டை போன்ற காயங்களுக்கு ஒத்தடம் கொடுத்தார்கள். தவிடு வறுத்து ஒரு துணியில் போட்டு சுடு ஒத்தடம் கொடுத்தார்கள். மூளாயிலுள்ள சண்முகம் முறிவு, நெரிவு வைத்தியரிடம் நோவு எண்ணெய் வாங்கிச் சூடு பண்ணிப் பூசிப் பார்த்தார்கள். தங்கரத்தினம் அம்மா– மணியத்தை “தம்பி” என்று தான் அழைப்பார். பிள்ளைகளும் “சின்னையா” என்றுதான் அன்பொழுக அழைப்பார்கள்.. அடுத்தடுத்த மாதங்களில் மணிக்கு வேலை மாற்றல் கிடைத்து காலையடிக்கு மாறிப் போகும் போது “செத்துப்பிழைத்**தாய்**” என்று பல ஆதரவான வார்த்தைகளுடன் வழியனுப்பி வைத்தனர்.

❍

# ஊகித்து உணர்ந்தாய்

**மூ**ளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 61ம் இலக்க அறையில் அவள் படுத்திருந்தாள். அவளது கட்டிலுக்கு அண்மையிலுள்ள தொட்டிலில் ஆண் குழந்தை ஒன்று உறங்கிக் கொண்டிருக்கிறது. அறையின் வெளி வராந்தாவில் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் அவன் உட்காரந்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் மூத்த மகனும், மகளும் நிற்கிறார்கள்.

அன்று "மே தினம்". அவன் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்ட இத்தனை வருடங்களில் இன்று தான் மேதின ஊர்வலத்திலோ, கூட்டத்திலோ கலந்துகொள்ளாமல் இருப்பது இந்த வருடந்தான். அவனது மனமெல்லாம் யாழ்ப்பாணத்தில் நடக்கும் நிகழ்ச்சி யில்தான் இரண்டறக் கலந்திருக்கிறது. அவள் பிரசவித்து இன்று இரண்டாம் நாள். இந்த மூன்றாவது பிரசவத்தில் அவள் மிகவும் களைத் துப்போய்விட்டாள். 'இரத்தம் மிகக் குறைவு' என்று வைத்தியசாலை நிர்வாகம் கூறியதும் ஒரு காரணம். 'வேலை, குழந்தைகள், வீட்டுப் பொறுப்பு' என்று அவள் பட்ட சிரமங்களை அவன் உணராமலில்லை. இருந்தும், சகல ஒழுங்கு நடவடிக்கைகளையும் முன்கூட்டியே மற்றத் தோழர்களுடன் சேர்ந்து ஆயத்தப்படுத்திவிட்டுத்தான் ஆஸ்பத்திரியில் தங்கினான். "போய்ப் பங்குபற்றி விட்டுத் திரும்பிவர இரவு பன்னிரண்டு மணியாகி விடுமே" என்று தோழர்கள் தான் போகவிடாமல் தடுத்தார்கள். "இந்த ஒரு வருடந்தானே. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் அக்காவுடன் தங்கிக் கொள்ளுங்கள். மூத்த குழந்தைகள் இரண்டையும் யார் பார்த்துக் கொள்வது?" என்று வலுக் கட்டாயமாக அவனைத் தடுத்துவிட்டார்கள்.

அவனையோ, அவனது தோழர்களையோ பொறுத்தவரை அவர்களுக்கு "மேதினம்" மாத்திரம்தான் புதுவருடம், தீபாவளி, பிறந்த நாள், கலியாணநாள், திருவிழா, உற்சவம் எல்லாமே! இந்த நாளில்தான் சிவப்புநிற 'சேர்ட்' அணிந்து மனைவி, மக்களுடன் புறப்படுவது மிக நெருங்கிய நண்பன் வீட்டுத் திருமணத்திற்குப் போவதுபோலத்தான்.

அதிகாலையிலேயே முகச்சவரம் செய்து குளித்துச் சுத்தமாகப் புறப்படுவது இந்தப் புனிதமான உற்சவத்திற்குத்தான். அவனையோ– அவனது தோழர்களையோ பொறுத்தவரையில் இது வருடாவருடம் வருகிற ஆரவாரமான திருவிழாதான். சகல தோழர்களும் தாங்கள்

வசிக்கிற கிராமத்திலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு பேரூந்துச் செலவுக்குப் பணம் வேண்டுமே" என்பதற்காக முன்கூட்டியே 25 சதம், 50 சதம் என்று சேர்த்துச் சேர்த்து சில்லறையைச் சேமித்து வைப்பார்கள். வேறெந்தத் தேவைக்கும் அந்தச் சில்லறையை எடுத்துச் செலவு செய்ய அவர்களுக்கு மனம் வராது.

அவளுக்கு இது மூன்றாவது பிரசவம். விவாகமாகி 5 வருடங்களில் 3 பிள்ளைகள். "ஒரு குழந்தைக்கும், அடுத்த குழந்தைக்கும் ஆகக் குறைந்தது 5வருட இடைவெளி இருக்க வேண்டும். அப்போதுதான் பிரசவத்தில் அவள் இழந்த இரத்தத்தை மீண்டும் சேகரித்து– பச்சை உடம்பு தெம்பு பெறும்" என்பது அனுபவசாலிகளின் ஆலோசனை, ஊகம் என்பதுதான்.

ஆஸ்பத்திரியில் ஆயத்த அறையிலோ அல்லது பிரசவிக்கும அறையிலோ அவள் கூச்சலிடமாட்டாள். தான் கூச்சலிட்டு அழுதால் வெளியே நிற்கும் தனது கணவன் கவலைப்படுவானே என்ற ஆதங்கம் அவளுக்கு. அத்துடன் மற்ற இரண்டு குழந்தைகளுக்கு ஆதரவளிப்பாரோ, உணவு தயாரித்துக் கொடுப்பவர்களோ யாருமே கிடையாது. வேலைக்குப் போய்க் கஸ்டப்படுகிற உனக்கு, மூத்த இரண்டு பிள்ளைகளோடு நீ அல்லாடுகிறதைப் பார்க்கும்போது உனக்கு மூன்றாவது குழந்தையும் தேவைதானோ?' என்று அவளது பெற்றோர் நேரிலே கேட்டு அவளை அழ வைத்துவிட்டனர். பொருளாதார வரட்சி தான் உட்காரணம். அதை வாயாலே சொல்லாமல் ஆஸ்பத்திரிக்கே வராமல் நிராகரித்து விட்டனர். இந்தக் குழந்தை வயிற்றில் செனித்த 50வது நாள் அவள் பஸ் வண்டிக்குக் காத்திருந்த நேரத்தில் "கண்களை இருட்டுது" என்று சொன்னவள் அடுத்த கணம் அந்த இடத்திலே வீழ்ந்து விட்டாள். அவனது சகோதரி பல குழந்தைகளைப் பெற்றெடுத் திருக்கிறாள். இப்படி மயங்கி விழுந்ததை அவன் அறியவில்லை. அவள் வேலைக்கென்று வெளியே போகாமல் வீட்டிலேயே இருக்கிற தாய். அவளுக்கு ஓய்வும், ஆறுதலும் நிறையக் கிடைத்தன. ஆனால், இவனுடைய மனைவிக்கோ அந்த உறவுகள் வழங்கும் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. பத்தியச் சாப்பாடு என்று சொல்லப்படும் அந்தப் பாசத்துடன் கூடிய பராமரிப்புக் கூடக் கைக் கெட்டவில்லை. இவை யாவும் அவனுக்குப் பெரிய துக்கத்தைக் கொடுத்தாலும் தங்களை விட வசதி குறைந்த– ஒரு நேரச் சோற்றுக்கே வழியற்ற வறிய குடும்பதினர் வீடுகளில் 9, 10 என்று எலிக்குஞ்சுகள் போல வருடப் பிள்ளைகளைப் பெற்று– அவர்களுக்கு நேரக்கஞ்சி கொடுக்க முடியாத சாதாரண பாமர மக்களைத் தான் அவனுக்குத் தெரியும். அவர்களோடு தான் அவனது தோழமையும், பரிச்சயமும் இருந்தன.

ஆனால், அவள்– அதாவது அவனது மனைவி உயிரோடு இருந்தால்தான்– உழைப்பு, வருவாய், குடும்பம், குழந்தைகள், ஒத்துழைப்பு இவற்றின் மூலம் அவன் பொதுப்பணியாற்ற வீடுவிட்டுப் போகமுடியும். அத்துடன் இந்த 3ம் குழந்தை வயிற்றில் வந்து 2வது மாதம் அவனது முன்னிலையிலே அவள் மயங்கிவிழுந்தவள். ஆஸ்பத்திரியில் சோதித்துப் பார்த்தபோது "இரத்த வீதம் குறைவு, உடம்பு மிகவும் பெலவீனம்" என்று கூறியிருந்தனர்

பிரசவம் நிகழும் வரை அவன் நிம்மதியாகவே இருக்கவில்லை. அவளுக்கு நடக்கக்கூடாத ஒன்று நடந்துவிட்டால், அவளது பெற்றோர் திட்டித் தீர்த்துவிடுவார்கள். தனது வீட்டாரோ அண்டவும் விடமாட்டர்கள். ஏனெனில்– அவனது கட்சித் தோழர்கள் (ஊரில்) வீட்டிற்கு வந்தால்— அவன் அவர்களை நாற்காலியில் உட்கார வைத்து உரையாடுவான். அவர்கள் எழுந்து சென்றபின் அந்தக் கதிரை கட்டாயம் மஞ்சள் தண்ணீரால் கழுவிச் சுத்தம் செய்யப்படும். இதனை அவன் பலதடவைகளில் பார்த்துத் தனது வீட்டாரை வெறுத்து இருக்கிறான். ஆனால், இவளது வீட்டில் அப்படியான அருவருப்பான எந்தச் செயலையும் அவன் காணவில்லை. இவளது தாய் அரியாலை என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அரியாலை ஊரிலிருந்து சுழிபுரத்துப் பத்திரகாளி கோவிலுக்குப் பங்குனி மாதப் பொங்கலுக்கு– அங்குள்ள அயலவர்கள் (சகல இனமும்) வருகை தருவார்கள். அவளது அம்மா அவர்கள் யாபேருக்கும் வாழை இலையில் தான் பொங்கிய பொங்கலை இட்டு உட்கார வைப்பார். எந்தவிதமான பாரபட்சமோ, ஏற்றத்தாழ்வோ காட்டமாட்டார். செயலிலும் இருக்காது. முகத்திலும் தென்படாது.

அப்படியான குடும்பத்தில் பிறந்த மணியை அவன் மிகமிக உயர்வான இடத்தைக் கொடுத்து தனது மனதில் இருத்தியிருந்தான்.

பற்றாக்குறையும், கைவரட்சியும் இருக்கத்தான் செய்தன. எது எப்படி இருந்தாலும் அவள் உயிரோடு இருந்துவிட்டால்– எந்தவித இக் கட்டுகளையும் அவனால் கடந்துவர முடியும்.

இந்தப் பிரசவம் இலகுவாக அமையவில்லை. 10 மணித்தியாலப் போராட்டத்தின் பின்னர் தான் தாய் வயிற்றிலிருந்து சிசுவை வெளியே எடுக்க முடிந்தது. தான் குழந்தைகளுடன்– அந்த அறைக்கு வெளியே நின்றால் தான் அவளுக்கு உயிர் வலுப்பெறும்– நீடிக்கும் என மிகத்திடமாக நம்பினான். அதனால் அவன் ஊகித்து உணர்ந்தாய்– என ஆகினான்.

❍

# வளர்த்தெடுத்தாய்

**அ**வர்களுக்கு இரண்டு குழந்தைகள். ஒரு வருட இடைவெளியில் பிறந்தவர்கள். வளர்த்தெடுப்பதில் தாய்க்கு மிகுந்த சிரமம். மெல்லிய உடல்வாகும்– பூப்போன்ற தன்மையும், மென்மையும் கொண்ட அவள் எப்படி இந்தக் குழந்தைகளை வயிற்றில் சுமந்தாளோ? என்று உறவினர்களும் அயலவர்களும் வியப்புறுவர்.

குழந்தைகளுக்கு குளிக்க வார்ப்பது, உணவூட்டுவது, தூங்க வைப்பது இப்படியே சங்கிலித் தொடர்பான தாய்க்கே உரித்தான கடமைகளில் அவள் தன்னை மறந்துவிட்டாள். ஒரு வேலை முடிய அடுத்த வேலை, அந்தவேலையும் முடிய மற்றொரு வேலை, நாளைக்கு என்ன உணவு? என்ற திட்டமிடுதலிலேயே அவளது பொழுதுகள் கரைந்தன.

இப்படியே இரண்டாவது குழந்தைக்கு 3 மாதம் கடக்கும்போதே அவளுக்கு முள்ளந்தண்டு வருத்தம் வந்துவிட்டது. குனிய, நிமிர முடியாது. ஒரு கிலோ பாரங்கூடத் தூக்கமுடியாது. சாப்பிட முடியாமையினால் உடல் பலவீனமும் ஏற்பட்டுவிட்டது.

விஞ்ஞானம் முன்னேறிய காலத்தில் மூத்த குழந்தைக்கும், அடுத்த குழந்தைக்கும் 5 வருட இடைவெளியாவது இருந்தால் தான் தாயின் உடல்நிலை தாங்கும் என்பது சகலருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் இவர்களுக்கோ 7 மாத இடைவெளியில் அடுத்த குழந்தை வயிற்றில் வந்துவிட்டது.

முதற் குழதையின் பேறு காலத்தில் அதிக இரத்தம் வெளியேறியதால் அவள் வெளிறிப் போய் இருந்தாள். தகப்பனாரின் உடல்நிலையும் அவளைப் பாதிக்காமல் விடவில்லை. படிக்கும் காலத்தில் சகல விளையாட்டுப்போட்டிகளிலும் பங்குபற்றி முதல் பரிசு பெற்று விட்டவள். ஓட்டப் போட்டிகளில் கல்லூரிகளுக்கிடையிலான போட்டியில் முன்னணியில் வந்து வட்டாரப் போட்டி– மாவட்டப்போட்டி வரை சென்று வெற்றிக் கோப்பைகளைப் பெற்றுக் கொண்டவள். வலைப் பந்தாட்டத்தில்

அவளே முன்னிலை வகிப்பாள். கையில் பிடித்த பந்தினை ஓடிச்சென்று மேலே எம்பி கம்பி வளையத்துள் செலுத்திவிட்டாள். மறுகணம் நிலத்தில் சாய்ந்தாள். தோள் மூட்டு விலகிவிட்டது போன்ற தாங்க முடியா வேதனை. உடற்பயிற்சி ஆசிரியையும் மற்றைய தோழிகளும் முகத்துக்குத் தண்ணீர் தெளித்து விசிறியினால் வீசி– "குளுக்கோஸ்" வாய்க்குள் கொடுத்து பலவிதமான பரிகாரங்கள்– முதலுதவிகளைச் செய்தார்கள். உடற்பயிற்சி ஆசிரியை மிக லாவகமாக அவளது கையைச் சற்று மேலே தூக்கி– தனது மறுகையால் அவளுடைய தோள்பட்டையை இறுகப்பற்றி– அந்தப் பந்துக்கிண்ணத்துள் இந்தக் கையைச் செருகிய முதலுதவியை வெற்றிகரமாகச் செய்து முடித்து வைத்தார்.

மயக்கம் தெளிந்தவள் விக்கி விக்கி அழுதாள். ஏனெனில் பெண்களுக்கே உரித்தான மாதாந்த விலக்கு வரும் நாட்களில் போட்டிகளில் பங்குபற்ற வேண்டாமெனத் தாய் புத்திமதி கூறியிருந்தாள். ஒரு நாள் கல்லூரி அதிபரை நேரில் சந்தித்தும் மேற்படி விடயத்தைப் பற்றி தாயார் கூறியிருந்தார். ஆனால், அதிபரோ கூறிவிட்டார். "அவள் மூலம்தான் எமது கல்லூரி விளையாட்டுப் போட்டியில் முதலிடம் வகிக்கிறது. உங்கடை பேச்சைக் கேட்டால் விளையாட்டுப் போட்டியே பெண்களுக்கு ஆகாது என்று கூறிவிடுவீர்கள் போலே கிடக்குது. உந்தப் பேச்செல்லாம் எடுபடாது" என்று கூறித் திருப்பி அனுப்பிவிட்டார்.

'தான் வீட்டிற்குப் போய்—தோள் மூட்டுக் கழன்ற கதையையும், அந்த இடம் சற்று வீங்கியிருப்பதையும் கூறினால் தாயார் அழுதுவிடுவாரே' என்று பயப்பட்டாள். பயந்து வீட்டிலே சொல்லாமலே விட்டுவிட்டாள். படுக்கையில் திரும்பிப் படுக்கும் போது 'நெருக்'கென்ற ஒரு விலகல்... அதையொட்டித் தாங்கொணாத நோவு... திரும்ப... அந்தக் கை தன் இருப்பிடத்தில் கொழுவி சரியாக நிற்பது போன்ற ஒரு உணர்வு. இப்படியே பயந்து பயந்து காலமும் ஓடிவிட்டது.

***

இன்று டாக்டர்கள் "பெட் றெஸ்ற்" கட்டாயம் என்று கூறிவிட்டனர். கணவனோ ஒரு கல்லூரி விரிவுரையாளர். கடமையாற்றப் போகாமல் மருத்துவ லீவில் முதல் 2 வாரங்கள்– அடுத்த இரண்டு வாரங்களென வீட்டோடு இருந்தார்.

அதிகாலை குழந்தைகளின் பாலைக் கரைத்து போத்திலில் விட்டு– இரண்டு குழந்தைகளையும் தனது தொடைகளின் மேல் தலையணையாக்கி இடக்கையாலும், வலக்கையாலும், பாலூட்டிய பின் அவர்களின் இயற்கைக் கழிவுகள் அப்புறப்படுத்துதல்– சுடுநீரால்

அவர்களின் உடம்பைத் துடைத்தல்– ஈரம் துவட்டுதல்– பவுடர், ஓடிக்கொலோன் முதலானவற்றை அவர்களுக்கு பூசுதல்– உடுப்பு அணிவித்தல்– தூங்கப் பண்ணுதல் அடுத்த நேரத்திற்குரிய தயாரிக்கப்பட்ட உணவுகளை நெஸ்டம், செரலாக் போன்ற பல்தானிய பக்குவப் படுத்தப்பட்ட உணவுகளை நேரந்தவறாமல் ஊட்டுதல்– பழச்சாற்றினை கொதித்து ஆறிய நீருடன் கலந்து பருக்குதல்– இரவில் அத்தனை பாத்திரங்களையும் ஒரு பெரிய சட்டியில் இட்டு அவித்து எடுத்து வைத்தல்– கழுவிக் காயவிட்ட "நப்கின்" போன்ற துணிகளை பக்குவமாக மடித்துவைத்தல், இப்படியான கைங்கரியங்களை முகஞ் சுழிக்காது– சிரித்த முகத்துடனே செய்வான். நிறையப் படிக்கவேண்டும். படித்தவற்றை மாணவர்களுக்கு இலகுவில் எடுத்துக்கூற தன்னைத்தானே தயார்ப்படுத்தவேண்டும். அதற்காக– அறிவுத் 'தேடல்' என்பது நிறையப் புத்தகங்களை வாசித்து நினைவில் இருத்திக் கொள்வதே தனித்திறமை.

இப்படியே சில ஆண்டுகள் கழிய விரிவுரையாளர் என்ற பதவியும் நாடி வந்தது. இன்று குழந்தைகளையும் பாராட்டிச், சீராட்டி வளர்த்தது மாத்திரமல்ல. அறிவுச் செல்வங்களாக உயர்த்திய பெருமையும் உடனிருந்தது.

சுகப்பட்ட தாய்– பின்னாளில் தனது பொறுப்பினைச் செவ்வனே செய்தாள். பிள்ளைகளின் உணவு, உடை,, கல்வி அதன் பின்னர் உயர் கல்வி யாவும் அன்னையின் கண்காணிப்பிலேயே தங்கியிருந்தது. இல்லறத்தைத் திட்டமிட்டு நடாத்துவதோடு நின்று விடாமல் குடும்பத்துடன் பாசமுடன் பழகிய நட்பு வட்டங்களையும் அரவணைத்துச் செல்கிற ஒரு மனித நேயப் பண்புடன் வாழ்ந்தாள். இரண்டு குழந்தைகளையும் தாயார் பெற்றார். தந்தையார் சிறிதுகாலம் வளர்த்துக் காத்தார். இருவருக்குமே அநேக பொறுப்புகள் காத்துக் கிடந்தன.

பிள்ளைகளைப் பெறுவது மாத்திரமல்ல, போதிய கல்வியறிவினை வழங்குவதும்– அவர்கள் சமுதாயத்தின் வளர்ச்சியில் அக்கறையும், பற்றும் கொண்டவர்களாக வாழப் பழக்குவதும்– நன்றி மறவாமை, கீழ்ப்படிவு, துன்பம் கண்டபோது ஓடோடிச் சென்று உதவுவது போன்ற சான்றாண்மை வாய்ந்தவர்களாக அவர்கள் மிளிர்ந்தமை பெற்றோராகிய இருவருக்குமே பங்குண்டு. ஆகவே வளர்த்தெடுத்**தாய்** என்ற அரும்பதத்துள் அவர்களை விளிக்கலாமே!

# என் தொழிலைக் காத்து உன் தொழிலை இழந்தாய்

**கா**ங்கேசன்துறை– சீமெந்துத் தொழிற்சாலை கல் லொறியின் இயந்திர ஓட்டுநர் கீரிமலை இராசாவுக்கு ஒரு கவலை. அவரது தம்பி போல சிறுவயதிலே இருந்து இன்றுவரை ஒன்றாக விளையாடிப் பழகிய பொய்யாமொழி இன்று அவனது சகாவான கதிரித்தம்பிக்கு ஒரு உதவி செய்யப் போய்... தனது வெளிநாட்டுப் புலமைப்பரிசுடன் கூடிய உயர் கல்விப் பயிற்சி நெறியையும் இழக்கிறானே? என்று. பொய்யாமொழி இரண்டு நாட்களாக வேலைக்கு வரவில்லை. அவனுக்கு என்ன நடந்த தென்றே தெரியவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்னர் முற்பகல் பத்துமணி இருக்கும். கதிரித்தம்பி தனது "குழந்தைக்குச் சுகமில்லை. ஓடிப்போய் ஒரே எட்டில் பார்த்துவிட்டு வருகிறேன். பொய்யாமொழியிடம் நான் வேலைக்கு வந்த தாகக் 'காட்' அடிக்கச் சொல்லிவிட்டேன். பெரியவன் 'விக்ரர்' விசிற்றில் வருகிறதுக்கு முன்னர் வந்துவிடுவன்" என்று சொல்லிவிட்டுப் போனான். பொய்யாமொழியின் கஷ்டகாலம் போனவன் 12.30க்கும் திரும்பி வரவே இல்லை. மத்தியானச் சாப்பாட்டு வேளைக்கு முன்னர் 'விக்ரர்' எல்லா இடமும் 'விசிற்' அடிக்கிறது வழக்கம். அன்றும் அப்படித்தான் வந்து விட் டான். சகல தொழிலாளிகளும் தத்தமக்குக் குறிப்பிட்ட இடத்திலிருந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். இரும்பு வேலை, தச்சுவேலை, மேசன் வேலை, சாயம் பூசுகிற வேலை, இப்படியான வேலைகள் தொடக்கம் லிகிதர் வேலை, எக்கவுண்டன் வேலை, சம்பள டாப்புச் சரி பார்க்கிற C.C.—வரை மாத்திரமல்ல; தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அரைக்கப்பட்ட சீமெந்து கலவையைப் பூதக்கண்ணாடி பிடித்துச் சரி பார்க்கும் எஞ்ஜினியர் வரை மிகமிக அதிகப்படியான தொழிலாளர் குழாமை உள்ளடக்கியது அந்தச் சீமெந்துத் தொழிற்சாலை. வாகன ஓட் டுநர்கள், மெக்கானிக்குகள் என்ற எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த உடுப்பு டன் வேலை செய்யும் கூட்டமும் அங்கே உண்டு.

தொழிற்சாலைக் காம்பவுண்டுக்குள் 2, 3 கன்ரீன்களும் உண்டு. சாப் பாடு கொண்டு வராதவர்கள் வாங்கிச் சாப்பிடுவதற்கு வடை, சுண்டல், பக்கோடா விற்கிற தேத்தண்ணீர்க் கடை போன்ற சிறிய 'கன்ரீன்' தொடக்கம் இறைச்சிக் கறியுடன் கூடிய பிரியாணி கிடைக்கிற நம். 1 கன்ரீனும் உண்டு. மிகமிக விலை கூடிய உணவு வகையைப் பெற்றுக் கொள்ளுகில் முதல்நாள்– அல்லது அதிகாலையிலேயே 'ஓடர்' கொடுத்துவிட வேண்டும். அப்படி நேரத்துடன் 'ஓடர்' கொடுத்தால்தான் அவர்களால் அந்த உணவைத் தயாரித்து வழங்கமுடியும். 'ஓடர்' கொடுத்த உணவை உரிய நேரத்தில் அவர்கள் வந்து பெற்றுக் கொள்ளாது விட்டு விடுவார்களோ? என்ற சந்தேகத்தில் உணவின் பெறுமதியை முன்கூட்டியே கொடுத்துவிட வேண்டும். சிற்றுண்டிச்சாலையில் அப்படி இல்லை. எப்படியும் வடையோ, சுண்டலோ, வாய்ப்பனோ அல்லது பகோடாவோ கிடைக்கும். விலை மலிந்த சிற்றுண்டிகள் கிடைக்கும் கன்ரீனுக்கு யாழ்ப்பாண தாழ்ந்த குல இளைஞர்கள்தான் வந்து தேனீர் குடிப்பது வழக்கம். அந்தத் தாழ்ந்த குலத்தவருடன் உயர்சாதியில்— அதாவது மானிப்பாய் போர்மன் தேவராஜா போன்றவர்கள் போக மாட்டார்கள். சமமாக ஒரே வாங்கில் உட்கார்ந்து சமபந்திச் சிற்றுண்டி சாப்பிடவும் மாட்டார்கள்.

"உவன் பொய்யாமொழியை அந்த அவன்களோடை தோளிலை கை போட்டுக் கொண்டு தேத்தண்ணி குடிக்க வேண்டாமென்று எத்தினை நாள் எச்சரித்துப் போட்டன்" என்று சினந்தார். 'பேணர்' சபா ரத்தினம் கூட தன் மனைவி மனோன்மணியுடன் கோபமாகப் பேசியி ருக்கிறார். "உங்களுக்குத் தெரியும் தானே. அவன் இளவாலை சென்– ஹென்ரீசில் படிச்சவன். அங்கை போடிங்கிலை காங்கேசன்துறைச் செருப்புக் கடைக்காரன் பள்ள மாணிக்கத்தின்ரை பொடியும் இவனும் ஒண்டாய்— ஒரு கோப்பைக்கை சாப்பிடுகிறவர்களாம். இவனை அக்கா வளர்த்த காலத்திலை தொடக்கம், "மனிசர் எல்லாம் ஒரே சாதி. ஏற்றத் தாழ்வு கிடையாது" என்று சொல்லி வளர்த்ததாலை இவனுக்கு உங்கடை கதையெல்லாம் காதிலை ஏறாது. உந்தக் கதையை விட்டு விடுங்கோ" என்று மனோன்மணியும் சொல்லிவிட்டா.

வந்த விக்ரர் அற்றெண்டர் ரெஜிட்டரைப் பார்த்துப்போட்டு அவனவன்கள் அந்தந்த இடங்களில் இருக்கிறான்களோ? என்று 'செக்' பண்ணிப் பார்க்காமல் 'குவாறியில்' கதிரிப்பிள்ளை அந்த இடத்தில் இல்லை என்றும்– அவன் வேலைக்கு வந்ததாகப் பொய்யாமொழி 'காட்' அடித்து வைத்திருப்பதாகவும் சூட்சுமமாகக் கண்டுபிடித்து "நீ செய்யிற வேலையிலை விசுவாசம் கிடையாது. உனக்கு இங்கே இனி வேலை இல்லை" என்ற கடும் வார்த்தையைச் சப்தமெழுப்பாமல் மேலுதடும், கீழுதடும் முட்டும் மாதிரி சாமர்த்தியமாக 'விக்ரர்' சொல்லி விட்டு தன் அறைக்குப் போனது பொய்யாமொழிக்கு மாத்திரம் தான் தெரியும்.

பெரியக்கா கொழும்பிலை கொண்டுபோய் வைத்திருந்து– தனக்குக் குழந்தையில்லாத வாஞ்சை தீர, சப்பாத்து + சொக்ஸ், காற்சட்டை, பெனியன், சேர்ட், டை கட்டி சென், ஜோசப் கல்லூரியில் படிக்க வைத்த சீரும், சாதிகள் இல்லையென்ற தத்துவத்தை மகாத்மா காந்தியின் நூல்களை வாசிக்கக் கொடுத்து வளர்த்ததும் 'தியாகபூமி' என்ற சினிமாவைப் பார்க்கப் பண்ணி மனங்கசிந்து நின்றதையும் பொய்யாமொழியின் இரத்தத்தில் சுவற வைத்தவா மூத்தக்காதான்.

பாசையூர் சந்தியாப்பிள்ளை என்ற அண்ணர் ஒருவர் கொண்டு வந்து கொடுக்கும் ப. ஜீவானந்தம் வெளியிடும் 'ஜனசக்தி' சஞ்சிகைகளை வாசிக்கும் தோறும் பொய்யாமொழியின் உடம்புக்குள் 'ஜிவ்'வென்று செவ்விரத்தம் ஓடும்.

'மான்முத்தையா' என்று இளைஞர்களால் அழைக்கப்படும் சங்கானை—முத்தையா அண்ணரும் அங்குதான் வேலை பார்த்தவர். காண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த தியாகராஜா என்பவரும் அங்குதான் இருந்தவர். ஆங்கிலம் நன்றாகப் பேசுவார். தனது உடுப்புக்களில் கவனம் செலுத்தாத 'உதிரி'யாகக் காட்சியளிப்பார்.

மான்முத்தையா தான்—கதிரிப்பிள்ளைக்கு மூன்று நாட்கள் கழிந்த பின் கூறினார். "போர்மன் தேவராசா தன்ரை தம்பி கனகலிங்கத்தை ஜேர்மனிக்கு ஸ்கொலஷிப்பில் அனுப்ப இருக்கேக்கை இவன் விக்டர் பொய்யாமொழி கெட்டிக்காரன் எண்டு றெக்கமண்ட் பண்ணினவன். அதுதான் இவன்ரை நட்புக்காக காட் அடிச்சதைக் காட்டிக் குடுத்து தேவராஜா தன்ரை பழியைத் தீர்த்துக்கொண்டான்" என்று கதிரித்தம்பியின் வாய் 'என்தொழிலைக் காத்து உன் தொழிலை இழந்**தாய்**" என்று கூறி விசும்பியது.

# அன்புடன் உணவளித்தாய்

**க**ண்டி நகரத்திலே ‘தங்கொல்ல’ என்ற ஒரு இடம். அந்த இடத்திற்கு கண்டி பெரிய பஸ் தரிப்பிடத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு பஸ் போகிறது. ‘தங்கொல்ல’வுக்குப் போகிறவர்கள் மாத்திரமே அந்த ‘பஸ்’ஸில் பிரயாணம் செய்யமுடியும். ‘பேராதெனிய’ றோட்டில் பயணிக்கும் அந்த பேருந்து ‘முல்கம்பொல’ சந்தி கழிந்த பின் சரிவான பாதைவழியே செல்லும். ‘தங்கொல்ல’ பஸ்நிலையத்திலிந்து ½ கி, மீ. தூரத்தில் ‘நஸ்ரின்’ வீடு இருக்கிறது.

இளம் விதவையான அவவுக்கு நான்கு பெண் குழந்தைகள். வயோதிபத் தாயும் மகளுடன் இருக்கின்றா. ஒரு தங்கை மத்திய கிழக்கு நாடு ஒன்றிலே வேலை பார்க்கிறா. இதுவரை விவாகமே செய்யவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற் பிரிவில் படிக்கும் மாணவர்கள் முதல் வருடம் ‘அக்பர்’ விடுதியில் தங்கிவிட்டு மறுவருடம் வெளியில் இருந்துதான் படிக்க வரவேண்டும். அப்படியான வாய்ப்புக்கள் கிடைத்த மாணவர்கள் 6 பேரும் 3 அறையில் தங்கியிருந்தார்கள். 3 நேர உணவுடன் படிக்கிற வசதி, தங்கும் வசதி யாவும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. சோதி, சுரேஷ் இவர்களுடன் கீர்த்தியும் அங்கு தங்கியிருந்தார். தந்தையின் வைத்திய வசதிக்காக கீர்த்தி தன் தகப் பனைத் தன்னுடன் வைத்திருந்தார். மாத ஆரம்பத்திலேயே அந்த அக்காவுக்குப் பணம் கொடுத்துவிட வேண்டும். அப்பணத்தைக் கொண்டு தான் அவ தன்வீட்டு உணவுப் பண்டங்களை முன் கூட்டியே வாங்கிச் சேமித்து வைக்கவேண்டும். சிறுவர்களான பெண் குழந்தைகளுக்குச் சின்ன வயதிலேயே படிப்புடன்– சமையல்வேலை, தையல் வேலைகளை பழக்கி– நல்ல பிரஜைகளாக வளர்த்து வருகிறார்.

மேற்படி விடுதியில் தங்கியிருக்கும் தகப்பனைப் பார்ப்பதற்கு மகளும் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுப் போவா. கையிலே கைக் குழந்தை, அதிகாலை எழுந்திருந்து குழந்தைக்குரிய பாலும் கரைத்து எடுத்துக் கொண்டு சுழிபுரத்திலிருந்து– யாழ்ப்பாணம் போய்– யாழ்ப் பாணத்திலிருந்து வவுனியா சென்று– அங்கிருந்து அனுராதபுர ‘பஸ்’ஸைப் பிடித்து அவ்விடத்திலிருந்து கண்டிக்குச் சென்று அங்கிருந்து ‘தங்கொல்ல’ பஸ்ஸைப் பிடித்துப்போக இரவு நேரமாகிவிடும். அந்தக் காலகட்டத்தில் அவளது வயிற்றில் இரண்டாவது குழந்தையும் 3 மாதமாகிறது. மூத்த குழந்தைக்கே ஒரு வயது பூர்த்தியாகவில்லை. அதிகாலையிலிருந்து இரவுவரை பிரயாணம் செய்த பசிக்களைப்புடன் தான் ‘தங்கொல்ல’

வீட்டுப் படியேறி உள்ளே போய்விட்டால்... உடனே அந்த அக்கா கொடுக்கும் தேனீர். அதையடுத்து வரும் பாணும், பருப்புக் கறியும் சாப்பிட உயிர்வரும். நாக்கும், தொண்டையும் வரண்டு, கண்கள் குழிவிழுந்து– தலைமுடி காற்றில் பறந்து உடம்பெல்லாம் நொந்து வருவது ஒருபுறமிருக்க யாழ்ப்பாணத்திலிருந்து– வவுனியா வரை– அடிக்கடி 'பஸ்'ஸை நிறுத்திப் பரிசோதிக்கும் இந்திய சமாதானப் படையினரின் 'தேடுதல் கோட்டை' என்ற அடையாள அட்டைப் பரிசோதனைக் கெடுபிடியால் பிரயாணம் 'சீ!' என்று அலுத்துவிடும். இதனை எழுத்தில் எழுத முடியாது. அந்தத் துன்பத்திற்கு முகங்கொடுத்து அனுபவித்துப் பார்ப்பதற்கே... வாழ்வே வெறுத்துவிடும். ஒருதடவை குழந்தையை வீட்டிலே விட்டுவிட்டு 3 நாட்களுக்குள் திரும்பி வந்து விடுவோமெனக் கூறி அவள் தன் கணவனுடன் புறப்பட்டுப் போனாள். கண்டியில் இறங்கியவுடன்தான் தெரியும். அங்கு ஜே.வி.பி காரர்களைப் பிடிப்பதற்காக ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தியிருப்பதாக, என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்ற அவர்கள் கண்டி "கலாசார மணபத்தில்" அன்றிரவு தங்கினார்கள். அக்கா வீட்டிற்குப் போய்க் குடிக்கும் சுடுதேத்தண்ணியும்– வாசனைப் பருப்புக்கறியும் பாணும் இல்லாமல் அன்றிரவு முழுவதும்– தகப்பனை நினைத்தும்– யாழ்ப் பாணத்தில் தாயுடன் விட்டிட்டு வந்த குழந்தையை நினைத்தும் அழுது கொண்டேயிருந்தாள்.

அந்த நஸ்ரின் அக்கா– தனது தகப்பனைப் பராமரிப்பது போலவே இவளுடைய தகப்பனையும் பராமரித்தா. நீரிழிவு நோயாளியான அவருக்கு அகத்தி இலையைச் சிறுசிறு துகள்களாக வெட்டி சம்பல் செய்து எலுமிச்சம் புளியும் விட்டுக் கொடுப்பா. 'கடற்பாசி' என்ற 'ஜெலி' செய்து கொடுப்பா. வீட்டு வேலைப் பழுவுடன் எத்தனையோ காரியங்களைச் செய்து முடிப்பா. செப்டம்பர் மாதத்தில் வருகின்ற தன் பேத்திக்கு அந்த அக்காவின் கையால் ஒரு அழகான சட்டையை கீர்த்தியின் அப்பா தைப்பிப்பார். பேத்தியை 'தங்கொல்ல' வரவழைத்து அந்த அழகிய சட்டையை அணிந்து குழந்தையுடன் தானும் பேராதனைப் பூங்காவில் நடந்துவருகிற காட்சியை பெறாமகள் புஷ்பம், பெறாமகன் அகிலன், மகள், மருமகன் இவர்களுடன் ஞானசோதியும் கலந்துகொள்ள வேண்டுமென விரும்பினார். புகைப்படங்களும் பிடித்துக் கொண்டார். அக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. தில்லைநாதனின் துணைவியார் தனது கையில் உப்புக் குறைவாகப் போட்ட உழுத்தம் வடையும் சுட்டுக்கொண்டு பேராதனையிலிருந்து 'தங்கொல்ல'வுக்கு வருவார்கள்.

வடக்கிலுள்ள தோழர்களும் மாதம் ஒரு முறையாவது வந்து தோழருடன் கலந்துபேசி– கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்ஸிஸ– லெனின்

முன்னேற்றத்துக்குத் தடைபோடும் ஆயுதக் குழுக்களின் நெருக்கடிகள் பற்றி மிகவும் துயருறுவர். சரியான பாதையில் நடக்கும் நம்மைப்பற்றி அவன்கள் தப்புக் கணக்குப் போடுகிறான்களோ' என்று அவர்களின் அறியாமையை எண்ணி வேதனைப்படுவர்.

பேராதனைப் பல்கலைக்கழகமும் J.V.P.யினரின் நெருக்கடிகளினால் மூடப்பட்டிருந்தது. வகுப்புகளும் நடைபெறவில்லை. பிரயாணம் செய்து யாழ்ப்பாணம் போய் வருவதே நினைக்கமுடியாத சரியான கஷ்ட மாகவும், பணம் அதிகம் தேவைப்படுகிற ஒரு இக்கட்டான நிலைமை யாகவும் இருந்தது.

தோழர்– மணியத்திற்கு இனிப்புநூர் வருத்தத்தைவிட தான் சேவை செய்த வடமாநிலம், பழகிய தோழர்கள், செயலாற்றிய சேவையின் இடைநிறுத்தம் இவையாவும் மன அழுத்தத்தையும், உடல் தளர்ச்சி யையும் கொடுத்தது. 'மே' மாதத்திலிருந்து நவெம்பர் வரையிலான 7 மாதங்கள்– அவரைப் பொறுத்தவரை அது ஒரு தடுப்புக்காவல் சித்திர வதை போன்ற ஒரு மனவேதனையில் மகன் கீர்த்தியிடம் பலமுறை கேட்டார். "யாழ்ப்பாணம் போய்விடுவோம்" என்று. அவரது உடல் நிலை யும்– அதற்குரிய மருத்துவமும் கண்டியில் தான் வாய்ப்பாக இருந்தன.

மாரிகாலம் தொடங்கி விட்டது. நஸ்ரின் அக்கா தனது கைப்பக்கு வத்தால் அவருக்கு ஊட்டமான நல்ல உணவுகளைத்தான் தயாரித்துக் கொடுப்பா.

இதே நிலையில் ஒருநாள் அவருக்குக் குமட்டல் அதிகமாகி– கட்டுப்படுத்த முடியாத உவாந்திப் பெருக்கமும் தலைதூக்கியது. ஞான சோதி தான் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்று– கண்டி– பேராதனை வைத்தியசாலையில் சேர்த்தார்.

அதிகம் இரத்தம் உவாந்தியாக வெளியேறியதால் இரத்தம் ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவனது 'குறூப்' இரத்தம், ஒரு பௌத்த பிக்குவின் இரத்தத்துடன் ஒத்துப் போனது. ஏற்றப்பட்ட பின் அயர்ந்து தூங்கிவிட்டார்.

மனமெல்லாம் தனக்கு உணவளித்து சிரித்த முகத்துடன் அறைக்கு எடுத்துவரும் அந்த முஸ்லீம் சகோதரி தான் அவரது கண்முன் தெரிந்தார். உயிர் பிரியும் நேரத்தில் பௌத்தமத இரத்தமும், இஸ்லாம் மத உணவும் அவருக்கு ஊட்டமாயின; ஆகவே, அந்தச் சகோதரி அன்புடன் உணவளித்**தாய்** ஆனாள்.

# வீரமாய் எழுந்தாய்

**அ**து ஒரு இயற்கை வனப்புடன் கூடிய கிராமம். பிரதான வீதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் அந்த ஊர் அமைந்திருக்கிறது. 'பச்சைப் பசேல்' என்ற வயல் வெளிகளுடனும், பனை மரங்களும், தென்னை மரங்களும் மென்மேலும் அழகூட்டுவனவாக அமைந்திருக்கின்றது. வயல் வெளியிலிருந்து வரும் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதனால் அவ்வூர் மக்கள் சுகதேகிகளாகவும், ஆரோக் கியமானவர்களாகவும் இருக்கின்றனர். ஆண்களுக்குத் தோட்ட வேலை, தச்சுவேலை, மேசன் வேலை, மரம் அரிகிற வேலை, பதநீர் சேகரிக்கிற வேலை என பற்பல வேலைகள் இருந்தன. பெண்களுக்கு வயலில் செய்கிற கமவேலை, ஆடு, மாடுகளுக்கு புல் செருக்கிச் சேகரிக்கிற வேலை இவற்றுடன் மூன்று வேளைகளிலும் சுடு சாப்பாடு தயாரித்து கணவன், பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் முதலானவர்களுக்கும் பரி மாறுதலும், வீட்டிற்கு வரமுடியாதவர்களுக்கு வயல்வெளிக்கு உணவு எடுத்துப் போகிற கைங்கரியமும் தினமும் இருந்துகொண்டேயிருக்கும்.

சிறுவர்கள் பாடசாலைப் படிப்புடன், பெற்றாருக்கு உதவி, ஒத்தாசையாக வயலில் நீர்ப்பாய்ச்சுதல், தண்ணீர் மாறுதல் போன்ற வேலைகளைச் சிறுவயதிலேயே பழகிக் கொள்வார்கள், உயர்தர வகுப்புகளிற் படிக்கிற பிள்ளைகள் நண்பர்களுடன் பந்தடிப்பதிலும், நூலகம் சென்று புத்தகம், பத்திரிகைகள் வாசித்து தமது மதிநுட்பத்தைப் பெருக்குவதிலும் கண்ணுங்கருத்துமாக இருப்பார்கள்.

அவ்வூரில் ஆலயம், நூலகம், வைத்தியசாலை, ஆரம்பப் பாடசாலை ஆகியவை இருந்தன. உயர்தர கல்விக்கு அயலூருக்கோ, அன்றி 'பஸ்' வண்டி பிடித்துப் பட்டினத்துக்கோ சென்றால்தான் கற்றுக் கொள்ள முடியும்.

விடிவெள்ளி உதிப்பதற்கு முதலே எழுந்திருந்து காலைக்கடன் முடித்துவிட்டு– மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று செம்புநிறையப் பால்

கறந்துகொண்டுவந்து அடுப்பில் பாலைக் காய்ச்சி, உடனே 'கேற்றில்' வைத்து சுடுநீரில் தேனீரோ, காப்பியோ தயாரித்து விடுகிற பெண்கள் அந்தக் கையோடேயே பிட்டு, இடியப்பம், தோசை போன்ற சிற்றுண்டிகளையும் செய்ய ஆயத்தமாகி விடுவர்.

குடும்பத்தலைவன் வயல்வெளிக்குப் போய்விட்டால் முதலில் அவருக்குரிய தேனீர் போய்ச் சேரும். தேனீர் கொண்டுபோன பிள்ளை வரும் போது கீரை, கிழங்கு, கத்தரிக்காய், வெண்டிக்காய், காய்மிளகாய், பயிற்றங்காய், பாகற்காய் என்ற மரக்கறிகளுடன் வீடு வருவர். வந்தவர் குளித்து, பள்ளிச்சீருடை அணிந்து உணவருந்தி பாடசாலை சென்று விடுவர். வீட்டிலுள்ள முதிய ஆணோ, பெண்ணோ தோட்டத்திலிருந்து கிடைத்த மரக்கறிகளை வீட்டிற்கு அண்மையிலுள்ள சந்தையில் கொண்டுபோய் விற்றுவிட்டு– அன்றாடச் சமையலுக்குரிய அரிசி, தேங்காய், மீன், வெங்காயம், புளி என்ற அத்தியாவசிய பொருட்களை வாங்கிவருவர். இல்லத்தலைவி கணவனின் காலை உணவுடன், தனக்கும் எடுத்துக்கொண்டு வயல்வெளிக்குச் செல்வர். போன களைப்போடு களைப்பாக ஆடு, மாடுகளின் தேவையுணர்ந்து புல் சேகரித்து ஒரு கடகம் நிறைய வைத்துவிட்டுத்தான் உணவு உண் ணுவார். பசியாறிய கணவன் வயற்கிணற்றடி வாழைமர வரம்பிலே துணியை விரித்து சிறிது கண்ணயர்வார். அதிகாலை நாலுமணிக்குக் கண் விழித்த அலுப்பு– அவரைச் சிறிது தூக்கத்தில் ஆழ்த்துகிறது.

வயல்நிலத்துக்குச் சொந்தக்காரர்களான இவர்களின் காலைப் பொழுது இப்படிக் கழிய ஒருசிலர் வீடு கட்டும் தொழிலிடம் தேடிப் புறப்படுவர். ஒருசிலர் பனைமரத்தில் ஏறி 'கள்' சேகரிக்கும் தொழி லையும் வழக்கத்தில் கொண்டிருந்தனர். அவர்களும் வெய்யில் உடம்பில் படுவதற்கு முன்னரே தத்தமது கடமைகளை முடிக்க– தகுந்த ஆயத்தங்களுடன் புறப்பட்டுச் சென்று– வீடு திரும்புவர்.

இக்கிராமத்தில் சாப்பாட்டிற்கு வழியற்ற– வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிற ஒரு மனிதமும் கிடையாது. கடின உழைப்பாளிகள்; ஓய்வெடுக்க விரும்பாத சுறுசுறுப்பானவர்கள். சொந்தமாக ஒரு நல்ல இல்லத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு தரம் வாய்ந்த கல்வியைத் தேடித்தர வேண்டும். சுத்தம், சுகாதாரமான உணவு, உடை, உறையுள் இவற்றில் அவர்கள் மிகுந்த அக்கறை உள்ளவர்களாக விளங்கினர். இவர்கள் எல்லோரும் ஒருவருக் கொருவர் உறவினர்களாக இருந்ததால் நன்மை, தின்மை என்று வரும்போது சகலரும் ஒருமுகமாக ஒத்துழைத்துத் தங்கள் தேவை களை இனிதே நிறைவேற்றி விடுவர்.

இப்படியாக வாழ்கிற மக்களின் கையில் பணமும் தாராளமாகப் புழங்கியது. அயற்கிராமத்துத் தனவந்தர்கள் தங்களால் வயலில் இறங்கி வேலை செய்ய முடியாதெனச் சோம்பல்பட்டு– இவர்களை வைத்தே

தமது வயல் வேலைகளை செய்வித்தனர். காலப்போக்கில் அவர்களது நிலமெல்லாம். இவர்களே பெறுமதியான பணம் கொடுத்து– தமது சொத்துடமையாக்குகிற செல்வந்தர்களாகவும் மாறினர். அப்படி மாறுங்காலத்தில் சகல மக்களும் சரிநிகர் சமானமாக வீற்றிருந்து பொதுத் தேனீர்க்கடை ஒன்றிலே தேனீர் அருந்துகிற வாய்ப்பையோ– மற்றவர்களைப் போல்– சுதந்திரமாக ஆலயத்தின் உட்பிரகாரம் சென்று வழிபடும் உரிமையோ மறுக்கப்படுகின்ற ஒரு சமுதாய அமைப்பாக இவர்கள் கணிக்கப்பட்டனர்.

“எங்கடை தோட்டத்து மரக்கறி, எங்கடை வயலில் நெல்லு, எங்கடை பசுவின்ரை பால், நாங்கள் பனையிலிருந்து சீவி– இறக்கின கள்... இவையாவும் ‘உயர் சாதி’ என்று சொல்லப்படுகின்ற அவர்களுக்குத் தேவை என்றால் எங்களுக்கு ஏன் இந்த உரிமைகள் மறுக்கப்படுகின்றன?”

இந்தக் கேள்விகள் கல்வியறிவு நிரம்பிய இளம் வாலிபர்களின் இதயத்தில் உதிக்காமல் இல்லை. தனித்தனி மனிதர்காகப் போராட முடியாதென்றும் ஏதோ– ஒரு பெரிய அணியுடன் இணைந்து தான் தங்களின் வலிமையைக் காட்ட வேண்டுமென அவர்கள் தீர்மானித்தார்கள்.

அதன்படி ‘கம்யூனிஸ்ட்’ கட்சியின் வாலிபர் இயக்கத்தில் தம்மையும் இணைத்துக்கொண்டார்கள். 1966ம் ஆண்டின் அக்டோபர் புரட்சியின் செயற்பாட்டினைத் தமது அரிச்சுவடிப் போராட்டமாக முன்வைத்தனர். அதனையொட்டி மாவிட்டபுரக் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசத் தயாரிப்பு, சங்கானைத் தேனீர்க்கடைப் பிரவேச ஆயத்தம், இப்படியாக தொடங்கிய உரிமைப் போராட்டமானது பற்பல கிராமங்களுக்கும் பரவி அவ்வூரில் வாழுகின்ற– அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் மனத்திலும் ஒரு விழிப்புணர்ச்சியையும், மறுக்கப்படுகின்ற உரிமைகளை வாதாடிப் பெறு கின்ற தன்மான உணர்வினையும், போராட்டங்களுக்கு முகங்கொடுக் கின்ற உந்து சக்தியையும் வளர்த்துக் கொண்டனர். நேரடியாகவே களத்தில் இறங்கியதன் மூலம் பல உயிர் இழப்புக்களையும், அங்கங் களைப் பறிகொடுக்கிற வன்முறைச் செயற்பாடுகளையும் சந்திப்பவர் களாக நாட்கள், மாதங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

“துப்பாக்கிக் குழலிலிருந்து தான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது” என்ற சீனத்தலைவர் மாஓசேதுங் அவர்களின் கோட்பாட்டினை நன்கு அறிந்தவர்கள் இந்தப் போராட்ட இளைஞர்கள். “தூசும் துடைக்காமல் போகாது” என்ற வாக்கியத்தின் உண்மையையும் தங்களின் அனுபவ வாயிலாகக் கண்டறிந்து– அதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை எந்த வழியில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனையும் சொல்லாலும், செயலாலும் கண்டறிந்தார்கள்.

'நிற்சாமம்' என்று அழைக்கப்படுகின்ற இந்தக் கிராமத்து மக்களின் அஞ்சாமையையும், நெஞ்சுரத்தையும் கேள்விப்பட்ட கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி. பண்டாரநாயக்க என்ற மக்கள் பிரதி நிதி யாழ்ப்பாணம் வந்திருந்தார். அங்கிருந்து சங்கானைக்கும் போவதற் கான ஒழுங்குகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அதற்கு முதல்நாள் இரவே இந்தக் கிராமத்து வீடுகளிற் சில அதாவது ஏழைகளாக– மண் குடிசை வீடுகளில் வாழும் பாமர மக்களாக விளங்கியவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. உடமைகள் யாவும் (உடுப்புகள், தானியங்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகளின் புத்தகங்கள், உட்பட அந்த வறிய மக்களின் சொத்துக்கள் யாவும்) எரியூட்டப்பட்டன. நிச்சாமக் கிராமத்தின் பாதுகாப் பான அரணுக்குள் நுழைய முடியாத– சாதித்திமிர் பிடித்த பச்சோந்திகள் ஓரிருவர் தங்களின் அயலில் உள்ள அந்த விசுவாசமாக– தங்களுக்கே வந்திருந்து உதவி– ஒத்தாசை புரிகின்ற ஏழைகளின் குடிசைகளுக்குத் தீ வைத்து மகிழ்ந்தார்கள். "ஆண்டான் அடிமை முறையில் வாழ்ந்து கைகட்டி, வாய்பொத்தி வாழுகிற தன்மானத்தை இழந்தவர்களல்ல" என்பதனை கவிஞர் சுபத்திரன் அவர்கள் தனது ஒரு பாடலின் வழியாக வெளிப்படுத்தினர்.

சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன்நாமம்
மங்காது மண்ணிற் பலகாலம்
எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்
குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் மெச்சுகிறேன்
சங்கானை மண்ணே
.... .... .... ....
.... .... .... ....

## பாதை திறக்க வழிவகுத்தாய்

**அ**து ஒரு கிராமம். பனைமரங்கள் நிறைந்த செழுமையான பூமி. நூறு குடும்பங்களுக்கு மேலாக அங்கே வாழ்ந்து வருகிறார்கள். "ஏழைகளாகப் பிறந்தாலும், நாங்கள் கோழைகளல்ல" என்ற நெஞ்சுரத் துடன் வாழ்பவர்கள். விவசாயமும், கைத்தொழில் வேலைகளும் அவர் களுடைய சீவியத்தை மதிப்போடு நடாத்துவதற்குக் கைகொடுத்தது. எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் அவர்களுக்குள் ஒற்றுமையும், புரிந்துணர்வும் பரவிக்கிடந்தது.

கல்வியறிவு அவசியம் என்பதனை உணர்ந்து ஆரம்ப பாடசாலைக் கல்வியுடன் நின்றுவிடாது உயர்தரக் கல்வியையும் மேற்கொண்டோர் விழிப்புணர்வு உள்ளவர்களாக விளங்கினர். அவர்களுக்கென ஒரு சன சமூக நிலையம் அமைத்திருந்தார்கள். நிர்வாகசபை உறுப்பினர்கள் தின சரிப் பத்திரிகை தொடக்கம் வாராந்தச் சஞ்சிகைகள் வரை வாங்கிப் போட்டு, சகலரையும் வாசிப்புப் பழக்கத்திற்கு உட்படுத்துகிற ஒரு திறமையையும் வளர்த்துக் கொண்டவர்கள்.

அந்தக் கிராமத்தில் இயற்கையான பிரசவம் பார்க்கிற "மருத்துவிச்சி" சேவை தொடக்கம்– சுளுக்கு வீக்கம் போன்ற தற்காலிக நோய்களுக்கும் வைத்தியம் செய்கிற– முதலுதவி செய்கிற அனுபவசாலிகளும், கை தேர்ந்த கைராசிக்காரர்களும் வாழ்ந்து வந்தார்கள். முற்காலத்தில் ஒன்பது, பத்து என்று குழந்தைகளைப் பெற்று வளர்த்தவர்கள். மானிட சமுதாயம் முன்னேற்றமடைய– விழிப்படைய இரண்டு குழந்தைகள் போதும். அவர்களுக்குப் போதிய கல்வியறிவையும், உணவு வசதியையும், உடுப்புக் கவனிப்பையும் சேர்த்துப் பராமரிக்கவே அவர்களது வருவாய் போதுமானதாக இருந்தது.

திடீரென மரங்களின் மேலிருந்து கீழே விழுந்து எலும்புகள் முறிந்துவிட்டால் உடனடியான வைத்திய உதவிக்கு அரசினர்– வைத்திய சாலையைத் தான் அணுகவேண்டியிருந்தது. நள்ளிரவில் பிரசவ வலி ஏற்பட்டுவிட்டால் அந்தத் தாயை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க

வேண்டிய அவசியத் தேவையும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஒரு முறை ஒருவருக்கு நஞ்சுப்பாம்பு தீண்டிவிட்டது. அவர்கள் வழமையாகச் செய்கிற முதலுதவி பிழைத்துப்போய் அவர் இறந்துவிட்டார். அதுபோல் ஏழாவது குழந்தையை வயிற்றில் சுமந்த தாய்க்கு ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டு "குழந்தை குறுக்கே கிடந்ததாலே தான் மூச்சுத்திணறி அவ செத்துப்போய்விட்டா" என்ற அழுகுரலுடன் அந்தக் குடும்பத் தலைவன் ஆறு குழந்தைகளையும் கட்டிப்பிடித்து கதறிய காட்சி, கல் மனதையும் கரைப்பதாக இருந்தது.

இத்தனைக்கும் நூறு வருடங்களுக்கு மேலாக அந்தக் கிராமத்தில் வாழுகிற மக்களுக்கு பிரதான வீதியைச் சென்றடைய ஒரு வாகனம் போகக்கூடிய பாதை என்ற ஒரு வழி போடப்படவில்லை. பரந்த வெளியான அந்த நிலத்தில் ஒற்றையடிப் பாதைகள் இருந்தனவே தவிர மோட்டார் வாகனமோ, இரட்டைமாட்டு வண்டி போய்வரக்கூடிய பெரிய பாதை ஒன்றும் ஏற்கனவே இருந்ததில்லை. அந்த நிலத்தின் உடமைக் காரர்கள் வருடாவருடம் பனை ஓலை வெட்டி எடுத்துப்போக இங்கு வாழும் மக்களின் தலைச் சுமையைத் தான் பயன்படுத்தி வந்தனர்.

கணிசமான அளவு கல்வியறிவைப் பெற்ற இளைஞர்கள் சகலரும் ஒன்று சேர்ந்து இடது கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களாக இயங்கினார்கள். அவர்கள் தங்களுக்குள்ள குறையை அதாவது ஒரு பெரிய பாதை போடப்படவேண்டும். அதுவும் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்கி நிற்காத மேட்டு நிலமாக அந்தப் பாதை அமைய வேண்டும். அதற்குரிய கற்களும்– பெரிய அளவிலும், சிறிய அளவிலும் சேகரித்து ஒவ்வொருவர் வசிக்கிற வீட்டிற்கு பக்கத்தில் சேமித்து வைக்க வேண்டும். மண்வெட்டி, கடற்பாறை, பிக்கான், கோடரி, கடகங்கள், மொங்கான், மண்குவியல்கள் தண்ணீர் ஊற்றிச் செப்பனிட வாளிகள் இப்படியான அத்தியாவசியமான பொருட்கள் பெரு மளவில் சேகரித்து வைத்திருந்தனர்.

பிரதான வீதிக்கு (தார் றோட்டுக்கு) போய்ச் சேரக் கூடியதாக அந்தக் குடிமனை வளவிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு– அந்தப் பாரிய பாதை அமைந்துவிட்டது. ஒரே ஒரு இரவில் அத்தனை மக்களின் ஒற்றுமையின் பலத்தினால்– உழைப்பின் மகிமையால் அந்தப் பாதையை அவர்கள் அமைத்துவிட்டார்கள். நிலவுடமைக்காரர்களுக்கே விடிந்த பின்தான் விசயம் தெரியும். அவர்களின் கண்ணில்படாமல் வயோதிபர்கள் தொடக்கம்– குழந்தைகள் வரை சகலரும் தத்தமது பங்களிப்பை நல்கினர்.

சூரியன் மறைந்ததுதான் தாமதம். முதலில் பாதையின் நிலை ஒரே நீளத்திற்கு மண்வெட்டியில் றோட்டுக்கரைவரை கொத்தப்பட்டது. முதலில் பெரிய கற்கள் போடப்பட்டன. அதன் மேல் கொஞ்சம் மண். அதன்பிறகு

சரளைக்கற்கள். அதன்மேல் மண். பின்னர் தண்ணீர் ஊற்றப் பட்டது. பாதையின் இருமருங்கிலும் ஏற்கெனவே பத்தடி அகலம் நீக்கி கிடங்குகள் அடிக்கப்பட்டு இருந்தன. சில வேளைகளில் நிலவுடைமைக் காரர்கள் வந்து 'இது என்ன குழிகள் வெட்டப்பட்டுக் கிடக்குது?' என்று கேட்டாலும், "குப்பைகள் தாழ்ப்பதற்கு" என்று கூறிவிடலாம் என்ற அசாத்தியத் துணிச்சல்தான். அந்தக் குழிகளுக்குள் வைப்பதற்காக இளம் வடலிகள் ஏற்கனவே மண்ணிலிருந்து புறப்பட்டு தயார் நிலையில் இருந்தன. "விடிவெள்ளி காலிப்பதற்கு முன்னம் எல்லா வேலையும் முடிஞ்சிட வேணும்" என்று அக்கிராமத்தின் மதிநுட்ப ஆலோசகராக விளங்கிய 'அப்பு' கூறிவிட்டார்.

அந்தப் பாதையானது நேரியதாக இருக்கவில்லை. சிறுசிறு வளைவுகளும், நெளிவுகளுமாகவே அமைந்தது. ஏற்கெனவே 5 குடும்பத்திற்கு ஒரு கிணறு வீதம் வெட்டி தங்கள் பாவிப்புக்கு வைத்திருந்தார்கள். நிலவுடைமைக்காரருக்கும், கிணறுகள் வெட்டியதில் சந்தோஷம்தான். "ஒரு காலத்தில் நாங்களும் தோட்டம் செய்ய கிணறு வேணுந்தானே. ஒரு கிணறு வெட்டுகில் எவ்வளவு கூலி கொடுக்க வேணும்! அதைப் பார்க்கமுடியுமோ? அவன்களே வெட்டி வைத் திருந்தால் எங்களுக்கு வேலை லேசு தானே" என்று கண்டும் காணாதது போல இருந்து விட்டார்கள்.

சூரியன் உதயமாகியது. பத்து அடி அகலமான பாதை அழகாகப் போடப்பட்டிருந்தது. பள்ளமான நிலங்களுக்கு தண்ணீர் தேங்கி நிற்காமல் முதலிலேயே பெரிய கற்கள் போடப்பட்டு– மேட்டு நிலமாக்கப் பட்டிருந்தது. பெரிய கற்கள்– அதன்மேல் மணல், பிறகு சரளைக் கற்கள், அதன் மேல் தண்ணீர், மேலே மண்ணும் போட்டு மொங்கான் பிடித்து இடித்து பாதை மிகமிக வைரமாக அமைக்கப்பட்டிருந்தது.

விடிந்து பார்த்தால் பாதையின் இருமருங்கும் ஐந்து அடிக்கு ஒன்றாக இருமருங்கும் மூன்றடி உயரத்தில் வடலிகளும் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாக இருந்தது.

ஏற்கெனவே அவர்கள் ஒரு புரட்சிகர சிந்தனையுள்ள ஓரணிக்குள் திரண்ட மக்களாக இருந்தனர். ஒருசிலர் மட்டும் "பழைய மழவராயன் குடும்பத்து மண்ணிலை எங்களை இருக்கவிட்டவை. அவன்கடை நிலம் எங்களுக்கு வேண்டாம்" என்று சொன்னாலும்– இந்தப் பாதை விடயத்தில் சகல ஒத்தாசையும் செய்தார்கள்.

உடம்பு இயலாதவர்கள் கூட நூற்றுக்கணக்கான கடகங்களை இழைத்து, நார்போட்டுப் பொத்தி– விளிம்புக்கு மட்டை கட்டி– அத்தனை வைரமாக வைத்திருந்தார்கள். மண்வெட்டிகளும், நிலம்தட்டியும், மொங்கானும் இளைஞர்கள் கைகளில், கடங்கங்களில் மண்சுமந்தது யாவும் பெண்கள். அதற்குரிய சரளைக் கற்களை பெரிய கல்லின் மேல்

தகரவளையம் வைத்துச் சுத்தியலால் அடித்துக் குவித்து வைத்த தெல்லாம் யுவதிகள். சிறுவர்கள் தங்கள் தங்கள் கை வாளிகளில் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி மகிழ்ந்தனர். அன்றிரவு முழுவதும் அந்தக் கிராமத்திற்குச் 'சிவராத்திரி'யாக கண்விழிப்புடன் விடிந்தது. ஒரு வாரம் கழித்து அவர்களது சனசமூக நிலைய முன்றலில் அந்தப் புதிய பாதை திறப்புவிழா மிக உன்னத நிலையில் ஆரவாரத்துடன் அரங்கேறியது.

கூட்டுமுயற்சியாகச் செய்யப்பட்ட இந்த கைங்கரியத்திற்கு ஆலோசனை வழங்கிய தலைமைத் தோழரை அவர்கள் மலர்மாலை அணிவித்து– மங்கள விளக்கேற்றுமாறு பணித்தமை சகலரது கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது. ஒரு வயோதிகத் தாயார் "பாதை திறக்க வழி வகுத்**தாய்**" என வாழ்த்தினார்.

❍

# உயிரைக் காத்தாய்

**அ**ன்று பிற்பகல் நான்கு மணி இருக்கும். குடியிருக்கும் வீட்டு வாயிற் 'கேற்'றின் முன்பாக 'ஜீப்' வண்டி ஒன்று வந்து நிற்கிறது. 1971ம் ஆண்டு தென்னிலங்கையில் கிளர்ச்சிக்கார வாலிபர்களினால் அரசு திணறிக் கொண்டிருந்த காலம்.

ஒரு 'கொம்யூனிஸ்ட்' வாலிபரை– அதுவும்; இந்தநாட்டின் சிங்கள, முஸ்லீம் மக்களைத் தோழர்களாக கொண்டிருந்த மணியத்தை யாரோ ஒரு சில விஷமிகள் இவனும் ஒரு கிளர்ச்சிக்காரன் தான் என போலீசுக்குப் பொய்த் தகவல் கொடுத்திருந்தனர் போலும்.

திடீரென உட்புகுந்த காவற்துறையினர் வீட்டிலுள்ள புத்தகங்கள், பத்திரிகைகள், புகைப்பட ஆல்பங்கள் யாவற்றையும் கடதாசிப் பெட்டி களுக்குள் போட்டபின் 'இந்த வீட்டின் தலைவன் எங்கே?' என்று அதிகாரக் குரலில் கேட்டனர். மூத்தமகன் இராசன் சுழிபுரத்திலுள்ள தாத்தா வீட்டில் தங்கியிருந்தான். வயது 9 தான். மற்ற இருவர்களுடன் முன்வீட்டு பவானிக்குழந்தையும் என் இடுப்பில் இருந்தது. இவனுக்கு 2 பெண்குழந்தை, 1 ஆண்குழந்தை என்று எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினர். வீட்டிற்கு உள்ளே வந்தவர்கள் மூவர் மாத்திரமே.

அந்தக் காலையடி வீட்டைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் அநேக வீடுகள் இருந்தன. ஒரு வீட்டிலிருந்து அடுத்த வீட்டிற்கு 'கடப்பு' என்று சொல்லப்படும் கடவையை எட்டிக் கடந்து கொண்டு பெரியம்மா வீட்டிற்குச் செல்லலாம். ஒரு 'ஜீப்' நிறைய வந்த போலீசார். அந்த வாகனத்திற்கு 'அறிமுக போட்" மாட்டப்படாமல்தான் வந்தனர். வரும் வழியில் இன்னும் 6 போலீசார் சுற்றிவர இருக்கும் வீடுகளுக்கும், ஒழுங்கைகளுக்கும் கைஒழுங்கைகளுக்கும் இறக்கிவிட்டுத்தான் வந்திருக் கிறார்கள். அவர்கள் நமது வீட்டைவிட்டுப் போகவே 1 மணித்தியாலம் ஆகிவிட்டது.

அவர்கள் சென்று ஒரு மணித்தியாலயத்தின் பின்னர், பெரியம்மா எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். "எங்கள் வீட்டுக்குள் வந்த மணியம், கைப்பாஷையால் ஏதோ சைகை காட்டிவிட்டு சங்கக்கடைக்குப் போகும் கைஒழுங்கைக்குள் ஓடிப்போனார். எங்கடை வீட்டுப் படலைக் கொட்டகைக்கு உள்ளே இரண்டு போலீஸ்காரர் நின்று கதைப்பது

தெரிந்தது. நான் அதைக் கண்டுவிட்டு கையிலிருந்த கத்தியை எடுத்துக் கொண்டு பின்பக்கமாய்ப் போய் டாக்குத்தற்றை சோமாஸ் பின்வளவுக்குள்ளே ஆள் அளவு உயரத்துக்கு சணல் வளர்ந்து கிடக்குது. அதுக்குள்ளே மறைந்து படுக்கச்சொல்லி வேலிக் கம்பியைக் கத்தியால் வெட்டி வழிவிட்டிட்டுத் திரும்பி வந்திட்டன். வந்தவை வீடுவாசல் எல்லா இடமும் பார்த்துவிட்டுப் போய்விட்டினம். பிறகுதான் தம்பி சணல் பத்தைக்குள்ளையிருந்து வெளியாலை வந்தவர்" என்று கூறினா.

கொஞ்சம் பொறுத்துக் கூறினா "எங்கடை சங்கக்கடையடியிலை நிண்ட பொலிசுக்காரர் சொன்னவராம் மணியம் எண்டொரு கிளர்ச்சிக் காரன் இந்த ஊரில் இருக்கிறானாம். அவனை உயிரோடு பிடிக்கவேணும். பிடிக்கமுடியாவிட்டால் ஓடவிட்டுச் சுடவேணும்" எண்டு கதைத்தவன் களாம். இந்த ஊர்ச் சனங்களைப் பயப்படுத்தத்தான் அப்படிக் கதைச் சிருக்கிறாங்கள். அப்படி ஒரு பிழையும் நடக்கவில்லையே! உடம்பு முழுவதும் அடிச்சு நொறுக்கி ஆஸ்பத்திரியும் குழை வெந்நீரும், நோவெண்ணய்யுமாக நீங்கள் கலியாணம் செய்த ஒரு குற்றத்துக்காக இந்த 7 வருஷத்திலையும் எவ்வளவு கஷ்டத்தையும், துன்பத்தையும், துயரத்தையும் சுமக்கிறியள்! சீ! இது என்ன சீர்கெட்ட வாழ்க்கை! கோவிலுக்கு நேர்த்திக்கடன் வைச்ச ஆடுமாதிரி ஒருநாளைக்குப் பலி கொடுக்கவோ இந்தப் பிள்ளை இப்பிடித் திரியுது. உங்கடை பெற்றாரின் உதவியும் கிடையாது. அவரின்ரை பெத்தவை பிறந்தவையும் கைவிட்டு விட்டினம். நீங்க இந்த மூன்று குழந்தைகளோடை வாடகை வீடுகளில் மாறிமாறி இப்பிடி ஒரு அலைச்சலான சீவியமோ? உங்கடை பரிதாபத்தைப் பார்த்துத்தான் நான் கம்பிவேலியை விட்டு சணலுக் குள்ளே ஒளிச்சுப் படுக்கச் சொன்னனான். நான் காணேல்லை யெண்டால் ஓடேக்கை பாத்துச் சுட்டிருப்பான்கள்" என்று என் இளைய குழந்தையைத் தனது மடியில் தூக்கிவைத்துக் கொண்டு அழுதழுது கூறினா.

மறுநாட் காலையிலும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்த பெரியம்மா சொன்னா, "இந்த வீட்டு உரிமைக்காறி சிவம் திருகோணமலையில் இருக்கிறாள். தன்ரை வீட்டிலை வாடகைக்கு இருக்கிறவனைத் தேடி பொலிசு வருகுது எண்டு அறிஞ்சால் அவள் வீட்டை விட்டு எழுப்பிப் போடுவாளே? வீடில்லாமல் நீங்க இந்தத் தவ்வல்களோடை எங்கை யெல்லாம் அலைஞ்சு திரிவியள்? ஏன் இந்த மனிசனுக்கு ஒண்டும் விளங்காதோ? உழைச்சுக் காசு, பணந்தான் தரவில்லையெண்டாலும் வேலைக்குப் போய்வாற உங்களுக்கு ஒரு துணையாவும், குழந்தை யளுக்கு ஒரு காவலாகவும் இருக்கக் கூடாதோ? ஏன் அம்மா தாழ்த்தப்பட்டவை ஒடுக்கப்பட்டவை எண்டு இவருக்கு என்ன இரக்கம்

வருகுது? இவற்றை நடவடிக்கையாலை இந்தக் குடும்பத்துக்கு ஏதும் வரும்படி உண்டோ? உங்களைப் போலப் பாவம் செய்த ஒரு பெண்சீவனையும் நான் காணேல்லை. எங்கடை பெண்டுகள், உழைச்சு உழைச்சுக் காசு காசாகக் கொட்டுறவனைக்கூட ஐஞ்சு சதத்துக்கும் மதிக்காமல் ஏச்சும், திட்டும் சண்டையுமாக இருக்கினம். நேரத்துக்கு சமைச்சுச் சாப்பாடு கூடக் குடுக்கமாட்டாளவை. நீங்க என்னெண்டா விடியப்புறம் எழும்பிச் சமைச்சுப்போட்டு குழந்தையளையும் கையிலை பிடிச்சுக்கொண்டு வழக்கம்பரைக்கு வேலைக்குப் போய்ப் பொழுது கருக்கலிலே திரும்பிவந்து பிறகும் வீட்டு வேலை, சமையல் வேலை எண்டு.. எனக்கெண்டால் உங்களைப் பாக்கிற நேரமெல்லாம் நான் பெத்த ஒரு மகள் மாதிரித்தான் நினைக்கிறன். இந்த மனிசன் இரண்டு வருஷத்துக்கு முன்னர் சட்ட மறுப்பான ஊர்வலம் போனபடியால்தானே, இப்ப தெற்கிலே நடக்கிற சிலபல காரியங்களுக்கும் இவனும் உடந்தையாய் இருப்பானோ எண்டு போலீசு ஐமிச்சப்படுகுது. ஊரே கெட்டுக்கிடக்குது. நாலாயிரம் இளந்தாரிப் பொடியளை சுட்டுத் தள்ளி னதாக பேப்பரிலே கிடக்குதாம். உங்களுக்கு ஒண்டும் தெரியாது. கிணத்துத் தவளை போல போனால் வேலை. வந்தால் பிள்ளை வளர்ப்பு எண்டு... எல்லாப் பொறுப்பையும் தலை மேலே சுமந்துகொண்டு... எந்தப் பெண்ணாய்ப் பிறந்தவள் இப்பிடிப் பாடுபடுகிறாள்?" இப்படியாக எத்தனையோ கண்டிப்புடன் கூடிய உரிமையுடன் கூடிய தனது ஆற்றாமையை வெளிப்படுத்திவிட்டுச் சென்றுவிட்டா.

அதன்பின்னர் அவவின் மகள் வந்திருந்தாள். அவ முழுவிபரமும் கூறினா. "எங்கடை படலைக் கொட்டகைக்குள்ளை ரண்டு பொலிசுகள் நிண்டு உங்கடை வீட்டைக் காட்டிக் காட்டி ஏதோ பேசினாங்கள். அம்மா எப்பவும் சொல்லுவா மணியம் என்ரை தம்பி மாதிரி எண்டு. அவவுக்கு ஒரே பதட்டமாகக் கிடந்தபடியால் தான் கத்தியையும் எடுத்துக்கொண்டு போனவ. பபியப்பா ஓடுவதைக் கண்டதாலை தான் பின் பக்க சோமாஸ் வளவுக்குள்ள கம்பி வேலியை வெட்டி சணலுக்குள்ளே படுக்க வைச்சவ. அவ அப்பபடிச் செய்யிறதைக் கண்டால் பொலிசு அவவைக் கைது செய்திருப்பான்கள். அவ புத்தியாய் புல்லுக் கடகத்தையும் கையிலை பிடிச்சுக்கொண்டு அதுக்குள்ளைதான் கத்தியை வைச்சுக் கொண்டு போனவ" என்று அழுதழுது கூறினா. ஆகவே, தனது உயிரைப் பணயம் வைத்து எனது கணவனின் உயிரைக் காத்த பெரியம்மா எங்க குடும்பத்தலைவனின் உயிரைக் காத்த தாய் ஆகினாள்.

# உயிர் காக்கத் துணிந்தாய்

**அ**து ஒரு மாலைப்பொழுது. சூரியன் மறைந்து சிறிது நேரமாகிவிட்டது. எங்கள் வீட்டிற்குள் ஒரு மெலிந்த உருவமுள்ள வாலிபன் கையில் துப்பாக்கி சகிதம் வருகிறான். பைசிக்கிளை முற்றத்தில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் வருகின்றான். இன்னொரு வாலிபன் 'கேற்' றடியில் நிற்கின்றான். வந்தவன் மணியம் தோழர் படுத்திருக்கும் கட்டிலில் அமர்கிறான். அவன் சிறுவனாகப் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 3ம் ஆண்டு படிக்கும்போதே அவனை எனது மகளுக்குத் தெரியும்.

அவன் தான் சார்ந்த இயக்கத்தின் கட்டளையை நிறைவேற்ற வந்திருக்கின்றான். வந்த காரியத்தை ஒப்பேற்றி விட்டால்– அவனுக்குச் செயல்வீரன் என்ற பட்டமும் கொடுத்து– அடுத்தடுத்த கொலைகளை நிறைவேற்றுகிற பணிப்புரையும் கிட்டும். அவ்வளவுதான்.

ஒரு உயிரின் பெறுமானம்; அவன் தன் வாழ்நாளில் எந்த மக்களைச் சார்ந்திருந்திருந்தானென்றோ– எந்தச் சுரண்டப்படும் வர்க்கத் திற்காகக் குரல் கொடுத்தானென்றோ– நீதிக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் வட மாநிலத்தில் நடைபெறும்போது அங்கு சென்று அந்த மக்களினது துயர் துடைக்கக் குரல் கொடுத்து வாழ்ந்தானென்றோ– அடக்குமுறை அரசின் சில அட்டூழிய நடவடிக்கைகளைக் கண்டித்து– பத்திரிகையில் எழுதியவனென்றோ– நேரடியாக பங்குபற்றி உடல்முழுவதும் போலீஸ் தடியடியால் ரண காயங்களுக்கு ஆட்பட்டவனென்றோ– வந்தவனுக்குத் தெரியாது. ஏனெனில், அவன் வயதில் மிகச் சிறியவனாக இருந்தான்.

அது, 1988ம் ஆண்டு மார்கழி மாதம், நாடு பிரித்தாள எண்ணிய ஆயுதக் குழுக்களில்– மற்றைய குழுக்களைத் தமது துப்பாக்கி முனையால் தொலைத்தழித்த முதல்தர விடுதலை இயக்கமென தம்மைத் தாமே நினைந்து இறுமாப்புக் கொண்ட இயக்கம். வந்தவன் சொன்னான்: "நாளை சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ். பண்டத்தரிப்பில் நடைபெறுகிற இந்திய ராணுவத்தை நாட்டிலிருந்து வெளியேற்றுகிற பகிரங்கக் கூட்டத்திற்கு வர இருக்கிறா. அவவ வரவிடவும் கூடாது. கூட்டமும் நடாத்தக் கூடாது. இது மேலிடத்திலிருந்து வந்த உத்தரவு"

அதற்குத் தோழர் மணியம் கூறினார்: "வருகிறவ இந்த நாட்டு மக்களால் மதிக்கப்படுகின்ற ஒரு தலைவி. வருவதோ இந்த வட மாகாணத்தில் அராஜகம் செய்யும் இந்திய ராணுவத்தை– நாட்டைவிட்டு வெளியேற்றத்தான். அதனால் மக்கள்தான் நிம்மதிப் பெருமூச்சு விடுவர்"

அதற்கு அவன் "எப்படியும் அவள் இஞ்சை வரக்கூடாது. வந்தால் எங்கடை புலி இயக்கத்துக்கு மரியாதை இல்லை" என்று தான் சொன்னதையே திரும்பத் திரும்பக் கூறினான்.

அரச காவற்துறையின் துப்பாக்கிகளையும் அரசியல் எதிரிகளின் கபட நாடகங்களையும் நேரில் சந்தித்து– தான் கொண்ட கொள்கைக்காக– இந்த நாட்டில் மூன்று இனங்களும் சமத்துவமாக வாழவேண்டுமென தான் வகித்த வேலையை உதறிவிட்டு முழுநேர ஊழியனாக– தன்னை அடிமட்ட மக்களின் தொண்டனாக மாற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் மணியம்– உடல்ரீதியாக ஒரு நோயாளி. வயது 57. இனிப்பு நீர் தாக்கத்தினால் உடல் மெலிந்து– தளர்ந்து போன ஒரு உருவம். இருந்த போதிலும்– அவரது மன உறுதியும்– கொண்ட கொள்கைப் பற்றும் அவரை நிதானமாகப் பதிலிறுக்க உற்சாகத்தைக் கொடுத்தது. அவர் "நாளை அதிகாலையில் அம்மையார் யாழ்ப்பாணம் வந்து விடுவார். வரவேண்டாம் என்று அறிவிக்க என்னிடம் தொலைபேசி வசதி கிடையாது. கூட்டம் நடைபெறாதிருக்க வேண்டுமாயின் நீங்கள் என்னைச் சுட்டுவிட்டுப் போங்கள்" என்று மிகக் கடுமையான குரலில்– உறுதிபடக் கூறி விட்டு உட்கார்ந்துவிட்டார். அவர் மிகவும் களைப்படைந்திருந்தார்.

சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்ட வந்தவர்களென்ற பெயரில் வந்தவர்கள் கிராமத்தின் சந்திகளில் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களை மக்களுக்கு வழங்கி அவர்களது அனுதாபமான– அரவணைப்பைப் பெற்றுக்கொண்டிருந்த வேளையில்– மணியம் மாத்திரம் தனது மனைவி மக்களுக்குக் கட்டளையிட்டுவிட்டார். "பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை இந்த மேலாதிக்க வல்லரசின் பிச்சைப் பொட்டலத்துக்காக– எனது நாட்டின் இறைமையை விற்கமாட்டேன்" என்று உறுதிபடக் கூறியவர் நிவாரணப் பொருட்களை வாங்க தனது குடும்பத்தவரை அனுமதிக்கவில்லை. அந்தக் கால கட்டத்தில் இவனது அயலில் வாழ்ந்த ஒலுமடுவில் வாழ்ந்து பின்னர் சுழிபுரத்தில் வந்திருந்த ஒரு வேளாண் மனிதரின் துணைவியார் தனது அயலில் உள்ள அத்தனை குடும்பங்களும் பட்டினிச் சாவிலிருந்து விடுபட ஒவ்வொரு மூடை நெல்லை ஆதரவுடன் வழங்கியிருந்தார்.

இந்திய ராணுவம் உதவி என்ற பெயரில் ஆகாயத்திலிருந்து போட்ட பொதிகளையோ– உள்ளூர் சந்திகளில் முகாமிட்டு வழங்கிய உணவுப் பண்டங்களையோ வாங்க விரும்பாது– பட்டினி கிடந்து செத்தாலும் மானத்துடன் வாழ வேண்டுமென்ற மானஸ்தராக வாழ்ந்த என் அப்பாவை– நான் 5ம் வகுப்பில் படிக்கும்போது 3ம் வகுப்பில் படித்த இந்தச்சின்னவன் தன் கையில் ஏந்திய துப்பாக்கியின் மிடுக்கினால் தானே

இப்படிப் பேசுகின்றான். பொதுவுடமைத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு– தான் பார்த்த வேலையையும் இழந்து– வாலிபத்தின் வசந்தத்தையும் பறிகொடுத்து உரிமை மறுக்கப்பட்ட சாதாரண மக்களுக்காகக் குரல் கொடுத்த தனது உடல்நலத்தையும் அங்கங்களின் பாதுகாப்பையும் இழந்து—பாதி வயதிலேயே சக்கரை வியாதி நோயாளியாகிப் போன எனது அப்பாவை– எந்தவிதமான அரசியல் அறிவோ– மாக்ஸிச சிந்தனையோ சமூக அக்கறையோ இல்லாத ஒரு அரசில் ஞானமற்ற– ஞான சூனியம் 'துப்பாக்கி' என்ற கொலை ஆயுதத்தைக் கையில் தாங்கிய தைரியத்தில் தானே "பொட்டரைப் போட்டதும் நாங்கள்தான். உங்களைச் சுட ஒரு நிமிடம் போதும்" என்றானே... என்பதனை நினைந்து நினைந்து அழும் அவரது ஒரேயொரு மகளுக்கு 4 மாதக் கைக்குழந்தை ஒன்று இருக்கிறது. அந்தக் குழந்தையின் நினைவோ– அதன் பசியின் தாக்கமோ அவளைத் தாக்கவில்லை. தனது அன்புத் தந்தையைக் குடும்ப நலன் துறந்து– ஏழை, எளிய மக்களுக்காகக் குரல் கொடுத்த அந்த மாமனிதனுக்கு முன்னால் துப்பாக்கி காட்ட இவன் யார்? சீனத் தலைவர் கூறிய, "அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலிலிருந்துதான் புறப்படுகிறது" இதனைச் சிந்தித்தாள்.

***

மறுநாட் காலையில் பண்டத்தரிப்பிலுள்ள இந்துக் கல்லூரி முன்பாகவுள்ள மைதானத்தில் "இந்திய ராணுவமே வெளியேறு" என்ற கோஷத்துடன் கூட்டத்திற்கு தந்தையுடன் தானும் புறப்பட்டாள். கைக் குழந்தையை மறந்தே விட்டாள். இப்போது அவள் கண்முன்னால் தெரிவது தன் அப்பா என்ற குழந்தைதான்.

அப்பாவுக்கு எதிராக ஒருவன் துப்பாக்கி நீட்டினால் அந்தச் சூட்டினைத் தான் வாங்கிக் கொண்டு அப்பாவைக் காப்பாற்றி விட வேண்டுமென்ற வைராக்கியத்துடன் புறப்பட்டாள். மனதைக் கல்லாக்கிக் கொண்டாள். தனது கணவனைப்பற்றியோ... குழந்தையைப் பற்றியோ சிந்திக்க அவளால் முடியாது. அவளது மனமெல்லாம் தந்தைதான் நிறைந்திருந்தார். "நீ அங்கு வருவது நல்லாயில்லை" என்று தகப்பனும் தடுக்கவில்லை. மகள் தன்னுடன் வருவது அவரைப் பொறுத்தவரை ஈன்ற அன்னையோ– வளர்த்தெடுத்த அக்காவோ மறுஉருவம் பெற்றதாக நினைத்ததால் நிமிர்ந்து நடந்தார். கூடவே நடந்த அவளோ அப்பாவை இழக்கக்கூடாதென உயிர் காக்கத் துணிந்தாள்.

# பராமரித்தாய்

ஒரு சிறு குழந்தைக்குச் செய்ய வேண்டிய அத்தனை பணி விடைகளும் முடித்துவிட்டாள். கணவனுக்கு கைகள் இரண்டும் வழங்க முடியாத நிலை. வலதுதோள்மூட்டு உடைத்து நொருக்கப்பட்டுவிட்டது. வலது கைமுழுவதும் போலீஸ் தடியடி காயங்களால் ஏற்பட்டு இரத்தக்கண்டல்– கறுத்தநிற வடுக்கள் அந்தக் கையைத் தூக்குத்துணியில் மாட்டி– தோளில் போட்டிருந்தார்கள். இடது கையைத் தலைக்கு மேலாகத் தூக்கி, தூக்கி போலீஸ் தடியடியிலிருந்து தனது தலை சிதறிப்போகாமல் இருக்கத் தடுத்ததன் விளைவுதான் இடது சின்னவிரல் எலும்பு நொருங்கி– சத்திரசிகிச்சை மூலமாக உள்ளே ஒரு நீளமான ஆணிபோன்ற ஒரு கம்பி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வாரங் களின்பின் ‘கிளினிக்’ எனப்படும் பரிசோதனை நாளின் பின்னர் தான் அது அகற்றப்பட்டு மூடித் தைத்த தையல்களை மற்றவர்கள் பார்க்க முடியும்.

இரண்டு கைகளையும் தனது சொந்தத் தேவைக்கே பாவிக்க முடியாத நிலை. 1969ம் ஆண்டு மேமாதம் 1ம் திகதியிலன்று சர்வ தேசங்களும் கொண்டாடப்படும் தொழிலாளர் தினமாகிய ‘மேதினம்’ யாழ்ப்பாணத்தில் நடாத்துவதென அந்த இடதுசாரி இயக்கம்– அதாவது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கெனவே தீர்மானித்து எடுத்த முடிவுதான். அன்று ‘வெசாக்’ எனப்படும் புனித நாளும் வருவதனால் அந்தநாளில் ஊர்வலமோ கூட்டமோ நடாத்துவதற்கு போலீஸ் தரப்பிலிருந்து அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

ஆங்கில ‘மே’ மாதம் 1ம் திகதி தமிழ்ச் சித்திரை மாத 16ம் திகதி வந்துவிட்டது. தமிழ் வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்திலன்று அதாவது வைகாசிப் பூரணையிலன்று தான் புத்த பகவான் ஞானம் பெற்ற நாள். சித்திரை மாதத்துப் பூரணையிலன்று இல்லை. ஆனால், மேமாதம் முதலாம் திகதியிலன்று ‘வெசாக்’ எனப்படும் புனிதநாளிலன்று– இலங்கை நாடு முழுவதும் அரசாங்க வங்கி விடுமுறை. அப்போ யாழ் மாவட்ட பொலீஸ் அத்தியட்சராகக் கடமையாற்றிய சுந்தரலிங்கத்தாருக்கும்

இந்தப் புனிதநாள் உண்மை தெரியும். தமிழ்ச் சித்திரை மாத பூரணையிலன்று விசாக நட்சத்திரம் வருவதனால் 'வெசாக்' பண்டிகை– அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

பொதுவுடமைவாதிகள் ஆண்டாண்டுகாலமாக தொழிலாளர் தினத்தை 'மேதினம்' என்ற ஊர்வலத்துடன் கூடிய கூட்டத்தையும் நடாத்தி அது எப்படி உலகத்தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது என்றும்– சிறப்பாக இலங்கையில் அரசாங்க வங்கி விடுமுறை நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதையும் தெளிவுபடுத்துவர். கடந்த காலங்களில் சிங்கள அறிஞர்களும், தமிழ், முஸ்லீம் அறிஞர்களும் சேர்ந்து முடிவெடுத்தே பாராளுமன்றில் 'மேதின' விடுமுறைநாள் ஆகியது.

முறைப்படி ஊர்வலமோ, பகிரங்க கூட்டமோ நடாத்துவதென்றால் காவல்துறையில் அதாவது போலீசின் அனுமதிபெற்றே நடாத்தப்படல் வேண்டும். கட்சியினர் அனுமதி கேட்டார்கள். போலீஸ் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. வருடம் முழுவதும் இடுப்பொடியக் கூலிவேலை செய்யும் தொழிலாள வர்க்கமும்– நிலத்தை உழுது– பயிர் விதைத்து– அறுவடை செய்யும் விவசாய மக்களும் சேர்ந்து– ஐக்கியப்பட்டுக் கொண்டாடும் ஒரேயொரு தினம் 'மேதினம்' தான். அந்த மக்களின் உணர்வலைகளுக்கு கட்சியும் வாலிப இயக்கமும் ஊக்கமளித்தது.

இந்த அனுமதி மறுப்பு என்ற தடையுத்தரவால் தொழிலாள– விவசாய எழுச்சியுறு இளைஞர்கள் கொதித்தனர். அப்போதிருந்த ஆட்சி அதிகாரத்தையும் எதிர்த்துக் கேட்கக்கூடிய ஒரு குரல் கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். டி. பண்டாரநாயக்கா, இவர்களின் உணர்வுக்கு உரமூட்டுபவராகத் திகழ்ந்தார். அவர்– ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து நேரில் பார்த்து மனம் புழுங்கிப்போன ஒருசில நிகழ்வுகளும்– அவரை இந்த இளைஞர்களுடன் ஒன்றிணைய வைத்தது. "முன்வைத்த காலைப் பின்வைக்கக் கூடாது" என்ற ஊட்டமான ஆலோசனையையும் வழங்கிவந்தார். உற்சாகமூட்டினார். "குட்டக் குட்டக் குனிகிறவன் மூடன்" என்ற தன்னுணர்வு பிறக்கும் ஊக்க வார்த்தைகளை இளைஞர்களுக்குச் சொல்லுவார்.

'சங்கானை' என்ற பட்டின சபைக்குட்பட்டிருந்தது நிச்சாமம் என்ற கிராமம். அங்கு வயலில் உழுதுபயிரிடும் விவசாயக் குடும்பங்கள் பலர் வாழ்ந்தனர். "வலுச்சண்டைக்குப் போக மாட்டோம். வந்த சண்டையை விடவும் மாட்டோம்" என்ற மானஸ்த்தர்களாக வாழ்ந்தவர்கள் அவர்கள். அவர்களது வீடுகள் சில– உயர் சாதிக்காரர்களினால் தீக்கிரை

ஆக்கப்பட்டன. எரியூட்டுச் சம்பவங்களை எஸ்.டி. பண்டார நாயக்க அவர்கள் புத்த மத பிக்குகள் சகிதம் வந்து பார்வையிட்டு– யாழ்ப்பாணத்திலும் புரட்சிகரமாகச் சிந்திக்கக்கூடிய ஒரு இளைஞர் கூட்டம் வளர்ந்து வருவதைச் சகிக்கமுடியாத ஆளும் வர்க்கம் அவர்களது வீடுகளைத் தீக்கிரையாக்குகிறது." என்பதைன சிங்கள மொழிப் பத்திரிகையில் எழுதியதன் மூலம் யாழ்ப்பாண இளைஞர்களுக்கு ஒரு எழுச்சி உணர்வு கொண்ட நம்பிக்கை வளர அத்திவாரமிட்டார்.

இந்தக் காலகட்டத்தில் தான் 1969ம்ஆண்டு "மேதினம்" வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்ததன்படி அன்று மாலை ஐந்துமணிக்குப் பல இளைஞர்கள் யாழ்– வின்சர் தியேட்டர் சந்தியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு யாழ்– முற்றவெளியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். முற்காலத்தில் 'பொன்னம்மா மில்' சந்தியென்று அழைக்கப்படும் இடத்திற்கு அப்பால் போலீசார் நாற்புறத்தாலும் சூழ்ந்து ஊர்வலத்தைச் சிதற அடித்துச் சின்னாபின்னப்படுத்தி—அந்த இடத்தை இரத்தக் காடாக்கி– தமது பதவி உயர்வுக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கும் செயற்திறன் வீரர்களாகக் காட்டப் பாடுபட்டனர்.

உலக வரலாற்றிலேயே 16 மணித்தியால வேலை செய்யமுடியா தென்றும் 8 மணித்தியால வேலைதான் செய்யமுடியுமென்றும் வெள்ளைக்கொடி ஏந்திச்சென்று உரிமைக்குரல் எழுப்பிய தொழிலாள– விவசாயிகள் மீது அதிகாரவர்க்கம் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தி– அவர்களின் கையில் ஏந்திய வெண்கொடி– அவர்களது செங்குருதிபட்டுச் செங்கொடியான வரலாறு– அமெரிக்கச்– சிக்காக்கோ மாநிலத்தில் நடந்து முடிந்து சாதனை படைத்த நினைவுநாளே மே முதலாம் திகதியாகும்.

நாடு வேறு, மொழி வேறு, நிறம் வேறாக இருந்த போதிலும் தொழிலாள உணர்வென்பது கஷ்டப்பட்டு உழைக்கும் வர்க்கத்தின் பொதுவான ஆத்மார்த்த உள்ளுணர்வாகும். அது உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்ட உண்மை.

சிதறடிக்கப்பட்ட இளைஞர்களை போலீசாரே குண்டுக்கட்டாக தூக்கி தமது வாகனங்களில் ஏற்றி யாழ்ப்பாண– போதனா வைத்தியசாலையில் சேர்த்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

காலையில் புறப்பட்டுச் சென்ற கணவன் இரவு பன்னிரண்டு மணியாகியும் வீடுதிரும்பாததால் மணியும், அவளது மூன்று குழந்தை களும் கவலையுடன் வாடகைவீட்டில் தனிய இருந்தனர். குழந்தைகள் நித்திரையாகிவிட அவள் மாத்திரம் தூக்கமின்றி விழித்திருந்தாள். யாரிடம் கேட்பது? ஒருவிதமான தொலைத்தொடர்புகளுமற்ற அந்தக் காலத்தில்

தனிமை– ஏக்கம்– பயம் இப்படியே இருக்க மறுநாள் காலைப்பொழுது புலர்ந்துவிட்டது.

காலை 10.00 மணிக்கு வாலிபர் இயக்கத் தோழரும்– முற்போக்கு எழுத்தாளருமான யோகநாதன் அவ்விடம் வந்தார். அவளது இளைய குழந்தை கீர்த்திக்கு 3 வயது. காண்போரைக் கவரும் வசீகரத் தோற்றமும் சுட்டித்தனமான பேச்சும் கொண்டிருந்த அந்தக் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு "எல்லோரும் வெளிக்கிடுங்கோ. அப்பாவைப் போய்ப் பார்ப்போம்" என்று தான் வந்த வேகத்திலேயே திரும்ப முயற்சிக்கையில் அவரது தோழரான முத்துலிங்கம் என்பவர் ஒரு வாகனத்தில் வந்தார். எல்லோருமாக யாழ்ப்பாண– போதனா வைத்தியசாலைக்குப் போனோம்.

ஐந்து படுக்கைகளில் காயப்பட்டவர்கள். தோழர் மணியம் உடம்பு, முகம் முழுவதும் வீங்கி பார்க்கவே முடியாத ஒரு மாற்றுத் தோற்றத்தில் தென்பட்டார். கதிர்காமநாதன் என்ற தோழர் மாத்திரம் எந்நேரமும் பக்கத்தில் நிற்க அனுமதிக்கப்பட்டாராம். சுற்றிநின்ற தோழர்கள் பேசிக்கொண்டார்கள். இடது கையில் ஒரு விரல் முழுச்சேதமடைந்ததால் 'கழற்றவேண்டும்' வலது தோள்மூட்டுச் சவ்வு முழுவதும் நசுக்கப்பட்டு கையை மேலே தூக்கியெடுக்க முடியாத ஈய்ந்த– நிலையில் இருப்பதனாலும் வலது கையைத் தோள்மூட்டுடன் கழற்றிவிடுவதாக டாக்டர்களின் கூட்டு ஆலோசனையில் முடிவெடுத்திருப்பதாகவும் கூறினார்கள். இந்தச் செய்தி கம்பஹா பாராளுமன்ற உறுப்பினரின் காதில் விழுந்ததனால்போலும் அவர் பாராளுமன்றக் கூட்டத்தில் "இந்த யூ.என்.பி ஆட்சி ஆயுதங்கள் ஏதுமின்றி வந்த மேதின ஊர்வலத்தின் மீது ஆயுதத்தால் தாக்கி உடலுறுப்புகளைச் சேதம் செய்ய அனுமதித்தது எப்படி நியாயமாகும்?" என்று கேள்வி எழுப்பி– அந்த உரிமைக் குரல் பாராளுமன்றப் பதிவேடான 'கன்சாட்'டில் கூட வெளிவந்தது. அதன்பின்னர் வைத்தியசாலை டாக்டர்கள் இரண்டு கைகளையும் சரிப்படுத்துகிற நவீன வைத்திய நுட்பத்துடன் இரண்டு பெரிய ஒப்பிரேஷன்களைச் செய்தார்கள். வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு அனுப்புவதற்கு தோழர்களுக்கு மனமில்லை. கொழும்புக்கு அனுப்புவதென்றால் யாரிடம் அனுப்புவது? "உடம்பின் கண்டலுக்கு– சிங்கள நாட்டு வைத்தியம் தான் சிறந்தது." என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஐரோப்பிய நாடு சென்றிருந்த தோழர் சண்முகதாசன் நாட்டிற்கு வந்துவிட்டாரென்றும் அவர்களது கொள்ளுப்பிட்டி வீட்டில் வைத்து சிங்கள நாட்டு வைத்தியம் செய்விக்கலாமென்றும் அதனையும் கம்பஹா எம்.பி எஸ்.டி. தான்

ஒழுங்குசெய்திருந்தார். அந்த நன்றிக்கடனுக்காக நான் (1969–2012)43 வருடங்களின் பின்னர் அவரது கம்பஹா வீட்டிற்குச் சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு வந்தேன். கிட்டத்தட்ட 100 வயதினை எட்டிக் கண்பார்வை குறைந்திருந்த அவர்—மணியத்தின் மனைவி என்று எமது உரையாடலிலிருந்து அறிந்துகொண்டு பேசினார்.

கொழும்பிலே கொள்ளுப்பிட்டியிலுள்ள தோழர் சண்முகதாசனின் வீட்டில் வைத்து வைத்தியம் செய்த காலத்தில் தனது காலைக் கடன் களையோ– சொந்த தேவைகளையோ செய்ய முடியாத அவருக்கு யாழ்– முஸ்லீம் தோழரான– அன்பொழுக இனிய குரலில்– சிரிப்புடன் கலந்த முகமலர்வும் கொண்ட கன்சூர் என்ற மனிதநேயம் கொண்ட தோழர் மாதக்கணக்கில் அடி விலகாது பராமரித்துக் கொண்டார். அவர் தனது ஒவ்வொரு செயலினாலும் பதறித் துடித்துவிடுவாராம். ஐயோ! என்னைக் கூப்பிட்டால் நான் வரமாட்டேனா? என்று செயலினால் அவரைப் பராமரித்தாராம்.